விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகளுக்கு
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 23 வெள்ளிக்கிழமை (06.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 108

## மகாவலி அதிகார சபைக்குள்ள சிறப்பு அதிகாரத்தால்
# வடக்கில் சிங்கள குடியேற்றம்
# வேகமாக நடைபெறுகின்றது



### தாமதமானால் முல்லை பறிபோகும் வடமாகாண சபையில் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

மகாவலி அதிகார சபைக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தின் ஊடாக வடக்கில் சிங்களக் குடியேற்றங்கள் வேகமாக நடைபெறுகின்றன. புதியதொரு சட்டத்தை மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்ட 13 ஆம் திருத்தச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தயாரித்து ஏற்ற பின்னரே மகாவலி அதிகாரசபை சட்டத்தில் கைவைக்க முடியும். அதற்கிடையில் முல்லைத்தீவை முற்றிலும் தன் வசம் கொண்டு வந்துவிடும் மகாவலி அதிகாரசபை. இது தான் யதார்த்தம். இவ்வாறு முதலமைச்சர் வடமாகாண சபையில் தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

சிங்கள குடியேற்றத்தை எதிர்த்து
### எதிர்வரும் 10ஆம் திகதி முல்லையில் கவனயீர்ப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை கண்டிக்கும் வகையில் வட மாகாண சபையின் 38 உறுப்பினர்களும் எதிர்வரும் 10ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சென்று கவனயீர்ப்பு ஒன்றை செய்வ 23☛

வலிகாமம் வடக்கில்
### இராணுவ வசமுள்ள 650 ஏக்கர் காணி
எதிர்வரும் 16ஆம் திகதி விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இராணுவத்தினரின் வசமுள்ள பொதுமக்களின் காணியில் 650 ஏக்கர் காணியை எதிர்வரும் 16 ஆம் திகதி பொது மக்களின் பாவனைக்காக விடுவிக்கப்படும் என மீள் 23☛

சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
### தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆட்சியை கைப்பற்றியது

(யாழ்ப்பாணம்)

யாழ். சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது.

யாழ். சாவகச்சேரி பிரதேச சபையையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது. 31 உறுப்பினர்களை கொண்ட சாவகச்சேரி பிரதேச சபையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13 உறுப்பினர் 23☛

சிறுப்பிட்டி இராணுவ முகாமுக்குள்
### இளைஞர்களை இராணுவம் அழைத்து சென்றதை கண்களால் கண்டேன்
சிறுப்பிட்டி கொலை வழக்கில் பெண் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி படைமுகாமுக்குள் இளைஞர்கள் இருவரையும் இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர். அதனை என் கண்களால் கண்டேன்.

சிறிது நேரம் அந்த இடத்தில்நின்று பார்த்தேன். எனினும் இளைஞர்கள் இருவரும் வெளியே வரவில்லை.

இவ்வாறு சிறுப்பிட்டி இளைஞர்களைக் கடத்திக் கொலை 23☛

யாழிலிருந்து கொழும்பு
### சென்ற வாகனத்தில் 220 கிலோ கஞ்சா

(கொழும்பு)

சிலாபம் - பாங்கதெனிய பிரதேசத்தில் வாகனமொன்றில் கேரள கஞ்சாவினை கடத்திய 2 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 220 கிலோகிராம் கேரள கஞ்சா இதன் போது பறிமுதல் 23☛

### வெட்கம் இருந்தால் விலகுங்கள்
சுதந்திர கட்சியிடம் ஐ.தே.க

(கொழும்பு)

வெட்க உணர்வு என்ற ஒன்று இருந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும். போக்குவரத்து அமைச்சரான நிமல் சிறிபால டி சில்வா உட்பட சுதந்திரக் கட்சியினர் 23☛

### பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்
ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இலங்கை அரசு வாக்குறுதி



(கொழும்பு)

பங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்என்ற உறுதிமொழியை இலங்கை அரசாங்கம் தமக்கு வழங்கியுள்ளதாக இலங் 23☛

எதிர்வரும் 15ஆம் திகதி வரை
### சூரியன் நேரடியாக உச்சம் கொடுக்கும்

(கொழும்பு)

இலங்கையில் இன்றிலிருந்து புதுவித மாற்றம் ஒன்று நிகழ்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று தொடக்கம் எதிர்வரும் 15ஆம் திகதி வரை இலங்கைக்கு மேலாக 23☛

### தென்னிந்தியத் திரைப்பட நடிகர் கருணாஸ் யாழ்ப்பாணம் விஜயம்
முதலமைச்சரையும் சந்திக்க ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

பிரபல நகைச்சுவை நடிகரும் தமிழக சட்டசபையில் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான கருணாஸ் (கருணாநிதி) யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார். 23☛

### புதிய அரசியலமைப்பில் மத்திய அரசால் மீளப்பெற முடியாத அதிகாரங்கள் வேண்டும்
ஐரோப்பிய எம்.பிகளிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு



(கொழும்பு)

அரசின் சிந்தனையும் நடவடிக்கைகளும் முன்னைய அரசின் நடவடிக்கைகளோடு ஒப்பிடுகையில் சாதகமாக இருந்தாலும், கருமங்கள் மிக மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன. இலங்கை அரசுக்கான சர்வதேசத்தின் ஆதர 23☛

வடக்கையும் கிழக்கையும் துண்டாடுவதற்காகவே
### மணலாற்றில் சிங்கள குடியேற்றங்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன
புள்ளி விபரங்களுடன் மாகாண சபையில் எடுத்துரைப்பு

(கொழும்பு)

தமிழர்களின் தாயக பிரதேசங்களாகிய வடக்கையும் கிழக்கையும் துண்டாடுவதற்காகவே இவ் விரு மாகாணங்களையும் இணைக்கும் மணலாற்று பகுதியில் சிங்கள குடியேற்றங்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான கருவியாக மகாவலி 23☛

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**கோலாசிற்றியில் ஆரம்பம்**

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் (MA)
07-04-2018
சனி–
3.00 PM

வடமாகாண சாரதி தெரிவு வகுப்புக்கள்.
08.04.2018
ஞாயிறு
10 AM

234,
நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.
0778435224
(3534)

# 13இற்கு மேற்பட்ட விகாரைகள் முல்லையில் போருக்கு பின்னர் அத்துமீறி கட்டப்பட்டுள்ளன

## வட மாகாண சபையில் ரவிகரன் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

போருக்கு பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் 13 இற்கு மேற்பட்ட விகாரைகள் அத்துமீறி கட்டப்பட்டுள்ளதாக வட க்கு மாகாண சபையின் உறுப்பினர் துரைரா்சா ரவிகரன் தெரிவித்துள்ளார். மேலும் இந்து ஆலயங்களை இடித்து விட்டு இந்த விகாரைகள் கட்டப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். நேற்றைய தினம் வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் மிக வேகமாக நில ஆக்கிரமிப்புகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார். போர் காலத்தில் ஒரு விகாரையும் இல்லாத இடத்தில் தற்போது விகாரைகள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன. பௌத்தர்கள் இல்லாத பிரதேசத்தில் பௌத்த விகாரைகள் 13 அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் சிங்கள மயமாக்கலை எதிர்த்து ஒருநாள் கவனயீர்ப்பு முன்னெடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவில் கடந்த 8 வருடத்தில் 13 விகாரைகள் கட்டப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.,அது மட்டும் இன்றி கொக்கிளாயில் அம்மன் கோவில் இருந்த இடத்தில் பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, இதன் போது மூன்று கோரிக்கைகளையும் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

**MATHS GROUP CLASSES**
(Through English and Tamil Medium)

தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களிற்கான கணித குழு வகுப்புக்கள்(ஆங்கில தமிழ் மொழி மூலமான) வீடு வந்து திறம்பட பிரபல தேசிய பாடசாலை ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.

**தொடர்பு:-0774540529**
(யாழ்ப்பாணம்-மல்லாகம் எல்லைக்குட்பட்டவர்கள்)
Note:- கடந்த 2017 G.C.E O/Lல் 16 மாணவர்களில் (Maths English medium) 11மாணவர்கள் A சித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது.
(3532)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## கிளி/விவேகானந்த வித்தியாலயம்







திரு.கந்தவனம் செல்வராசா கல்விமாணி (B.Ed) | திருமதி சியாமளா ரூபகாந்தன் கல்விமாணி (B.Ed) | திருமதி குலமகள் ராதா புவனேந்திரன் (டிப்ளோமா)

எமது பாடசாலை ஆசிரியர்கள் கடந்த (28.03.2018) புதன்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணி (B.Ed) டிப்ளோமா பட்டத்தைப் பெற்றமையினைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்கள் மேலும் மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற்று நீடூழி வாழவும் வாழ்த்துகின்றோம்.

**நலன்புரிச் சங்கம், அதிபர், ஆசிரியர்கள்**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு.பரஞ்சோதி சசிதரன்

கிளி/முருகானந்தா கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றும் திரு.பரஞ்சோதி சசிதரன் அவர்கள் கடந்த 28.03.2018 அன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் "கல்வி இளமாணி" பட்டத்தினைப் பெற்றமையையிட்டு எமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Best Wishes

**ஆசிரியர் ஊழியர் நலன்புரிக் கழகம்**
**கிளி/முருகானந்தா கல்லூரி**

(C-2134)

# கிளி/இராமகிருஸ்ண வித்தியாலயம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.பங்கிராஸ் ஜோயல்பியசீலன்

கடந்த 2018.03.28ஆம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கல்விமாணிப்பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட எமது பாடசாலை அதிபர் திரு.ப.ஜோயல்பியசீலன் அவர்களையும், ஆசிரியர் திருமதி றோசபெல் ஜெயந்தி செல்வராசா அவர்களையும், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் 01.04.2018 அன்று கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட திருமதி விஜயராணி மயில்வாகனம் அவர்களையும் மனதாறப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



திருமதி றோசபெல் ஜெயந்தி செல்வராசா



திருமதி விஜயராணி மயில்வாகனம்

(கி-2136)

பாடசாலைச் சமூகம்
கிளி/இராமகிருஸ்ண வித்தியாலயம்
கிருஸ்ணபுரம், கிளிநொச்சி.

# 1ஆம் ஆண்டு நினைவலையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம் 18 - 05 - 1936



மறைவு 19 - 03 - 2017

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

## அமரர் செல்வரட்ணராஜா லீலாவதி

ஆண்டொன்று ஆனதென்று அறிவு எமக்கு கூறுகிறது
உண்மைதானா இதுவென்று எம் உள்ளுணர்வு மறுக்கிறது
கண்மூடித்திறப்பதற்குள் எல்லாம் கனவு போல்தான் தெரிகிறது
கனவாகி விடாதா என்று எம் நனவு மனம் ஏங்குகிறது
தாயே உம் இழப்பு நம்மையெல்லாம் உருக்குலைய வைத்ததம்மா
அன்பு கொண்ட உம் வதனம் என்றும் எம்மோடு இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்! எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது அம்மா உங்கள் நினைவு எம் நெஞ்சோடு...

கடந்த 19.03.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு அமரர் செல்வரட்ணராஜா லீலாவதி அவர்களின் 1ஆம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை (திவசம்) நாளை 07.04.2018 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும். எனவே அந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாகலிங்க முதலியார் வீதி,
பருத்தித்துறை.

-குடும்பத்தினர்
T.P.No:0771881578

(C-2128)

## ஆக்கிரமித்து வைத்துள்ள 530 ஏக்கர் காணியை விடுவித்து

# வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற

# 880 மில்லியன் ரூபாய் நிதி கோரல்

## அமைச்சரவைப் பத்திரங்களை தாக்கல் செய்ய மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இராணுவத்தின் வசமுள்ள 530 ஏக்கர் காணிகளில் இருந்து இராணுவம் வெளியேறுவதற்கு 880 மில்லியன் ரூபாய் நிதி கோரியுள்ள நிலையில் அதனை கொடுத்து அக் காணிகளை மீட்பதற்கு அமைச்சரவைப் பத்திரங்களை தமது அமைச்சு தயாரித்து வருவதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் பொன்னையா சுரேஸ் தெரிவித்துள்ளார். (17ஆம் பக்கம் பார்க்க...)

## நல்லாட்சிக்கு எதிரானவர்களை துரத்துவோம்

## ருவான் எச்சரிக்கை



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுபவர்களை அடையாளம் கண்டுகொண்டதாகவும் அவர்களை வெளியேற்றி விட்டு உண்மையான உறுப்பினர்களுடன் ஆட்சியை கொண்டு செல்வோம் என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் கருத்துரைத்த இராஜாங்க அமைச்சர் இவ்வாறு எச்சரித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "நாம் குறிப்பிட்டதைப் போன்றே நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்து விட்டோம்.

இரு பகுதிகளிலுமுள்ள அரசாங்க எதிர்ப்பாளர்களை இன்று அடையாளம் கண்டுவிட்டோம். அவர்களை துரத்தி விட்டு, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான உறுப்பினர்களுடன் நல்லாட்சி அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கபீர் ஹாஷீம் இராஜினாமா!



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாஷீம், தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். இது தொடர்பிலான கடிதத்தை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் மறுசீரமைப்பு குழுவின் யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளித்தே தான் இந்த தீர்மானத்தை மேற்கொண்டதாக அமைச்சர் கபீர் ஹாஷீம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பிரதி சபாநாயகர் சுமதிபாலவிற்கு எதிராக ஐ.தே.கவால் நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபாலவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியால் குறித்த பிரேரணை கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால நடந்துகொண்ட விதம் ஏற்றுக்கொள்ள முடியாதது என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பிரதி சபாநாயகர் பக்கச்சார்பற்ற முறையில் நடந்து கொண்டிருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின் போது அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## காட்டிக்கொடுத்து விட்டார் மைத்திரி டுவிட்டரில் புலம்பித்தள்ளிய நாமல்

Namal Rajapaksa @RajapaksaNamal · 12h
#SriLanka President @MaithripalaS's habit of betrayal proven again at #NoConfidenceMotionSL against Prime Minister @RW_UNP. First he encourag SLFP members to support it and then backs off. He has betrayed both the SLFP UNP.

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காட்டிக்கொடுக்கும் தனது பழக்கத்தை நேற்று முன்தினம் மறுபடியும் உறுதிப்படுத்தியதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத்தீர்மானம் நேற்று முன்தினம் 46 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இது தொடர்பில் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டிருக்கும் நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காட்டிக்கொடுக்கும் பழக்கத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் ஊடாக மறுபடியும் நிரூபித்து விட்டார்.

இந்தப் பிரேரணைக்கு ஒத்துழைக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களைத் தூண்டிவிட்டு பின்னர் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி மாற்றிக்கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியையும், சுதந்திரக் கட்சியையும் ஜனாதிபதி காட்டிக்கொடுத்து விட்டார் என்று நாமல் எம்.பி கூறியுள்ளார். (இ-7)

## பிரதி சபாநாயகர் சுமதிபால மீது அமைச்சர் நவீன் தாக்க முயற்சி



(கொழும்பு)

அமைச்சர் நவீன் திஸாநாயக்க தம்மை தாக்குவதற்கு முயற்சித்தார் என பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால குற்றம் சுமத்தியுள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பிலான வாக்கெடுப்பு நடத்தப்பட்டதன் பின்னர் இந்த சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பின் பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து, நவீன் திஸாநாயக்க தம்மை தாக்க முயற்சித்தார் என திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

தகாத வார்த்தைகளால் திட்டி தம்மை தாக்குவதற்கு நவீன் முயற்சித்தார் என தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் திலங்க சுமதிபால பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன், சபாநாயகரிடமும் இது குறித்து முறைப்பாடு செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜூலை 3 வரை கோத்தாவில் கை வைக்க முடியாது



(கொழும்பு)

பொதுவுடமைகள் சட்டத்தின் கீழ் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்வதற்காக விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி வரை கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி பிரீதி பத்மன் சுரசேன மற்றும் சிரான் குணரத்ன ஆகியோர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

எனினும் அவருக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்வதற்கு இந்த தடையுத்தரவு இடையூறாக இருக்காது என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

டீ.ஏ. ராஜபக்ஷ ஞாபகார்த்த அருங்காட்சியகத்தை நிர்மாணிக்க அரசாங்கத்தின் நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக, பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் கொழும்பு நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 'பைசைக்கிள்' கோல் அடித்த ரொனால்டோ

யுவன்டஸ் அணிக்கு எதிராக 'பைசைக்கிள்' கிக் மூலம் அடித்த கோல் என் வாழ்க்கையின் சிறந்தது. எதிரணி ரசிகர்கள் எழுந்து நின்று பாராட்டிய தருணம் மறக்க முடியாதது, என ரொனால்டோ தெரிவித்தார்.

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் 'நொக் அவுட்' போட்டிகள் தற்போது நடக்கின்றன. இத்தாலியில் நடந்த காலிறுதி முதல் சுற்றில், கடந்த ஆண்டு இறுதியில் மோதிய ரியல் மட்ரிட், யுவன்டஸ் அணிகள் மோதின. 'நடப்பு சம்பியன்' ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடிய போர்த்துக்கலின் கிறிஸ்டியானோ ரொனால்டோ, 3ஆவது நிமிடம் ஒரு கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய இவர், 64ஆவது நிமிடத்தில், கால்பந்து உலகை வியக்க வைத்தார். தரையில் இருந்து 7.1 அடி அந்தரத்தில் உயர்ந்த இவர், அப்படியே 'பைசைக்கிள் கிக்' மூலம் கோல் அடித்தார். இதனை, எதிரணியான யுவன்டஸ் ரசிகர்கள் உட்பட எல்லோரும் பாராட்டுகின்றனர்.

இதுகுறித்து ரொனால்டோ கூறியது,

யுவன்டஸ் அணிக்கு எதிராக அடித்த கோல் வியக்கத்தக்கது. தரையில் இருந்து அதிக அளவு உயரத்தில் சென்று அடித்த கோல் என்பதால், இது எனது மனதில் என்றும் நிலைத்து நிற்கும். தவிர, எனது கால்பந்து வரலாற்றில், சிறந்த கோல் இதுதான் என்றார்.

## அறிவித்தல்

கிளி/முருகானந்தா கல்லூரியில் 2017ம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் 2018.04.08 அன்று மு.ப 9 மணிக்கு பாடசாலைக்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்றைய தினம் பாடத் தெரிவு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அதிபர்
கிளி/முருகானந்தா கல்லூரி

(C-2138)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

இடம் : கிளி/முருகானந்தா கல்லூரி பிரதான மண்டபம்
காலம் : 2018.04.08
நேரம் : மு.ப 10.30

மேற்படி பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


குறிப்பு: இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தலைவர், பழைய மாணவர் சங்கம்
கிளி/முருகானந்தா கல்லூரி, முரசுமோட்டை.

(C-2137)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





பிரதி அதிபர்
திரு.ம.கருணாமூர்த்தி
B.Ed Science 2nd upper
(N.D.T, SLPS - 3)

Best Wishes

ஆசிரியர்
திரு.பா.கிரிசங்கர்
B.Ed Commerce 2nd Lower
(N.D.T, BA)

28.03.2018 அன்று தேசிய கல்வி நிறுவகத்தால் BMICH இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணி பட்டத்தைப் பெற்ற எமது கழக அங்கத்தவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி

(3527)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
**ஞானலட்சுமி ஜெயபாலன்**
(Spe.Trd.Maths, B.Ed)

திருமதி ஞானலட்சுமி ஜெயபாலன் (B.Ed) 28.03.2018 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணி (B.Ed) பட்டத்தைப் பெற்றமையையிட்டு வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களையும் பதவியுயர்வுகளையும் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

பாடசாலைச் சமூகம், யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்

(3526)

# மரண அறிவித்தல்



## திருமதி
## கமலாம்பிகை நடரர்சா
## (காரைநகர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் முல்லைப்பிலவு, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை நடராசா நேற்று (05.04.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் (இளைப்பாறிய வங்கி முகாமையாளர்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, மகாதேவன் மற்றும் கதிரவேலு ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கணநாதன், கலாதேவி, சிவநாதன், காலஞ்சென்ற செந்தில்நாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலாம்பிகை, செல்வராசா, மதிவதனி ஆகியோரின் அன்பு மாமியும் கஜரூபன், திவாகரன், தர்ஷிகா, கிருஷ்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அம்பிகை, பாலசுப்பிரமணியம், திருநாவுக்கரசு மற்றும் நல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


முல்லைப்பிலவு,
காரைநகர். 077 224 7641

தகவல்:
குடும்பத்தினர்

(C-2139)

# துரோகிகள் தோற்கடிப்பு ரணிலுக்கு இறுதி சந்தர்ப்பம்

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



(கொழும்பு)

அவநம்பிக்கை பிரேரணையின் மூலம் துரோகிகள் தோற்கடிக்கப்பட்டாலும், பிரதமருக்கு கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும் என்று இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதான அவநம்பிக்கை தோற்கடிக்கப்பட்டமை தொடர்பாக அவரது ஊடகப்பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பிரதமருக்கு கிடைத்துள்ள இறுதி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்வரும் இரண்டு வருட காலத்தில் மக்களுக்கான தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்தால் அடுத்த தேர்தலை மிகவும் மன உறுதியுடன் சந்திக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களாக எதிர்க்கட்சிகளால் இந்த நாட்டு மக்களை ஏமாற்றுவதற்கு போடப்பட்ட நாடகம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனை இன்னும் ஒரு தொலைக்காட்சி தொடரைப் போலவே மக்கள் பார்த்திருக்கின்றார்கள்.

இதனால் காலம், நேரம் வீணடிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பிரதமர் நிலையான ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்தி மக்களுக்கான செயற்றிட்டங்களை அமுல்படுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்த அணிக்கு மங்கள நன்றி



(கொழும்பு)

நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்த தன் மூலம் பிரதமர் மீதான நம்பிக்கையை பலப்படுத்த உதவிய மகிந்த ஆதரவு ஒன்றிணைந்த எதிரணியினருக்கு நன்றி தெரிவிப்பதாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அரசாங்கத்தில் இருந்துகொண்டு ஒன்றிணைந்த எதிரணிக்கு ஆதரவாக வாக்களித்தவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக அமைச்சர் மங்கள தெரிவித்தார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர், நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுவொரு புதிய அத்தியாயம் எனக் குறிப்பிட்ட மங்கள சமரவீர, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் பாதுகாத்துக் கொண்டு புதிய பாதையில் பயணிப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளதென மேலும் தெரிவித்தார். (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

# முதலாம் ஆண்டு நினைவுகள்...

யாழ். நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட



தோற்றம் 20 - 04 - 1935

மறைவு 06 - 04 - 2017

அமரர். திரு.

## வைரமுத்து வேலாயுதபிள்ளை

[ஓய்வு பெற்ற அதிபர்]

அன்புள்ள அப்பா, நீங்கள் எமைப்பிரிந்து
ஆண்டொன்று ஆனதோ! காலம் உமை வென்றதோ!
நித்தம் வாழ்வில் மகிழ்ந்து, எமையும் மகிழ்வித்து
இதுதான் மகிழ்ச்சி, இதுவே வாழ்வியல்,
மனிதவாழ்வின் அடிப்படை இதுவேயென
எமக்குரைத்து வாழ்ந்தீர்களே அப்பா!
உறவுகளே சொத்து, உணர்வுகளே வாழ்க்கையென
பிரிவில்லா உறவுடனும் உற்றத்துடனும் அறத்துடனும்
கடைசிவரை வாழ்ந்தீர்களே அப்பா! இன்று
எம்மெல்லோர் மனதிலும் வாழ்ந்து
கொண்டிக்கிறீர்கள்.
இருப்பினும் உங்களின் அந்த மகிழ்ச்சி, நெகிழ்ச்சி,
அளவளாவல், நகைச்சுவை வெற்றிடமாகவே உள்ளது.
அந்த அற்புதமான தருணங்கள் இன்று
எம்மனதில் தோன்றாத நாளில்லை.
'எப்போதும் இயல்பாகவே இரு' என
எமக்கு வாழ்வியல் சொல்லித்தந்தவரே!
அப்பாவாகவும் ஆசானாகவும் எமக்கூட்டியதைவிட
ஓர் உற்ற நண்பனாக எம்மிடம் பகிர்ந்தவையே அதிகம்.

வாழ்வு என்பது ஒருமுறைதான், அதிலும்
உறவுகளும் உணர்வுகளும்தான்
உச்சம் என்பதை எமக்குரைத்து வாழ்ந்தும்
காட்டினீர்களே! அப்பா!
வாழ்வில் ஒருவன் அறம்சார்ந்து
வாழ்ந்தானா?
தன் சமூகத்திற்கும் வாழ்வைப்
பகிர்ந்தானா? அதுவே
அவன் வாழ்வின் பின்னரும் நிலை
யானது என்பதை
உணர்த்தி வாழ்ந்தீர்களே அப்பா!
உங்கள் பிரிவு எமக்கு அளப்பரிய இழப்பப்பா!
தாங்கொணாத்துயரம், அந்த வெற்றிடம்
நிரப்பப்படவே முடியாதது!
இருப்பினும், உங்களின் அந்த
நினைவுகளும், விட்டுச்சென்ற
வாழ்வியல் வழிகளும் எமை முன்செலுத்தும்.
"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"

அப்பா!
உங்களின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கிறோம்!

(3525) மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்.

## இராசி பலன்

**மீனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் ஏற்படலாம், தேவைக்கேற்ப பணம் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**இடபம்:** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், வெளியூர்ப் பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், விருந்தினர் வருகையுண்டு.

**கும்பம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | சுக் | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | | | |
| சனி, செவ் | குரு, சந் | | |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை
பகல் 1.15 மணிக்கு
தனு-சந்

**06.04.2018**

பங்குனி 23, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 10.11 மணிவரை
கேட்டை பிற்பகல் 12.48 மணிவரை
சுபநேரம் 6.08-7.38 மணிவரை
இராகுகாலம் 10.38-12.08 மணிவரை

வளவன்

**கடகம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையை இன்று செய்து முடிப்பீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும்.

**மகரம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் வழியில் பெருமைகள் கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்:** அனைத்திலும் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், போசன சுகமுண்டு.

**துலாம்:** உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம், நல்லவர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கன்னி:** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், பயணங்களால் பலனுண்டு.

# பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம்,கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட பின்வரும் சான்றுப்பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 2 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும்படி குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 431(2)ன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

வழக்கு இல-BR/1239/PC/16,MC/2064/PC/17, சான்றுப்பொருள் இல- PR/429/16, விபரம்-697428 31 இலக்க துவிச்சக்கர வண்டி-01,

வழக்கு இல-BR/420/MT/17,MC/2073/MT/17, சான்றுப்பொருள் இல- PR/298/17,விபரம்-5786446 இலக்க துவிச்சக்கரவண்டி-01,மறுதவணை-01.06.2018.

வழக்கு இல-AR/126/18, சான்றுப்பொருள் இல-PR/656/17, விபரம்-NPTU 7010 இலக்க CBZ வர்க்க மோட்டார் சைக்கிள். மறுதவணை-07.06.2018.

வழக்கு இல-BR/472/PC/17,MC/2770/PC/17,சான்றுப்பொருள் இல- PR/772/17,விபரம்-1)35575808 4119357 இமி இலக்கமுடைய கையடக்க தொலைபேசி-01

2) 3316520683178 46 இமி இலக்கமுடையசம்சுன் கையடக்க தொலைபேசி -01

3) 354312056635 619 இலக்க சம்சுன் வர்க்க கையடக்க தொலைபேசி-01.

4) 354682078531 321 இமி இலக்கமுடையவிகோ வர்க்ககையடக்கதொலைபேசி.

5) FesTINA வர்க்க கைக் கடிகாரம்-01.

6) Mike வர்க்க கைக்கடிகாரம்-01.

வழக்கு இல-BR/156/PC/17,MC/311/S/18, சான்றுப் பொருள் இல- PR/315/17, விபரம்-358893072825025 இமி இலக்கமுடைய கையடக்க தொலைபேசி-01.

வழக்கு இல-BR/330/MT/16,MC/4690/MT/16, சான்றுப்பொருள் இல- PR/191/16,விபரம்-NPPS 5379 இலக்க டிமோ பட்டா வாகனம், மறுதவணை-11.06.2018.

வழக்கு இல-MC/550/S/18,சான்றுப்பொருள் இல-PR/266/16,விபரம்-SR 585943 இலக்கதுவிச்சக்கர வண்டி-01.

வழக்கு இல-BR/539/MT/16,MC/420/MT/17, சான்றுப்பொருள் இல- PR/49/16, விபரம்-1) 55920079 இலக்க துவிச்சக்கர வண்டி-01.

2) WPMQ 8285 இலக்க HERO HONDA வர்க்க மோட்டார்சைக்கிள்-01,அதன் உடைந்த பாகங்கள், மறுதவணை-12.06.2018.

வழக்கு இல- AR /1414/16,சான்றுப்பொருள் இல-PR/409/16,விபரம்-NPBAE 0651இலக்க மோட்டார்சைக்கிள்-01,மறுதவணை- 01.06.2018.

வழக்கு இல-BR /965/ S/17,MC/3597/S/17,சான்றுப் பொருள் இல- PR/1518/17, விபரம்-இலக்கமற்ற உழவு இயந்திரப் பெட்டி-01.

வழக்கு இல-BR/1067/PC/17,MC/763/PC/18, சான்றுப்பொருள் இல- PR/795/17, விபரம்-NPWK 2569 இலக்க ஸ்கூட்டி வர்க்க மோட்டார் சைக்கிள்-01.

வழக்கு இல-BR/451/11, 23804,சான்றுப்பொருள் இல-PR/117/11,விபரம்-NPJU 0982 இலக்கமுச்சக்கரவண்டி-01.

வழக்கு இல-BR/401/PC/17,MC/1098/PC/17, சான்றுப்பொருள் இல- PR/562/17,விபரம்-P1-69916561 இலக்க துவிச்சக்கரவண்டி-01, P2-69859083 இலக்க துவிச்சக்கர வண்டி-01, மறுதவணை-11.06.2018.

வழக்கு இல-BR/934/14, 38114,சான்றுப்பொருள் இல-PR/10/14,விபரம்-353097/04/518926/2 இமி இலக்க கையடக்க தொலைபேசி-01,மறுதவணை-12.06.2018.

வழக்கு இல-BR/1231/PC/16,MC/102/PC/18, சான்றுப் பொருள் இல- PR/110/16, விபரம்-351672/05/648195/8இமி இலக்க கையடக்க தொலைபேசி-01, சான்றுப் பொருள் இல- PR/105/16, விபரம்-50/-காட்-02, 99/-காட்-01,சான்றுப்பொருள் இல- PR/106/16,விபரம்-50/-காட்-09, 91055650387 6862 இமி இலக்க கையடக்க தொலைபேசி-01, சான்றுப் பொருள் இல- PR/107/16, விபரம்-354453/07/425291/02 இமி இலக்க கையடக்க தொலைபேசி-01, சான்றுப்பொருள் இல- PR/108/16, விபரம்-353424/07/087363/8 இமி இலக்க கையடக்கதொலைபேசி-01,சான்றுப் பொருள் இல- PR/109/16, விபரம்-865900025610267 இமி இலக்க கையடக்க தொலைபேசி-01, சான்றுப் பொருள் இல- PR/111/16, விபரம்-867361019322411 இமி இலக்க கையடக்க தொலைபேசி-01,சான்றுப்பொருள் இல- PR/112/16,விபரம்-866592017183673 இமி இலக்க கையடக்க தொலைபேசி-01,சான்றுப்பொருள் இல-PR/113/16,விபரம்-T 6302723/4 ASAT24 இமி இலக்க கையடக்க தொலைபேசி-01,சான்றுப்பொருள் இல-PR/114/16,விபரம்-PEL-சி66 வர்க்க சிவப்பு கறுப்பு நிற கையடக்க தொலைபேசி-01, சான்றுப்பொருள் இல- PR/115/16,விபரம்-911324056166562 இமி இலக்க கையடக்க தொலைபேசி-01, சான்றுப்பொருள் இல- PR/116/16, விபரம்-Nikon COOLPIXS-2900 வர்க்க டிஜிற்றல் கமரா-01, சான்றுப்பொருள் இல-PR/117/16,விபரம்-Nikon COOLPIXS-2900 வர்க்க 90038462 இலக்க டிஜிற்றல் கமரா-01, மறுதவணை-11.06.2018, மன்றின் கட்டளைப்படி பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

# பங்குச் சந்தையுடன் ஒருநாள் கல்விப் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

தொழில் முயற்சியின் ஓர் பகுதியான பங்குச் சந்தை முதலீடுகளை நாம் வெகுமதியான முதலீடு மற்றும் வளர்ச்சி முதலீடு ஆகிய இரண்டு முறைகளில் அணுக முடியும்.

இவ்விரண்டுஅணுகுமுறைகளும் முதலீட்டாளர்களுக்கு பங்குச் சந்தை முதலீடுகள் மீதான நம்பிக்கையினை வளர்த்துக் கொள்ள உதவுவதுடன் முதலீட்டுப் பயணத்தின் வெற்றிக்கும்உறுதுணையாக அமைகின்றது.

இவ்வாறான அணுகு முறைகளைப் பயன்படுத்தி ஒருவர் எவ்வாறு வீட்டில் இருந்தவாறு பங்குச் சந்தையில் முதலீடு செய்யலாம் மற்றும் அவற்றில் உள்ள நுணுக்கங்கள் எவை? அவற்றின் முக்கியத்துவங்கள் தொடர்பாக மிகவும் எளிமையான, பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் கருத்தரங்கு தமிழ் மொழியில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்புபங்குப்பரிவர்த்தனை யாழ்.கிளையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் முதலீட்டிற்கான அடிப்படைகள் மற்றும் முதலீட்டு உத்திகள் தொடர்பாக நுணுக்கமாக ஆரம்பத்தில் இருந்து கலந்துரையாடப்படும்.

முதலீட்டு ஆர்வலர்கள் 7ஆம் திகதி மற்றும் 21ஆம் திகதிகளில் சனிக்கிழமை நடைபெறும் கருத்தரங்கிற்கு 077 7822014 இலக்கத்தின் ஊடாக பதிவு செய்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சிறந்த நூற்பரிசுத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் சிறந்த நூற்பரிசுத்தேர்வு-2018இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் 2017ஆம் ஆண்டு வலி. தென் மேற்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட எழுத்தாளர்களால் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் ஏதும் காணப்படின் அவற்றில் 4 பிரதிகளை எதிர்வரும் 15.04.2018 ஆம் திகதிக்கு முன்னர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களுக்கு வலி.தென்மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# கந்தபுராண வாராந்த அருளுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தவால் "கந்தபுராணம்" வாராந்த அருளுரை இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள "சின்மய ஞான வேல்" ஆச்சிரமத்தில் நடைபெற்று வருகின்றது. (இ-7)

# மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கைதடி தென் கிழக்கு உவரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் விநாயகர் விளையாட்டுக்கழகமைதானத்தில் உவரி மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் திருமதி மு.குகனேஸ்வரி தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமானமாவைசேனாதிராசா, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.சதீஸ்வரன், கைதடி விக்னேஸ்வர வித்தியாலய உப அதிபர் திருமதி கி.சிவலோயினி, கௌரவ விருந்தினர்களாக கைதடி தெற்கு கிராம உத்தியோகத்தர் சிவகுமார சர்மா, கைதடி தெற்கு சமுர்த்தி உத்தியோகத்தர் ப.துசீபன், கைதடி தென்கிழக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் நஜீவா சுரேஸ்குமார், கைதடி தென் கிழக்கு சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி இந்துமதி, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.ஞானகி, விநாயகர் சனசமூக நிலைய செயலாளர் நி.ஹரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)




# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சமூக சேவா சங்க பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பாலர் பகல் விடுதி விளையாட்டு மைதானத்தில் சமாதான நீதவான் க.பரமானந்தராசா தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் விருந்தினராக வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கலந்து கொள்வார். (இ)

# தையல் போதனாசிரியர்களுக்கு நியமனம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் புதிய தையல் போதனாசிரியர்கள் ஐவருக்கு நியமனக் கடிதங்களை வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே நேற்று முன் தினம் வழங்கினார்.

யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் காலை 8.30 மணியளவில் நடைபெற்ற நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், முதலமைச்சரின் அமைச்சு செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், கிராம அபிவிருத்தி திணைக்கள பதில் பணிப்பாளர் நளாயினி இன்பராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9-60)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் இளங்கலைஞர்களுக்கான ஊக்குவிப்பு பரிசு-2018 இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 40 வயதுக்கு உட்பட்ட கலைத்துறைக்கு அளப்பெரிய சேவையாற்றிய கலைஞர்கள் தமது பெயர் மற்றும் கலைச்சேவைக்கு ஆற்றிய விபரங்களினை நல்லூர் பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் 20.04.2018 இற்கு முன்பாக சமர்ப்பிக்கும்படி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (இ)

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் முதலமைச்சர் விருது-2018 இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட கலைத்துறைக்கு அளப்பெரிய சேவையாற்றிய கலைஞர் தனது பெயர் மற்றும் கலைச் சேவைக்கு ஆற்றிய விபரங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் 20.04.2018 இற்கு முன்பாக சமர்ப்பிக்கும்படி பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (இ)

# க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்

**யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை**

உ.லுஸ்மினா-3ஏபி5சி, வி.சயந்தன்-2ஏ3பி4சி, ப.துர்க்கிகா-ஏபி3சி4எஸ், த.பானுசியா-ஏ2பி4சிஎஸ், சு.ஜெனுசன்-ஏ3பி2சி2எஸ், ஜெ.பானுஜன்-2பி4சி2எஸ், ஜே.சிந்துஜன்-3சி5எஸ், பா.ரதுர்சிகா-2பி4சிஎஸ், கு.விஜோஜன்-2ஏ2பி2சி, ச.மகீஸ்வரன்-2பி2சி3எஸ், வ.துஜன்சன்-2ஏ3பி2சி.

**யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்**

ஆர்.வைஸ்ணவி-7ஏபிசி, எஸ்.மேதிகா-6ஏ2பிஎஸ், ரி.நிக்தா-5ஏ2பி3எஸ், எஸ்.பிரசாந்-4ஏ3பிசி, எஸ்.தமிழ்விழி-4ஏ2பி3சி, ரி.பயன்சன்-4ஏ2பி2சி, பி.சியாணி-3ஏ4பிசி, என்.ஆர்த்திகா-3ஏ2பி2சிஎஸ், ரி.மதுரா-3ஏபி3சிஎஸ், எஸ்.பிரியா-3ஏ5சிஎஸ், ரி.மதுஷா-3ஏ3சி2எஸ், ரி.நவீன்-2ஏ3பி2சி2எஸ், எஸ்.விதுர்சனா-2ஏ2பி3சி2எஸ், எஸ்.சிந்துஜா-2ஏபி3சி3எஸ், ஆர்.டன்சிகா-ஏ3பி2சி2எஸ், கே.கபுட்சனா-ஏ3பி4சி, ஜே.மிதுசிகா-ஏ2பி3சிஎஸ், ஆர்.பர்சி-ஏபி4சிஎஸ், எஸ்.அனுசன்-3பி3சி2எஸ், ரி.சயந்தன்-2பி4சிஎஸ், எஸ்.பேரலதா சர்மா-பி3சி2எஸ், ஜே.ஜசிந்தா-பி3சி2எஸ், எஸ்.கயானி-பி2சி5எஸ், ஜே.சுபிஜன்-பி2சி5எஸ், எஸ்.கயானி-பி2சி3எஸ், கே.தேனுகன்-4சி4எஸ், வி.கேசனா-4சி3எஸ், பி.ரஜீந்தன்-3சி5எஸ், எஸ்.அனிதா-3சி4எஸ், ஜீ.டிலக்ஷியா-3சி3எஸ்.

**யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்**

செ.நிலக்ஷன்-7ஏபிசி, ந.சுஜீவன்-6ஏ2பிஎஸ், வி.அபிவேக்-5ஏ3பிசி, க.அனிஸ்ரன்-5ஏ2பிசிஎஸ், கி.சிந்துஜா-2ஏ3பி3சி, ம.மதுஷனா-2ஏபி2சி3எஸ், ம.டிலக்ஷனா-2ஏ3பி3சி, பா.மிதுனராஜா-ஏ2பி5சிஎஸ், சா.விதுரன்-ஏ5சி, ம.ஜதுர்ஷா-4பி2சி2எஸ், ச.காவேரி-4பி4எஸ், ச.லேபிகா-3பி5எஸ், சி.விந்தியாசாலினி-2பி6சி, த.விந்துஜா-2பி4சி2எஸ், கு.சானுஜா-2பி3சி3எஸ், கி.நிவ்யா-பி4சி3எஸ், வி.சிந்துஜா-பி2சி4எஸ், பி.ருசிந்தன்-5சி3எஸ்.

**யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை**

சு.சரண்யா-7ஏபிஎஸ், து.மேலாஜனா-7ஏசிஎஸ், பி.கில்பா-6ஏபிசி, ற.ஆர்த்திகா-5ஏ2பிசிஎஸ், இ.அபிரனா-5ஏ2பிசிஎஸ், ஜெ.ஜீவிதா-5ஏ2பிசிஎஸ், கு.சிலோகா-5ஏபி3சி, ஜெ.சியானுகா-5ஏபி3சி, ந.கிருசிகா-5ஏபி2சிஎஸ், ச.சசிகலா-5ஏ2சிஎஸ், உ.சுவர்சிகா-4ஏபி3சி, ரா.ஹரணி-4ஏ2பி2சிஎஸ், அ.விஜுசிகா-3ஏபி5சி, றெ.கிறிஸ்ராமேரி-3ஏபி5சி.

**யா/நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயம்**

நா.கனித்தா-ஏபி2சி3எஸ், யோ.நிருபரன்-ஏபிசி3எஸ், வ.விந்தியா-ஏபிசி3எஸ், ம.தினேஸ்வரன்-2பி6சி, கு.சாருஜா-பி5சிஎஸ், ர.நிதர்சினி-பி2சி4எஸ்.

TENDER NOTICE
GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
MINISTRY OF PORTS AND HIGHWAYS
ROAD DEVELOPMENT AUTHORITY JAFFNA

WORKS UNDER MAINTENANCE VOTE UNDER GOSL FUND

INVITATION FOR BIDS

1.The Chief Engineer, Road Development Authority, Beach Road, Jaffna, on behalf of the Chief Engineer's Tender Board will receive sealed Bids for the following works under Maintenance vote under RMTF Fund. Receiving bids will be closed at 10.00 am on 27.04.2018. Bids should be submitted on the forms available from the Chief Engineer, Road Development Authority, Beach Road, Jaffna. Bidding documents will be issued from 09.04.2018 up to 26.04.2018 on a payment of non- refundable tender fee of Rupees 2300.00 (including VAT)

| Details of works | Bid Security | ICTAD |
|---|---|---|
| 1. Re Construction of Bridge No.4/1 Sangilithoppu - Chemanai Road (B399) | 50,000.00 | C 8 & above |
| 2. Re construction of Bridge No. 3/3 Kachcheri -Beach - Fort Road | 35,000.00 | C 8 & above |

2.Bidding documents may be inspected free of charge at the Chief Engineer's office, Road Development Authority, Beach Road, Jaffna.
3.Eligible bidders shall comply with the following qualification criteria;
a)The bidder shall be registered with the Institution for Construction Training and Development ICTAD, under the Grade and speciality given below.
ICTAD Registration required:
Speciality: Roads/Bridges
Grade : C 8 and above
4. Bids shall be valid up to 29.06.2018 (63 calendar days) from time of closing of bids.
5. Bids must be accompanied by a bid security which mentioned in the tender document. Any bid not accompanied by an acceptable bid security will be rejected.
6. Bid security valid up to 27.07.2018
7. Dead line for the submission of Bids shall be on **27.04.2018 at 14.00 hrs**
8. Sealed bids may be dispatched either by registered post or hand delivered to the Chief Engineer, Road Development Authority, Beach Road, Jaffna to be received before the closing time.
9. Bids will be opened on 27.04.2018 at 14.30 hrs immediately after the closing at the above address.
10.Bidders or their authorized representatives are requested to be present at the opening of Bids.
11.Pre-bid meeting will be held at Chief Engineer's office, Beach Road, Jaffna on **18.04.2018 at 10.00 a.m.**
13. For further details, please contact Chief Engineer, on **Tel No: 021 222 2968, Fax No: 021 222 2968.**
14. Office will be kept closed on 12.04.2018 and 16.04.2018 For RDA special Holiday

Provincial Director/NP
Road Development Authority
Beach Road, Jaffna.

(C-2110)

Chief Engineer
Road Development Authority
Beach Road, Jaffna.


# விரைவில் ஆட்சிபீடமேறுவோம்

## நாமல் ராஜபக்ஷ நம்பிக்கை



(கொழும்பு)

விரைவில் பொதுத்தேர்தலுக்குச் சென்று அதனூடாக மக்களாட்சியை ஸ்தாபிப்போம் என ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிராக ஒன்றிணைந்த எதிரணியினரால்கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்ட வாக்கெடுப்பு தோல்வியில் முடிவடைந்தது. இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றிலிருந்து வெளியேறிய நாமலிடம் ஊடகவியலாளர்கள் கருத்துக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில்,

"நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தோம். இதனூடாக திருடர்களை யார் காப்பாற்றுகிறார்கள் என நன்றாகவே தெரிகின்றது. குறிப்பாக பிணைமுறி மோசடியாளர்களை யார் காப்பாற்றுகிறார்கள் என மக்களுக்கு தெரியவந்துள்ளது.

அதேபோன்று, ரணில் விக்கிரமசிங்கவுடன் ராஜபக்ஷவிற்கு ஒப்பந்தம் உள்ளதாக குறிப்பிட்டார்கள். ஆனால், ரணிலுடன் ஒப்பந்தம் செய்து நாட்டை விற்பது யார் என்பது வெளிப்படையாகியுள்ளது. இது உலகுக்கே தெரியவந்துள்ளது.

எம்மீது குற்றம் சுமத்தினார்களே ஒழிய மக்களின் பிரச்சினை தொடர்பில் இவர்கள் பேசவில்லை. மக்கள் இனிமேல் அவதானமாக இருக்கவேண்டும். நாம் ஒப்பந்தங்கள் செய்து, மகிந்தவை பிரதமராக்க மாட்டோம். பொதுத் தேர்தலே இன்று எமக்கு அவசியமாகும். அதற்கான வேலைத்திட்டங்களை நாம் செய்து வருகின்றோம். அதன் முதற்கட்டமே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை. எனவே வெகுவிரைவிலேயே பொதுத் தேர்தல் ஊடாக மக்கள் ஆட்சியை ஸ்தாபிப்போம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாதுகாப்பு நிதியம் திருத்த சட்ட மூலம் பாராளுமன்றத்திற்கு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு நிதியம் சம்பந்தமான திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சபை முதல் அமைச்சர லக்ஷ்மன் கிரியெல்லவினால் இந்த சட்டமூலம்தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர பிரதேச சபை திருத்த சட்டமூலமும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், இந்த சட்டமூலமும் சபை முதல் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-7)


மாகாண சமூக சேவைகள் திணைக்களம்-வடமாகாணம்
பெறுகைகளுக்கான அழைப்பு

கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்பு சேவையை பெற்றுக் கொள்ளல்-2018/19

1.வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த சுத்திகரிப்பு சேவைகள் வழங்குநரிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

2.விலைக்கேள்விதாரர் சுத்திகரிப்பு சேவை தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

3.யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.விலைமனுதாரர் கேள்வி கோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கான சேவை வழங்கல் தொடர்பில் மூன்று (03) வருடத்திற்கு குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.பொருத்தமான கேள்வி வைப்பு பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6.தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத் திணைக்களத்தில் கிடைக்கும் **"Application for Bid Documents"** என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா. **2,000** காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் **06.04.2018** தொடக்கம் **27.04.2018** வரையான காலப்பகுதியில் **09.00** மணி தொடக்கம் **15.00** மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

7. **"Cleaning Service -2018/2019, Elders Home Kaithady, Reference No NP/24/2/3/Cle.Ser/2018-2019"** என்ற விபரம் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

8.விலைக்கேள்விகள் **04.05.2018** ஆம் திகதி **14:00** மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் **04.05.2018** ஆம் திகதி **14:00** மணிக்கு திறக்கப்படும்

9.விலைமனுதாரர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.

10.கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

வனஜா செல்வரட்ணம்
தலைவர்,திணைக்கள பெறுகைகள் குழு,
மாகாண சமூக சேவைகள் திணைக்களம் வ.மா
கண்டி வீதி, கைதடி.

தொலைபேசி: 021 320 2464
தொலைநகல்: 021 223 1725
மின்னஞ்சல்:ssdeptnp@gmail.com

(சி/2117)



கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம் செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/8402 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 51 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/8401 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 40செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/8403 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/8404 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 06<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: B/8405 | பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:வைத்தியர்/ அவுஸ்திரேலியா<br>தொ.இ: G/8408 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: லண்டன் NOT PR<br>தொ.இ: B/8406 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: உத்திராடம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்ற வரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/8409 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

யாழ்ப்பாணத்திலிருந்து. பொத்துவில் நோக்கி கேரளக் கஞ்சாவினை கடத்திச் சென்ற வரை வவுனியா பொலிஸார் நேற்று அதிகாலை 4 மணியளவில் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்.- பொத்துவில் பேருந்தை நொச்சிமோட்டை பகுதியில் வழிமறித்து சோதனை மேற்கொண்ட போது அப் பேருந்தில் பயணித்த காத்தான்குடியை சேர்ந்த முஹமட் அனாஸ் (வயது-51) என்ற நபரை 2 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் பொலிஸார் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-281)

# பன்றிக்கு வைத்த மின்சாரத்தில் சிக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா பறயனாலங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பன்றிக்கு மின்சாரம் வைப்பதற்கு முயன்ற குடும்பஸ்தர் மின் சாரத்தில் அகப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம்குறித்து மேலும் தெரியவருவதாவது. நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் பறயனாலங்குளம். செட்டிகுளம் பகுதியில் வசிக்கின்ற பெரியசாமி முத்துலிங்கம் வயது 58 என்ற குடும்பஸ்தர் ஒருவர் தனது வீட்டிற்கு பின் புறமாகவுள்ள காட்டுப்பகுதிக்கு மின்சாரம் பெற்று அதனை பன்றிக்கு வைப்பதற்கு முயன்றபோதே அதில் அகப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே அவரது உறவினர்கள் பொலிஸ் முறைப்பாட்டில் அவர் வீட்டிற்கு மின்சாரம் பெறுவதற்கு முயன்றபோதே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (2)

# இடையூறு விளைவித்த இளைஞர்களை மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(பனிக்கன்குளம்)

முள்ளியவளை பொன்னகர் பகுதியில் மக்களுக்கு இடையூறு விளைவித்த குழு ஒன்று இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

முள்ளிவளை பொன்னகர் பகுதியில் நேற்று முன் தினம் இரவு வீதியால் சென்ற மக்கள் மீது தாக்குதல் நடத்தி மற்றும் மாட்டுக்கன்று ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி விட்டு மக்களுக்கு இடையூறு விளைவித்த கும்பல் ஒன்றை சேர்ந்த 4 பேரை பொன்னகர் இளைஞர்கள் மடக்கிப் பிடித்து முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

குறித்த நான்கு இளைஞர்களையும் பிரதேச இளைஞர்கள் மடக்கிப் பிடித்து முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கினர். இதற்கு அமைய பொலிஸார் அவர்கள் பயணித்த உந்துருளிகளை எடுத்துச் சென்றதுடன் குறித்த நால்வரையும் கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

பொன்னகர் 50 வீட்டுத்திட்ட பகுதியில் அண்மைக் காலமாக இளம் பசுக்கன்றுகள் காணாமல் போவதாக மக்கள் தெரிவித்துள்ளார்கள். (2-281)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றில் தோற்கடிப்பு

## வவுனியாவில் வெடி கொளுத்தி ஆரவாரம்

(பனிக்கன்குளம்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் பட்டாசு கொழுத்தி கொண்டாடிய சம்பவம் இடம் பெற்றுள்ளது

கூட்டு எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்பட்ட இந்த நம்பிக்கையில்லா பிரேரணை 46 மேலதிக வாக்குகளினால் நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டுள்ளது. கடந்த 21ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 76 வாக்கு



களும், எதிராக 122 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

இந்த வாக்கெடுப்பில் 26 பேர் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பிரதமர் ரணிலுக்கு கிடைத்த வெற்றியை கொண்டாடும் விதமாக, வவுனியா நகரப் பகுதியில்(பழைய பேருந்து நிலையத்தில்) நேற்று முன் தினம் இரவு 11மணியளவில் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி வெளிப்படுத்தப்பட்டது. (2-281)

# உடையார்கட்டுக்குளத்திலிருந்து நீர் இறைக்கும் இயந்திரத்தொகுதிகளை அகற்றியது இராணுவம்

(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டுக் குளத்தில் பொருத்திய நீர் இறைக்கும் இயந்திரத் தொகுதிகளை இராணுவம் அகற்றியது.**

இது தொடர்பில் கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அதனைத் தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இவ் விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இயந்திரங்கள் அகற்றப்பட வில்லை எனத் தெரிவித்து எதிர்ப்புக்களைக் காட்டி ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக பல்வேறு பதாகைகளைத் தாங்கியவாறு பிரதேச அபிவிருத்தி குழு தீர்மானத்தை நிறைவேற்றி உடனடியாக இயந்திரங்களை அகற்றுமாறும் ஏற்கனவே விதைப்புக்கு காலம் கடந்துள்ளதாகவும் இயந்திரங்கள் அகற்றாவிடில் சிறுபோகத்தை தாம் கைவிடப்போவதாகவும் தெரிவித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கோரி பல் வேறு தரப்பினருக்கும் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்தனர்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட செயலகம் சென்ற உறுப்பினர்கள் மாவட்ட செயலாளருக்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித் தனர். குறித்த விடயம் தொடர்பில் இராணுவத்துடன் கலந்துரையாடுவதாக மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

பல்வேறு தரப்பினரிடமும் முறையிட்டு பல்வேறு போராட் டங்களை நடத்திய மக்களுக்கு தீர்வாக இராணுவம் குறித்த இயந்திரங்களை அகற்றியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)




# இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு

## பூநகரி கோட்டையில் நேற்று நடைபெற்றது





(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரியில் உள்ள படைப்பிரிவினரும் பூநகரிப் பிரதேச செயலகம் மற்றும் பொலிஸார் பொது மக்களுடன் இணைந்து பூநகரியில் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வை நேற்றையதினம் ஏற்பாடு செய்திருந்தனர்.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகளில் மக்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது பல்வேறு விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள். விநோத உடை உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளிலும் மக்கள் கலந்து கொண்டதுடன், பரிசில்களையும் பெற்றனர்.

இவ்வாறான நிகழ்வுகள் ஊடாக இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (2-312-315)

# ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் உரிய முறையில் பயன்படுத்தாமல் வாய்க்கால்களும் சேதம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு விசுவமடு ப்பகுதியில் பல மில்லியன் ரூபா செலவில் மீள்புனரமைப்புச்செய்யப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் உரிய முறையில் பயன்படுத்தாமல் காணப்படுவதுடன், வாய்க்கால்களும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்துஐயன்கட்டு நீர்ப்பாசனத்திணைக்கத்திற்குட்பட்ட விசுவமடு குளத்தின் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் கடந்த 2012ஆம் ஆண்டிற்குப்பின்னர் சுமார் 90 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த புனரமைப்புப் பணிகள் உரிய முறையில் முன்னெடுக்கவில்லை என பல்வேறு தரப்புக்களாலும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இதில் கொங்கிறீட் வாய்க்கால்கள் அமைக்கப்பட்ட போதும். வீதிகள் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன.

இதனால் வாய்க்கால்களைக்கடந்து பயணிப்போர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் குறித்த சில வாய்க்கால்கள் சேதமடைந்தும் காணப்படுகின்றன. இதே வேளை சில விவசாயிகள் ஏற்று நீர்ப்பாசனத்தை பயன் படுத்தாமலும் கைவிட்டுள்ளனர்.

1990ம் ஆண்டுக்கு முன்னர் விசுவமடுக்கிராமம் ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தின் மூலம் உச்சப்பயன்பாட்டைப் பெற்று தற்போது ஏற்று நீர்ப்பாசனம் உரிய முறையில் பயன்படுத் தாமல் காணப்படுகின்றது.

எனவே குறைபாடுகளை நிவர்த்திசெய்து தருவதுடன். அனைத்து விவசாயிகளையும் பயன்படுத்துவதற்கு பயன்படுத்தி பயனடையும் வகையிலான திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் இப் பகுதி விவசாய அமைப்புக்கள் கோரியுள்ளனர்.(2-315)

# பூநகரி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான அமர்வு

(பூநகரி)

பூநகரிப் பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான முதலாவது அமர்வு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் சபைத் தவிசாளர் அருணாசலம்-ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இதன் போது உதவத்தவிசாளர் சி.சிறிரஞ்சன் உட்பட 18 உறுப்பினர்களும் சமூகமளித்திருந்த னர்.

20 உறுப்பினர் கொண்ட இச் சபையில் தமிழர் கூட்டமைச்சேர்ந்த 11 உறுப்பினர்களும் ஏனைய கட்சிகளைச் சேர்ந்த 9 பேரும் ஆரம்பத்தில் ஒற்றுமை பற்றி வலியுறுத்தி கூட்டுறவாய் சேர்ந்து இயங்குவதுபற்றியும்பேசினர்.

நான்கு குழுக்களான நிதி மற்றும் கொள்கை வீடமைப்பு சுற்றாடல் வாழ்வாதாரம் தொழில்சார் சேவை குழுக்களை நியமித்தல் முன் மொழிவுகளின் போது தமிழர் கூட்டமைப்பைச் சாராத கட்சிக்கும் முறுகல் நிலை ஏற்பட்டு வாய்த்தர்க்கம் ஏற்பட்ட தோடு அமைதியின்மையும் ஏற்பட்டது. வாதப் பிரதி வாதங்களும் ஏற்பட்டதோடு குழுக்கள் அமைத்தலில் தெளிவான முடிவுகள் மேற்கொள்ளப்படாத நிலையில் ஒவ்வொரு உறுப்பினர்களும் தமது வட்டாரம் சார்ந்த பிரச்சினை களை, முன்மொழிவுகளை மேற்கொண்டனர். பிரதேச சபை செயலாளர் மு. இராசகோபால் நன்றி யுரையுடன் முதல் நாள் அமர்வு நிறைவு பெற்றது.

அமர்வின் போது மாகாணசபை உறுப்பினர் ப.அரியரத்தினமும் சமூகமளித்திருந்தார். (2-84)

# கட்டுரை, ஓவியப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசளிப்பு

அமெரிக்க இலங்கைத் தமிழ் சங்கத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி பக்கவாதப் பராமரிப்பு இல்லம் நடத்திய கட்டுரை.ஓவியம் ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பக்கவாதப் பராமரிப்பு இல்லத் தலைவர் செ.அருளானந்தம் தலைமையில் நடைபெற உள்ள நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தன். சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக் களப் பணிப்பாளர் திருஞானம் ஜோண் குயின்ரஸ். கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள்அலுவலர்வே.தயேந்திரன்.கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஓய்வு நிலை அதிபர் வே.க.கணபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் நட்புநிலைய ஒருங்கிணைப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மருத்துவர் கலாநிதி மாசிலாமணி ஜெயராஜா. கிளிநொச்சிமாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் கி.சின்னராசா. அமெரிக்க இலங்கைத் தமிழ் சங்கத்தின் இலங்கை பிரதிநிதி பா.முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

# எதிர்கால அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள் தொடர்பில் ஐந்தாண்டு திட்டம் தயாரிப்பு

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தின் எதிர்கால அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள் தொடர்பில் ஐந்தாண்டு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

கடந்த 2ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்று முடிந்த ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் நீண்ட காலத்திட்டம் ஒன்றினை வகுக்கவேண்டும் என்ற அடிப்படையில் ஐந்து ஆண்டுத்திட்டம் ஒன்றை தயாரித்து வருகின்றோம், அதாவது 2018ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளை உள்ளடக்கி இவ்வரைபு செய்யப்பட்டு வருகின்றது.

உண்மையில் இந்த வரைபு இதுவரை முடிவு பெறவில்லை. இம்மாத இறுதியில் முடிவுறக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

எனவே வரைபுகள் முடிவுற்றதும் மாவட்டத்தின் இணைத்தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் அதில் உள்ள திருத்தங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடி இதனை இறுதி யாக்கம் செய்யவுள்ளதாவும் குறிப்பிட்ட அவர் இந்த ஐந்து ஆண்டுத்திட்டத்தில் மாவட்டத்தின் விவசாயத்துறை, கைத்தொழிற்றுறை, சேவைத்துறை என்ற அடிப்படையில் பல பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள் என.

இந்த அடிப்படையில் இனி வரும் காலங்களில் இதனுடைய முக்கியத்துவத்தை செலுத்துகின்ற சந்தர்ப்பத்தில் அதாவது ஒவ்வொரு துறையிலும் தற்போதுள்ள பிரச்சினைகள் என்ன, அந்த பிரச்சினைளை எவ்வாறு தீர்த்துக் கொள்வது, அவ்வாறு தீர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் அந்த வேலைத்திட்டங்களை எவ்வாறு முன்னெடுத்து இந்த மாவட்டத்தினுடைய முன்னேற்றத்திற்கு எவ்வாறு திட்டத்தை வகுத்துக் கொள்வது என்பது தொடர்பில் மிகத் தெளிவாக எமது ஐந்து ஆண்டுததிட்டத்தில் மற்றும் அதற்கான செலவீனங்கள் அதற்கான காலங்கள், வரையறைகள் என்பன மிக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மிக சிறப்பட்ட ஒரு வேலையாக இருந்தாலும் எமது உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டதன் அடிப்படையில் இந்த திட்டம் பூர்த்தியான ஒரு நிலையில் இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

## மீள் குடியேற்ற அமைச்சின் ஆயிரத்து 157 மில்லியன் நிதியில் முல்லையில் அபிவிருத்தி வேலைகள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு கடந்தாண்டில் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக ஆயிரத்து 157.871 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு கடந்த 2017ஆம் ஆண்டில் ஆயிரத்து 813.119 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் மீள் குடியேற்ற அமைச்சினூடாக ஆயிரத்து 157.871 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பற்று மூவாயிரத்து 345 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக முல்லை மாவட்டச் செயலக தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு, வாழ்வாதாரம், விவசாயம், குடிநீர் விநியோகம், மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 608 புதிய வீடுகள் 487.20 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை 44 திருத்த வீடுகளுக்கு 10 மில்லியன் ரூபாவும் கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-315)

## க.பொ.த (சா/த) பெறுபேறுகள்-2017

கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம்

எஸ்.திஷானி-8ஏ, கே.கோகுலன்-7ஏபிசி, ஏ.விதுஷன்-7ஏபிஎஸ், எஸ்.சயந்தன்- 5ஏபி2சிஎஸ், ஜெ.கோபிநாத்- 4ஏ2பி2சி, எஸ் நிலவன் - 4ஏ5பி, எல். குயிலினி- 4ஏபி 3சிஎஸ், கே. பிரியங்கா- 3ஏ 2பி3சிஎஸ், கே.கலைநிலா- 3ஏ3பிசி2எஸ், எம். நிவேதா- 3ஏ2பிசி2எஸ், ஆர். நேருஷா- 3ஏ2பி3சிஎஸ், எஸ். கிறிஸ்டீனா- 3ஏ2பி3எஸ்.

கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி.

எம்.கனிஸ்ரன்-9ஏ, எஸ்.ஜிந்துஜா-8ஏபி, எஸ். டிலக்ஸா -8ஏசி, ஜே.கஜீபன்-6ஏ2பி, கே.சாரங்கன்-6ஏ2பி, என்.ஜெயனி-6ஏ2பிசி, எஸ்.தமிழினி-8ஏ2பி, ஜே. ரஜிதன்-5ஏ2பிசி, எஸ்.கீர்த்தனா-5ஏ 3பிசி, ஆர்.அனுசன்-5ஏ2பிசி, கே.மதுரா-5ஏ2பிசிஎஸ்

✹59 வருடங்களின் பின்னர் முதன்முறையாக 9ஏ பெறுபேறு இம்முறை கிடைக்கப் பெற்றுள்ளதுடன் மாணவர்கள் சிறந்த பெறு பேறுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## பெண்களின் பிரச்சினைகள், உரிமைகள் தொடர்பில் ஆராயும் கருத்தரங்கு கிளிநொச்சியில் நடைபெற்றது

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு நிறுவனங்களில் தொழில் புரிகின்ற பெண்களின் பிரச்சினைகள் மற்றும் தொழில்சார் உரிமைகள் தொடர்பாக ஆராயும் கருத்தரங்கொன்று கடந்த வாரம் கிளிநொச்சி பொன்னகர் வடக்கு பொதுபோக்கு மண்டபத்தில் இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் திருமதி நா.யோகராணி தலைமையில் இடம்பெற்றது. இக் கருத்தரங்கில் தலைமைச் செயலக பிரதி பொதுச்செயலாளர்எஸ்பி.நாதன், சமுர்த்தி அலுவலர்களான அ.காந்தி, திருமதி வி.ஜெயதரன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கி வைத்தனர். இக் கருத்தரங்கில்ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள், கிராம அபிவிருத்தி சங்க தலைவர்கள், பெண்ணுரிமை அமைப்புக்கள் எனப் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். பிரசவ விடுமுறை லீவு மறுப்பு, நியாயமற்ற வேலை நீக்கம், தொழிற்சாலை பாதுகாப்பு, சுகாதாரம், E.P.F சேவை என்பன பற்றி ஆராயப்பட்டவுடன் பெண்கள் இவ்விடயங்கள் சம்பந்தமாக இல. 64 கணேசபுரம் கிளிநொச்சியில் இயங்கும் அலுவலகத்தோடு அல்லது 077 948 2937 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு சேவைகளைப்பெற்றுக்கொள்ள முடியுமென கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-84)

## 354 பட்டதாரிகளுக்கு நேர்முகத் தேர்வுகள் கிளிநொச்சியில் இரு தினங்கள் நடைபெறும்

(கண்டாவளை)


கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 354 பட்டதாரிகளுக்கு நேர்முக தேர்வுகள் எதிர்வரும் 23,24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக மாவட்டச்செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் கடந்த 2016ஆம் ஆண்டு பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட இருபதாயிரம் பட்டதாரிகளை சேவைகளில் இணைத்துக் கொள்ளும் பொருட்டு நேர்முக தேர்வுகள் நடைபெறவுள்ளன.

இது தொடர்பில மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்ட தகவல்களின்படி 31-12-2016 இற்கு முன்னர் பட்டப்படிப்பை நிறைவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 354 பட்டதாரிகளுக்கான நேர்முகத்தேர்வுகள் எதிர்வரும் 23, 24ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாடு பூராகவும் வேலையற்ற 57 ஆயிரம் பட்டதாரிகள் உள்ளதாகவும் இதில் முதற்கட்டமாக இருபதாயிரம் பட்டதாரிகளை சேவைகளில் இணைத்துக்கொள்ளவுள்ளதாகவும் இதில் சேவைகளில் இணைத்துக் கொள்ளும் பட்டதாரிகள் இரண்டு வருட பயிற்சிக் காலங்கள் சேவையாற்ற வேண்டும் என்பதுடன் மாதாந்தம் இருபதாயிரம் ரூபா கொடுப்பனவுகள் வழங்கப்படுவதுடன் வயதெல்லை 35 ஆகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## பூநகரி கோட்டப் பாடசாலைகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்



(பூநகரி)

பூநகரி கோட்டத்தில் உள்ள இரு பாடசாலைகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் நேற்று முன்தினம் 4 ஆம் திகதி அப்பேர்க்கா நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச செயலர் ஒழுங்குபடுத்தலில் 4 இலட்சம் பெறுமதியான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் கிளி/ பூநகரி சிறிவிக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கும், கிளி/ பரமன்கிராய் அ.த.க.பாடசாலைக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அப்பேர்க்கா நிறுவனஸ்தாபகர் சான்குரே நேரில் வருகை தந்து பாடசாலை நிர்வாகத்தினரிடம் இவ்வியந்திரங்களை கையளித்தார்.

இதில் பிறாநிறுவன அலுவலர் விவேகானந்தா மகேந்திரன், பூநகரி பிரதேச செயலர் சிசகிருஸ்னேந்திரன் ஆகியோர் சமுகமளித்து கருத்துரைகளை வழங்கியிருந்தனர். (2-84)




## அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வும் செயலாண்மைக்குழு கூட்டமும்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் மாதந்தோறும் நடத்தும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வும் மாவட்ட செயலாண்மைக்குழுக் கூட்டமும் நாளை 7 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சிறப்புச் சொற்பொழிவு, கலந்துரையாடல் என்பன இடம்பெறவுள்ளதால் சங்க உறுப்பினர்கள், இலக்கிய ஆர்வலர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (2-84)



மு/ வன்னிவிளான்குளம் அ.த.க.பாடசாலையில் ஆரம்பப்பிரிவு மாணவர்களினால் கொண்டாடப்பட்ட சித்திரை புத்தாண்டு நிகழ்வின் பதிவுகள்

# நாட்டின் அமைதிக்கு நல்லாட்சி தொடர வேண்டும்

## இரா.சம்பந்தன் விளக்கம்

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க வேண்டுமாயின் அதற்கு நல்லாட்சி தொடரவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணிலுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு எதிராக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களித்தது.

இதுகுறித்து வினவிய போது எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



நாட்டின் நன்மை கருதியே கூட்டமைப்பு குறித்த பிரேரணைக்கு எதிராக வாக்களித்ததெனக் குறிப்பிட்ட சம்பந்தன், அந்த நோக்கம் அடையப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார். (இ-7)

# கபட நோக்கத்துடன் திட்டங்கள் முன்வைப்பு

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் விசனம்

(யாழ்ப்பாணம்)

எமது பகுதியிலுள்ள பௌதீக வளங்களை அழித்தொழித்து இப் பகுதியின் தனித்தன்மையை இல்லாது ஒழிப்பதற்கான திட்டங்களாகவோ அல்லது அரச காணிகளை கையகப்படுத்தும் கபட நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட முன்மொழிவுகளாகவோ காணப்படுவதால் பல தொழில் முயற்சியாளர்களின் முன்மொழிவுகள் எம்மால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாண தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை யாழ். அரச அதிபர் செயலகத்தில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றது. இதில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதலீட்டாளர்களையும் தொழில் முயற்சியாளர்களையும் ஊக்குவிக்கும் முகமாகவும் எமது பகுதிகளுக்கு ஏற்புடைய புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் இப் பயிற்சிப்பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தேசிய பொருளாதாரத்தில் விவசாயம் முக்கிய பங்கு வகிக்கும் நிலையில் பூகோளச் சந்தையில் போட்டியிடும் திறனுடன் தேசிய உற்பத்திக்கு அதி உச்சமான பங்களிப்பை நாம் நல்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு. உள்நாட்டு விவசாய உற்பத்திக்கு கூடிய வாய்ப்புக்களை வழங்கி அதனூடு 2020 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருவாய்களை இரண்டு மடங்காக மாற்றுகின்ற திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாகவே இவ்வாறான அறிமுக நிகழ்வுகள் இங்கு நடத்தப்படுகின்றன.

இதற்காக ஆரம்ப கைத்தொழில் அமைச்சினால் புதிய செயற்றிட்ட முன்மொழிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் போது குறித்த விண்ணப்பங்களை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றியும் இங்கு அறிவுறுத்தப்படும் என எதிர்பார்க்கின்றேன். உங்கள் முன்மொழிவுகள் வெற்றிகரமான ஒரு புத்தாக்கச் செயற்றிட்டமாக இனங்காணப்படும் பட்சத்தில் உங்களிடமிருந்து முழுமையான செயற்றிட்ட அறிக்கையொன்றைத் தயாரித்து சமர்ப்பிக்கும்படி கோரப்படுவீர்கள்.

குறித்த செயற்றிட்ட அறிக்கை கணிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டு திருப்தி அளிப்பின் உடன்படிக்கை ஒன்றினூடாக கொடைத் திட்டமொன்றினுள் கொண்டு வரப்படுவீர்கள். அவ்வாறு ஒன்றாக சான்றுப்படுத்தப்படும் பட்சத்தில் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் கீழ் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்திற்கு நீங்கள் தெரிவு செய்யப்படுவீர்கள்.

இச் செயற்றிட்டமானது தனியார்பங்குடைமை தொழில் முயற்சிகள், விவசாயத்துறை கமக்கார அமைப்புக்கள் போன்றவற்றிற்கு ஆதரவு அளிக்கு முகமாகவும், குறித்த சேவைகளை நல்கும் அல்லது விவசாய உற்பத்திகளில் ஈடுபடும் வரையறுக்கப்பட்ட கம்பனிகளுக்கு ஆதரவு அளிக்கவும், விவசாய உற்பத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல் அமைப்புக்கள், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட விவசாயக் குழுக்கள், விசேட ஊக்குவிப்புக்களைப் பெற்றுக் கொள்பவர்கள் போன்றோருக்கும் ஆதரவு வழங்கும் முகமாகவே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்புக்களினூடாக உற்பத்தி செய்யப்படக்கூடிய பொருட்களின் வகைகளும் மற்றும் விவசாய உள்ளீடுகளும் உங்களுக்கு வழங்கப்படலாம். எவ்வெவற்றிற்கு ஆதரவளிக்கலாம் என்று இவர்களால் இனங்காணப்பட்டுள்ளது. அவற்றை நாம் ஏற்க முன் அவை எமக்கு நன்மைகளைக் கொண்டு வருமா? அவை தான் நாங்கள் முன்னுரிமை வழங்க வேண்டிய செயற்றிட்டங்களா? என்பதில் கரிசனை கொள்ள வேண்டும். முழு நாட்டுக்கும் முக்கியமாகக் கருதப்படுபவை மாகாணத்திற்கு அவ்வாறு புலப்படத் தேவையில்லை என்ற கருத்தையே முன்வைக்கின்றேன்.

சிறிய மற்றும் நடுத்தர செயற்றிட்டங்களை இனங்காண்பதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குமான பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த செயலமர்வு தொழில் முனைவோருக்கு கூடுதல் விபரங்களை வழங்கும் என எண்ணுகின்றேன்.

எமது பகுதிகளில் முதலீடுகளை மேற்கொள்பவர்கள் அல்லது தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க விரும்புகின்ற தொழில் முயற்சியாளர்கள் பலர் பல்வேறு முன்மொழிவுகளுடனும் செயற்றிட்ட வரைவுகளுடனும் எம்மை அணுகுகின்றார்கள்.

அவர்களின் முன்மொழிவுகள் எமது பகுதியிலுள்ள பௌதீக வளங்களை அழித்தொழித்து இப் பகுதியின் தனித்தன்மையை இல்லாது ஒழிப்பதற்கான திட்டங்களாகவோ அல்லது அரச காணிகளை கையகப்படுத்தும் கபட நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட முன்மொழிவுகளாகவோ காணப்படுவதால் பல தொழில் முயற்சியாளர்களின் முன்மொழிவுகள் எம்மால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றை வெறுமனே முதலமைச்சர் செயலகம் மட்டும் கையாள்வதில்லை. எமது நிபுணத்துவக் குழுவின் நிபுணத்துவ ஆலோசனைகளின் அடிப்படையிலேயே ஒவ்வொரு கோரிக்கையும் தனித்தனியாக ஆராயப்படுகின்றது.

எமது நிலவளம், நீர்வளம், கலாசாரக் கட்டுக்கோப்பு ஆகியவற்றிற்கு இடையூறுகளோ அல்லது பாதிப்புக்களோ ஏற்படுத்தாத வகையில் தயாரிக்கப்படுகின்ற அனைத்து முன்மொழிவுகளும் எம்மால் கூடிய கரிசனையுடன் பரிசீலிக்கப்படும் என்று இத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசாங்கத்தின் புதிய திட்டத்தின் கீழ் தொழில் முயற்சியாளர்களின் தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்படுமாயின் அத் திட்டம் சிறப்புற அமையக் கூடியதாக இருப்பின் தொழில் முயற்சியாளர்கள் முதலீடு செய்வதற்கு சமமான அளவு பணத்தை அரசாங்கமும் முதலீடு செய்ய ஆயத்தமாக உள்ளது என்ற செய்தி எனக்கு அறியத்தரப்பட்டது.

இவற்றையெல்லாம் நீங்கள் அவதானத்தில் எடுத்து உங்கள் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்த வாரம் புதிய அமைச்சரவை

## வாக்கெடுப்பை புறக்கணித்தவர்களுக்கு அமைச்சரவையில் இடமில்லை!-ராஜித

(கொழும்பு)

பிரதமருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத அமைச்சர்கள் அனைவரையும் வெளியேற்றிவிட்டு, இந்த வாரமளவில் புதிய அமைச்சரவையை ஸ்தாபிப்போம் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பினையடுத்து நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத அமைச்சர்களை நாம் அமைச்சரவையில் இருக்க விடமாட்டோம். அவர்கள் வெளியேறியவுடன் நாம் இவ்வாரமளவிலேயே புதிய அமைச்சரவையொன்றை ஸ்தாபிப்போம்.

ஜனாதிபதி தான் இதனை முதலில் கூறினார். ஜனாதிபதியும் பிரதமரும் இந்த நிலைப்பாட்டில் தான் உள்ளார்கள்.

அரசாங்கமென்றால் ஒன்றாக பயணிக்க வேண்டும். ஒவ்வொருவரது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ற வகையில் அரசாங்கத்தை கொண்டுசெல்ல முடியாது.

மூன்றிலிருந்து பெரும்பான்மையை நாம் நிரூபிப்போம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முதலாவது பெண் மேயர் தலைமையில் கொழும்பு மாநகர சபை அமர்வு



(கொழும்பு)

கொழும்பின் முதலாவது பெண் மேயரான ரோஸி சேனநாயக்க தலைமையில் கொழும்பு மாநகர சபையின் முதலாவது அமர்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

கொழும்பு மாநகர சபையில் அமர்வுகளை நடத்துவதற்கு போதிய இடவசதியின்மையால், 119 உறுப்பினர்களைக் கொண்ட கொழும்பு மாநகர சபையின் முதலாவது அமர்வு, புதிய நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதுவரை 55 ஆகவிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை, புதிய உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறையின்படி 119ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையில் 55 பேர் கலந்துகொள்ளக்கூடிய வகையிலான இடவசதியைக் கொண்ட மண்டபமே காணப்படுகின்றது. இதனால் அமர்வுகளை வெளி இடத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு, நகர மண்டபத்தில் அமர்வு நடத்தப்பட்டுள்ளது. (இ)

# 1300 ஆண்டு பழைமையான கல்வெட்டு கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 1300 ஆண்டு பழைமையான கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அநுராதபுரம் - உத்தர சாலிய ஸ்ரீ தலதா விகாரையில் இந்த கல்வெட்டு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

8 ஏக்கர் வயல் ஒன்றில் பிக்குமடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக பூஜை நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் இந்த கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சி பிரிவின் பேராசிரியர் கருணாசேன



ஹெட்டிஆராச்சி உறுதி செய்துள்ளார். (இ-7)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு சட்டநாதர் வீதி கொன்றையடி வைரவர் கோவில் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும். எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். இந்நிகழ்வில் தினமும் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும். (இ

# நிர்வாகத்தெரிவு

சுண்டிக்குளி சனசமூக நிலையத்தில் அண்மையில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக சி.சிறிசுதாகரன், செயலாளராக செ.செல்வகுரன், பொருளாளராக ந.இராஜன், விளையாட்டுத்துறை பொறுப்பாளராக கி.பிரசாந்த் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் 6 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ)





யா/ கலட்டி மெ.மி.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ். அன்ரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி திருநெல்வேலி கிளை முகாமையாளர் திருமதி யாமனை தனேஷ், கௌரவ விருந்தினராக மிலேனியம் இயக்குநர் சீ. சுகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஐ.தே.க., சு.க. ஆதரவுடன்

# மட்டக்களப்பு மாநகர சபையை கைப்பற்றியது கூட்டமைப்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப் பற்றியுள்ளது. மாநகர மேயராக தியாகராசா சரவணன் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாநகர மேயரை தெரிவுசெய்யும் முதலாவது அமர்வு, கிழக்கு மாகாண உள்ளூராட்சிஆணையாளர் வை.எம். சலீம் தலைமையில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தியா கராசா சரவூணன் மற்றும் உதயசூரியன் சின்னத் தில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் உறுப்பினர் சோமசுந்தரம் ஆகியோரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டன.

இதில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் உறுப்பினருக்கு ஆதரவாக 25 வாக்குகள் அளிக் கப்பட்டன. தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் உறுப்பினருக்கு 11 வாக்குகள் அளிக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

இதேவேளை, தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் இரண்டு உறுப்பினர்கள் நடு நிலைவகித்துள்ளனர். (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சி.ஜெயரூபன் | திருமதி.கி.டேமியன் (பபிதா) | செல்வி.மா.மாலினி | திரு.க.உதயகுமார்

எமது பாடசாலை ஆசிரியர்களான திரு.சி.ஜெயரூபன், திருமதி.கி.டேமியன்(பபிதா), செல்வி. மா.மாலினி, திரு.க.உதயகுமார் ஆகியோர் 28.03.2018 புதன்கிழமை B.M.I.C.H இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணி பட்டத்தை (B.Ed) பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.




ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்

(3523)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி. ஜெயமணி செந்திலிங்கம் (B.Ed)



கடந்த 2018.03.28
அன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்
நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
கல்விமாணிப் பட்டம் பெற்ற எமது
பாடசாலை ஆசிரியையான
திருமதி ஜெயமணி செந்திலிங்கம்
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதில் பெருமகிழ்வு
அடைகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/வட இந்து ஆரம்பப் பாடசாலை

(சி-229)

பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு இருபாலார்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ★ கணனி தமிழ் ரைப்பிங்
- ★ கணனி பக்க வடிவமைப்பு
- ★ விளம்பர வடிவமைப்பு

முன் அனுபவம் உள்ளவர்களும் பயிலுநர்களும் தேவை.

பெண்கள் (பகல் கடமை), ஆண்கள் (இரவுக்கடமை) தகைமை உள்ளவர்களும் பயிற்சி பெற விரும்புவர்களும் 06.04.2018 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும். – பொது முகாமையாளர்

வலம்புரி
இல.03, 02-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.




# மேலாண்மைவாரிய விவகாரத்தில் உரிய தீர்வு சில நாட்களில் கிடைக்கும்

## தமிழிசை உறுதி



(சென்னை)

காவிரி மேலாண்மை வாரியம் பிரச்சினையில் நமக்குள்ள உரிமை இன்னும் சில நாட்களிற்குள் கிடைத்து விடும் என தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

தமிழக பாரதீய ஜனதா கட்சியின் மாநில செயலாளர் தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கர்நாடக தேர்தலுக்காக தானே காவிரி பிரச்சினையில் இந்த தாமதம் என்ற உண்மையில்லாத குற்றச்சாட்டுகளை காட்டும் எதிர்க்கட்சிகள், மேகதாதுவில் அணை கட்டுவோம். அதற்கு 6 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொல்லும் சித்தராமையாவை ஏன் கண்டிக்கவில்லை? இந்த கூட்டணியிலிருந்து வெளியேறுவோம் என்று தி.மு.க. ஏன் சொல்லவில்லை?.

ஆக கூட்டணிக்காக காவிரி பிரச்சினையை நீங்கள் பாரபட்சமாக அணுகுகிறீர்கள் என்று மு.க.ஸ்டாலினை குற்றம்சாட்டுகிறோம். இது சட்ட ரீதியான நகர்வுகள் இருக்கும்போது மத்திய அரசு கேட்டிருக்கும் நியாயமான விளக்கம் கேட்டு வழக்கு 9ஆம் திகதி வருகின்ற நிலையில் நாளொரு போராட்டத்தை நடத்துவது அரசியல் சுயலாபம், இதை தமிழக மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆண்டாண்டு காலமாக வஞ்சனை செய்த கட்சிகளே இன்று போராடுகிறார்கள். ஆனால் உண்மையான தீர்வு காணவில்லை. நம் உரிமை சில நாட்கள், சில வாரங்களுக்குள் கிடைத்து விடும் என்பது தான் உண்மை. உரிமை கிடைத்து விடும், ஆனால் அது கிடைக்கக் கூடாது என்றும் கிடைத்தால் சொந்தம் கொண்டாடுவதற்கு மான சுயநல அரசியலே இது.

இன்னும் சில தினங்களுக்குள் கிடைக்க வேண்டிய உரிமையை நிரந்தர தீர்வை நோக்கி சென்று கொண்டிருக்கும் நெடுநாளைய பிரச்சினையை நிரந்தரமாக தண்ணீர் கிடைக்காது என்பது போன்ற தோற்றத்தை கொடுத்து மக்களை பயமுறுத்திக்கொண்டிருக்கும் கட்சிகளை கண்டிக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# மேலாண்மை வாரியத்தில்

# அனைத்துக் கட்சியினரின்

# தமிழகத்தின் இயல்பு நி

(சென்னை)

மத்திய அரசு மற்றும் துணை நிற்கும் தமிழக அரசை கண்டித்து கழகத்தில் அனைத்துக் கட்சியினர் போராடி வருகிறது. தமிழகம் முழுவதும் 10 இலட்சம் பேர் கைது செய்யப்பட்டதாக செய்தி வந்துள்ளது.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய அரசைக் கண்டித்து தமிழகத்தில் நேற்று தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சார்பில் முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது.

மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாநிலம் முழுவதும் எதிர்க்கட்சியினர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வீதி மறியல் மட்டுமன்றி ரயில்களை மறித்தும் போராட்டம் நடத்தி வருவதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

அவ்வகையில் சென்னை காமராஜர் வீதியில் மறியலில் ஈடுபட்ட தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின், திருநாவுக்கரசர், கி.வீரமணி, திருமாவளவன்,





# ஐ.பி.எல்.வீரர்களை சிறை பிடிப்போம் தமிமுன் அன்சாரி சர்ச்சைப் பேச்சு



(டில்லி)

ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்கும் கிரிக்கெட் வீரர்களை சிறை பிடிப்போம் என மனிதநேய ஜனநாயக கட்சியின் பொதுச்செயலாளர் தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏவின் கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மனிதநேய ஜனநாயக கட்சியின் பொதுச்செயலாளர் தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. டில்லியில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

காவிரி விவகாரத்தில் பா.ஜனதா தவிர எந்த கட்சி போராட்டம் நடத்தினாலும் ஆதரவு தருவது என எங்கள் கட்சியின் தலைமை நிர்வாகக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

எதிர்வரும் 10ஆம் திகதி சென்னையில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி நடப்பதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது. காவிரி மேலாண்மை வாரிய விவகாரத்தில் மக்கள் கொந்தளித்து போராட்டம் நடத்தி வரும் நிலையில், விவசாயிகள் வாடி வதங்கும் சூழ்நிலையில் ஐ.பி.எல். போட்டியை நடத்துவது தமிழகத்துக்கு மானக்கேடு என்று கருதுகிறோம்.

போட்டியை தமிழக அரசு ரத்துச் செய்யவேண்டும். இல்லையென்றால், எங்கள் கட்சியின் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மைதானத்துக்குள் நுழைந்து போட்டியை தடுத்து நிறுத்துவோம்.

போட்டியில் பங்கேற்கும் கிரிக்கெட் வீரர்களையும் சிறை பிடிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (10)

# தமிழிசையின் நாணய வார்த்தைக்கு நடந்தது என்ன? - ரி.ராஜேந்தர் கேள்வி



(சென்னை)

காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு ஆறு வார காலம் கெடு இருக்கிறது.

அதற்குள் அமைக்கப்படும் என்ற பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர் தமிழிசையின் நாணய வார்த்தைக்கு என்ன நடந்தது என, இலட்சிய திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் ரி.ராஜேந்தர் கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்படி வினவியுள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

பா.ஜ.க. வாக்குகளைப்பெறுவதற்காக அரசியல் நடத்தாமல், நாட்டிற்காக அரசியல் நடத்த வேண்டும். காவிரிக்காக யார் போராட்டம் நடத்துகிறார்களோ அவர்களை நான் மதிக்கிறேன். அவர்களுடைய போராட்டத்திற்கு எனது வாழ்த்துக்கள்.

ஆனால் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க கோரி உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதுடன், அதற்கான முடிவை உடனடியாக மேற்கொள்ளாமல் 6வார காலத்திற்கு இழுத்தடித்தமை ஏன்?

ஸ்கீம் என்ற ஒரு வார்த்தையை வைத்து இழுத்தடிப்பை மேற்கொள்வது திட்டமிட்ட சதி. காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க கோரியும், விவசாயிகளின் கண்ணீருக்குமாகவே போராட வேண்டும். குறித்த போராட்டமானது தமிழகமே ஒன்றிணைந்து மேற்கொள்ளும் போது பலம் பெறும்.

ஒவ்வொருவரும் தனித்துப் போராடினால் எப்படி பா.ஜ.கவிற்கு அச்சம் ஏற்படும். தமிழனின் பலவீனம் தனித்து போவது. அனைவரும் ஒன்றிணைந்து போராடினால் தான் இதற்கு நிரந்தர தீர்வு காண முடியும் என ரி.ஆர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# அரிய வகை மான்வேட்டை வழக்கில் சல்மான் கானுக்கு 5 ஆண்டுகள் சிறை

## ஜோத்பூர் நீதிமன்றம் தீர்ப்பு



(ஜெய்ப்பூர்)

அரிய வகை மான்களை வேட்டையாடிய வழக்கில் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட நடிகர் சல்மான்கானுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் அருகே உள்ள கான்களி கிராமத்தில் "ஹம் சாத் சாத் ஹயன்" என்ற இந்தி படத்தின் படப்பிடிப்பு 1998ஆம் ஆண்டு ஒக்டோபர் 2ஆம் திகதி நடந்தது.

அன்று இரவு அரியவகை மான்கள் இரண்டை படப்பிடிப்பில் இருந்த நடிகர் சல்மான்கான் வேட்டையாடியதாக குற்றம் சாட்டப்பட்டது.

இதேபோல நடிகர் சயீப் அலிகான், நடிகைகள் சோனாலி பிந்த்ரே, தபு, நீலம் ஆகியோர் மீதும் குற்றம் சாட்டப்பட்டது.

ஜோத்பூர் நீதவான் நீதிமன்றில் நடந்து வந்த இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. மான் வேட்டை வழக்கில் சல்மான் கான் குற்றவாளி என நீதிபதி அறிவித்தார்.

அவரை தவிர மற்ற அனைவரும் விடுவிக்கப்பட்டனர். சில மணிநேரத்திற்கு பின்னர் சல்மானுக்கான தண்டனை விபரங்களை நீதிபதி அறிவித்தார்.

5 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் 10 ஆயிரம் ரூபாய் அபராதம் அவருக்கு விதிக்கப்பட்டது.

இதனை அடுத்து, அவர் உடனடியாக சிறைக்குகொண்டு செல்லப்பட்டார். அவரது தரப்பில் பிணை கோரி மனு தாக்கல் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

# சட்டவிரோத ஊடுருவலைத் தடுக்க மெக்சிகோ எல்லையில் இராணுவம்

## ட்ரம்பின் அதிரடி முடிவு



(வோஷிங்டன்)

மெக்சிகோ எல்லையில் மக்களின் ஊடுருவலை தடுப்பதற்காக அப்பகுதியில் இராணுவத்தை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார்.

அமெரிக்காவை ஒட்டிய தென் பகுதியில் மெக்சிகோ நாடு உள்ளது.

இங்கிருந்து பல்லாயிரக்கணக்கானோர் எல்லை தாண்டி வந்து அமெரிக்காவில் வசித்து வருகிறார்கள். இதனால் அமெரிக்காவில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகிறது.

இந்த ஊடுருவலை தடுப்பதற்காக ஏற்கனவே மொத்தம் உள்ள 3145 கிலோ மீற்றர் எல்லையில் சில பகுதிகளில் தடுப்பு சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் மீதி உள்ள தூரத்துக்கு தடுப்பு சுவர் அமைக்கப்படும் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்து இருந்தார்.

இதற்கு மெக்சிகோ நாடு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. அதையும் மீறி தடுப்பு சுவர் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகிறது.


அதற்கு முன்னதாக எல்லை முழுவதும் இராணுவத்தை நிறுத்த ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார்.

விரைவில் இதற்கான திட்டங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கப்பட்டு எல்லை பாதுகாப்பு பணி இராணுவத்தின் வசம் ஒப்படைக்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார். இதற்கும் மெக்சிகோ நாடு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. (10)

# வெளிநாடு



# மத்தியரசின் இழுத்தடிப்பு; வலுக்கும் போராட்டங்கள் லை முற்றிலும் ஸ்தம்பிதம்





ஜவாஹிருல்லா உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். மறியலில் ஈடுபட்டு கைதான, திமுக செயல்தலைவர் ஸ்டாலின் புரசைவாக்கத்தில் உள்ள மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தார்.

மண்டபத்தில் வைத்து மு.க.ஸ்டாலின் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த போது,

முழு அடைப்பு போராட்டம் 100 சதவிகிதம் வெற்றி பெற்றுள்ளது. மத்திய அரசு மற்றும் துணை நிற்கும் தமிழக அரசை கண்டித்து தி.மு.க. போராடி வருகிறது. தமிழகம் முழுவதும் 10 இலட்சம் பேர் கைது செய்யப்பட்டதாக் செய்தி வந்துள்ளது. டெல்டா மாவட்டங்களில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கு பெறும் காவிரி உரிமை மீட்பு பயணம் 7 ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

ஸ்கீம் என்ற வார்த்தைக்கு விளக்கம் கேட்டு தொடர்ந்த மனுவை மத்திய அரசு திரும்பப்பெற வேண்டும்.

தற்போதைய ஆட்சி மீது ஆளுநர் எந்தளவுக்கு அபிப்பிராயம்வைத்துள்ளார் என்பது அனைவரும் அறிந்ததே என அவர் மேலும்தெரிவித்தார்.(10)

# 8 கோடி பாவனையாளர்களின் தகவல் பகிர்வு குற்றத்தை ஒப்புக்கொண்டது பேஸ்புக்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள 8.7 கோடி பேரின் தகவல்கள் இங்கிலாந்து நிறுவனத்திடம் பகிரப்பட்டுள்ளது என பேஸ்புக் நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

பேஸ்புக் நிறுவனத்தினால் அண்மையில் ஏற்பட்ட குழப்பம் மோடி ஆப் வரை சென்றுள்ளது.

அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக சுமார் 5 கோடி அமெரிக்க மக்களின் தகவல்களை பேஸ்புக் நிறுவனம், லண்டனைச் சேர்ந்த கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா என்னும் நிறுவனத்திற்கு வழங்கியதாக பகிரங்கமான குற்றச்சாட்டு வெடித்தது.

இது தொடர்பாக விசாரணை நடத்த அமெரிக்க பாராளுமன்றத்தின் மூத்த உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழு 11ஆம் திகதி பேஸ்புக் தலைமை செயல் இயக்குனர் மார்க் ஜுக்கர் பக் ஆஜராகி வாக்கு மூலம் அளிக்கிறார்.

இந்நிலையில், அமெரிக்காவில் உள்ள 8.7 கோடி பேரின் தகவல்கள் இங்கிலாந்து நிறுவனத்திடம் பகிரப்பட்டுள்ளது என பேஸ்புக் நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.


இதுதொடர்பாக பேஸ்புக் நிறுவனத்தின் மூத்த தொழிற் பிரிவு அதிகாரி மைக் ஷ்ரோப் பெர் கருத்துத் தெரிவிக்கையில்,

இதுவரை 8கோடி மக்களின் தகவல்கள் பகிரப்பட்டு உள்ளன.

இதில் பெரும்பாலும் அமெரிக்க மக்களுடையது. கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா நிறுவனத்துக்கு தான் இந்த தகவல்கள் பகிரப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

பாவனையாளர்களின் தகவல்கள் பகிரங்கப்பட்டமை பேஸ்புக் நிறுவனம் ஒப்புக் கொண்டதால் சர்வதேசத்தில் பேஸ்புக் தடைக்கான அழுத்தம் மேலும் அதிகரித்துள்ளது. (10)

# ரஷ்யாவிலிருந்து அமெ. தூதுவர்கள் குடும்பத்தினருடன் வெளியேற்றம்



(மொஸ்கோ)

ரஷ்ய உளவாளிக்கு விஷம் வைத்த குற்றச்சாட்டின் எதிரொலியாக ரஷ்ய அரசாங்கம் 60 அமெரிக்க தூதர்களை நேற்று வெளியேற்றியுள்ளது.

ரஷ்யாவின் இராணுவ உளவுப்பிரிவில் அதிகாரியாக பணியாற்றியவர் செர்ஜய் ஸ்கிர்பால் (வயது 66). இவர் சில ரஷ்ய உளவாளிகளை இங்கிலாந்து உளவுத்துறையினரிடம் காட்டிகொடுத்தமைக்காக கடந்த 2004ஆம்ஆண்டுமொஸ்கோவில் கைது செய்யப்பட்டார்.

13 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அவரை 2010ஆம் ஆண்டு இங்கிலாந்து மீட்டு அடைக் கலம் கொடுத்தது.

தற்போது இங்கிலாந்தில் வசித்து வரும் ஸ்கிர்பால், கடந்த மாதம் 4ஆம் திகதி சாலிஸ்பரி நகரில் உள்ள ஒரு வணிக வளாகத்துக்கு வெளியே தனது மகள் யூலியாவுடன் (33) மயங்கிய நிலையில் கிடந்தார். அவர்களது உடலில் விஷம் ஏறியிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

தற்போது இருவரும் வைத்தியசாலையில் கவலைக்கிடமான முறையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது ரஷ்யாவின் செயல்தான் என கூறிய இங்கிலாந்து ரஷ்யாவின் 23 தூதரக அதிகாரிகளை உளவுத்துறையினர் என வெளியேற்றியது. ரஷ்யாவும் பதிலுக்கு இங்கிலாந்து தூதரக அதிகாரிகளை வெளியேற்றியது.

ஆனால் விஷத்தாக்குதலை ரஷ்யா மறுத்தது. இவ்விவகாரத்தில் இங்கிலாந்துக்கு ஆதரவாக அமெரிக்காவும் உளவாளிகள் என ரஷ்ய தூதரக அதிகாரிகளை வெளியேற்றியது.

இந்நிலையில் ரஷ்ய அரசாங்கம் மொஸ்கோவில் உள்ள வோஷிங்டன் அமெரிக்க தூதரகத்தின் 60 அமெரிக்க தூதரக அதிகாரிகளை தங்களது நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டது.

இதையடுத்து அரசாங்கம் கொடுத்த காலக்கெடு நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் ரஷ்யாவிலுள்ள அமெரிக்க தூதர்கள் தங்களது குடும்பத்தினருடன் தூதரகத்திலிருந்து வெளியேறி அமெரிக்கா சென்றனர். (10)

# அரசியல் சாசனத்தை மாற்றியமைக்கும் பின் 40 ஆண்டுகளின் பிறகு சவுதியில் திரையரங்கு

(டுபாய்)

சவுதி அரேபியா நாட்டில் 40 ஆண்டுகளுக்கு பிறகு ஏப்ரல் 18 ஆம் திகதி முதல் திரையரங்குகள் செயற்படத் தொடங்கும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

அரபு நாடுகளில் ஒன்றான சவுதி அரேபியாவில் பல்வேறு கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கின்றன. இதில் பொதுவெளியில் சினிமாவுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை முக்கியமானது. மத கட்டுப் பாடுகள் மீறப்படுவதாககூறந்த 1980-களின் தொடக்கத்தில் சினிமாவுக்கு சவுதி அரசு தடை விதித்தது.

தற்போது சவுதியின் பட்டத்து இளவரசராக இருக்கும் முகமது பின் சல்மான், நாட்டில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். குறிப்பாக நாட்டு மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பல்வேறு தடைகளை அவர் விலக்கி வருகிறார். இதில் முக்கியமாக, பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு விதிக்கப்பட்டு இருந்த தடை விலக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து சுமார் 40 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையாக அந்த நாட்டில் சினிமாவுக்கும் அனுமதி வழங்க சவுதி அரசு முடிவு செய்துள்ளது.

இந்நிலையில், சவுதி அரேபியா நாட்டில் 40 ஆண்டுகளுக்கு பிறகு ஏப்ரல் 18ஆம் திகதி முதல் திரையரங்குகள் செயற்படத் தொடங்கும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

கர் ரியாத்தில் ஏப்ரல் 18ஆம் திகதி முதல் சினிமா திரையரங்குகள் செயற்பட தொடங்கும். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இதன்மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் சவுதியில் உள்ள 15 நகரங்களில் 30 முதல் 40 திரையரங்குகள் வரை திறக்கப்படும்.

சினிமா மீதான தடை விலக்கப்படுவதால் பொழுது போக்குத்துறை வளர்ச்சி காணும் என சவுதி அரசு தெரிவித்துள்ளது.

இது நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்பை ஏற்படுத்துவதுடன், பலருக்கு நிரந்தர வேலை வாய்ப்பையும் உருவாக்கும் என அந்நாட்டு ஊடகங்கள்

# விஷவாயு பின்னணியில் ரஷ்யா இல்லை பிரிட்டன் விஞ்ஞானிகள் தகவல்

(மொஸ்கோ)

ரஷ்ய முன்னாள் உளவுத்துறை அதிகாரிஸ் கிரிபால் நரம்பு மண்டலத்தை பாதிக்கக்கூடிய இரசாயனத்தால் தாக்கப்பட்டார். எனினும் அது ரஷ்யா சால் தயாரிக்கப்பட்ட இரசாயனம் என்பதற்கு எவ்வித உறுதியான ஆதாரமும் இல்லை என பிரித்தானிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். எனினும் குறித்த இரசாயனம் இராணுவ தரப்பால் பயன் படுத்தப்படும் Nvichok என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக போட்டோன் டவுண், பாதுகாப்பு ஆய் வகத்தின் தலைமை நிர்வாகி Gary Aitken head, தெரிவிக்கையில், "எம்மால் துல்லியமான ஆதாரத்தை கண்டறிய முடியவில்லை.

ஆனாலும், பல ஆதாரங்களை பயன்படுத்தி முடிவுகளை ஒன்றாக சேர்த்து விஞ்ஞான ரீதியான அறிக்கையை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய பாதுகாப்பு ஆய்வகம் மற்றும் தொழில்நுட்ப ஆய்வக தகவல்களின் பிரகாரம், நரம்பு மண்டலத்தை பாதிக்கக்கூடிய இரசாயனத்தை உருவாக்குவதற்கு அதிநவீன முறைகள் தேவை என்றாலும் எந்த நாட்டில் தயாரிக்கப்பட்டது என்பதை நிபுணர்களால் கண்டறிய முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய முன்னாள் உளவுத்துறை அதிகாரியான செர்கெய் ஸ்கிரிபால் மற்றும் அவருடைய மகள் யூலியா இருவரும் கடந்த மார்ச் மாதம் 4 ஆம் திகதி பிரித்தானியாவில் சோல்ஸ்பெரி பகுதியில் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் நரம்பு மண்டலத்தை பாதிக்கக் கூடிய இரசாயனத்தால் தாக்கப்பட்டே மயக்கமடைந்தனர் என்றும் குறித்த இரசாயனம் ரஷ்யாவால் தயாரிக்கப்பட்டது என்றும் பிரித்தானியா தரப்பில் வெளிப்படையாக குற்றம் சாட்டப்பட்டது. எனினும் இக்குற்றச்சாட்டை ரஷ்யா தொடர்ந்தும் மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (10)

நம்பிக்கையில்லாப் பிரேரணை

# வாக்கெடுப்பு முடிந்ததும் விகாரைக்கு ஓடிய ரணில்



(கொழும்பு)

கூட்டு எதிரணியினரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்த பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கங்காராமய விகாரைக்குச் சென்று வழிபாடு நடத்தினார். பிரதமருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 46 வாக்குகளால் தோல்வியடைந்தது.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் ஒவ்வொருவராக பெயர் அழைத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. முடிவு சுமார் அரை மணிநேரத்தில் அறிவிக்கப்பட்டு, நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து, உடனடியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மைத்திரி விக்கிரமசிங்கவுடன், கங்காராமய விகாரைக்குச் சென்று வழிபாடு நடத்தினார். அவருடன் பெருமளவான ஐ.தே.க. ஆதரவாளர்களும் குழுமியிருந்தனர். (இ-7)

# இலங்கை மகாவலி அதிகார சபைக்கான புதிய நியமனங்கள் வழங்கல் ஜனாதிபதி தலைமையில்

(கொழும்பு)

இலங்கை மகாவலி அதிகார சபைக்குப் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள 147 உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் அபிவிருத்திக்காகவும் மக்களின் நலனுக்காகவும் இலங்கை மகாவலி அதிகார சபை எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக புதிய உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என நம்பிக்கை தெரிவித்தார்.





மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க, இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சரத் சந்ரசிறி விதான உள்ளிட்ட பணிப்பாளர் சபையினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7-9)

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கட்டுப்பாடுகள் இன்றி அதிகரிப்பு-டக்ளஸ்

(கொழும்பு)

அத்தியாவசிய மற்றும் அன்றாடத் தேவைகளுக்கான பொருட்களின் விலைகள் எவ்விதமான கட்டுப்பாடுகளும் இன்றி அதிகரித்துப் போகின்ற நிலைமை நாட்டில் காணப்படுகின்றது. இறக்குமதி மீன்களின் விலையேற்றம் காரணமாக, உள்நாட்டு மீன்களின் விலைகளும் அதிகரித்து விற்கப்படுகின்றன என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான விவாதம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


அண்மையில் சீமெந்து பக்கெற் ஒன்றின் விலையானது 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது.

சீமெந்து விற்பனையாளர்களின் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் இதன்மூலமாக நன்மை கிட்டியுள்ள நிலையில், ஏனைய சீமெந்து விற்பனையாளர்களுக்கு இது பெரிதும் அநீதியை இழைத்துள்ள விலை அதிகரிப்பாகவே இது காணப்படுகின்றது.

50 கிலோ மற்றும் அதற்கும் குறைவான சீமெந்து பக்கெற்றுகளாக இறக்குமதி செய்யப்படுகின்ற சீமெந்துக்கு மாத்திரம் நூற்றுக்கு 14 வீதமான செஸ் வரி விதிக்கப்பட்டு, 50 கிலோவுக்கு மேற்பட்ட சீமெந்து பக்கெற்றுகளின் இறக்குமதிக்கு முன்பிருந்த வகையிலான நூற்றுக்கு 8 வீதமான செஸ்வரியே விதிக்கப்படுகின்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே, உரிய காலங்களில் உரிய நடவடிக்கை எடுத்து, பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தாமல், அனைத்துக்காலங்களிலும் வரிகளை அதிகரித்துக் கொண்டிருப்பதில் மட்டுமே நீங்கள் அவதானம் செலுத்துவதாகவே தெரிய வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பெரும் சோகத்தில் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கவலை முகங்களை வெளியிட்ட ஹர்ச




(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.

எனினும் விவாதத்தை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் கூட்டு எதிர்க்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் முகம் சோகமடைந்து காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களின் சோகத்தை வெளிப்படுத்தும் வகையில், இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா டுவிட்டரில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் இது தொடர்பில் புகைப்படம் ஒன்றை பதிவிட்டு, நம்பிக்கையில்லாப் பிரேரணை ஐக்கிய தேசிய கட்சியினால் தோல்வியடையச் செய்யப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### ஒருவரை எதிர்க்கும் முன்...

எதற்கெடுத்தாலும் சண்டை போடுகிறவர்களாகவும் எல்லாவற்றுக்கும் சரிசரி என்கிறவர்களாகவும் நாம் இருந்துவிடக் கூடாது.

எதிர்க்க வேண்டியதை எதிர்க்க வேண்டும். கையாலோ ஆயுதங்களாலோ அல்ல. மனத்தால், வாதத்தால், கருத்தால் எதிர்க்கலாம்.

உலக வரலாற்றை எடுத்துக் கொண்டால் ஒருசில தனிமனிதர்கள் பெரிய பெரிய சாம்ராச்சியங்களையே எதிர்த்துப் போராடி இருக்கின்றார்கள்.

இவர்களுக்கு பின்பலங்களாக இருந்தவை ஆள் பலமோ வேறு எதுவுமோ அல்ல. அவர்கள் பக்கம் இருந்த நியாயம் மற்றும் அவர்கள் கருத்தில் அவர்களுக்கு இருந்த தீவிரம்.

எனவே ஒருவரை எதிர்க்கும் முன் தன்பக்கம் நிச்சயம் நியாயம் இருக்கிறது என்று மனச்சாட்சியை அளவு கோலாகக் கொண்டு முடிவு செய்ய வேண்டும். அது மட்டுமல்ல சுற்றியிருப் பவர்களோ கேள்விப்படுகிறவர்களோ நம் பக்கம் நியாயமிருப்பதாக நம்ப வேண்டும்.

வேறு வகையில் சொல்வது என்றால், ஒரு வேளை நாம் தோற்றாலும் நியாயம் தோற்றதாகத்தான் மற்றவர்கள் கருத வேண்டுமே தவிர நாம் தோற்று விட்டதாகக் கருத இடமிருக்கக் கூடாது.

எதிரியின் பலத்தைக் குறைத்தோ நம் பலத்தைக் கூட்டியோ மதிப்பிட்டு விடுபவர்கள் இறுதியில் மண்ணைக் கவ்வுகிறார்கள். இந்த விடயத்திலும் எச்சரிக்கை தேவை. எதிர்பாராத விதமாகத் தோற்றுவிட்டால் அதனால் ஏற்படும் மனக்காயங்களைத் தாங்கிக் கொள்ளும் பக்குவம் நம்மிடம் இருக்கிறதா? என்று யோசிக்க வேண்டும். அப்படித் தோல்வி கண்ட பிறகு நம் காயங்களுக்கு ஒத்தடம் தர எவரேனும் கிடைப்பார்களா? என்பதைப் பற்றியும் நாம் அக்கறை காட்டுவது நல்லது.

தாங்கவும் முடியாமல் ஒத்தடம் தரவும் ஆள் இல்லாமல் வீணாக மோதுவானேன்? இதற்குப் பதிலாக தர்மம் ஜெயிக்கிறபோது ஜெயிக்கட்டும் என விட்டு விடலாம். பேருக்கு எதிர்ப்பது, போலியாய் நடந்து கொள்வது, நினைத்தால் பின்வாங்குவது ஆகியவை போராடும் குணம் உள்ளவர்களுக்கு இருக்கக் கூடாத பண்புகள்.

ஆற அமரவும் நன்கும் தீவிரமாகவும் யோசித்து எதிர்ப்பது என்கிற முடிவுக்கு வந்துவிட்டால் அதில் பின்வாங்கக் கூடாது. உறுதியாக எதிர்க்க வேண்டும். தீவிரமாக எதிர்க்க வேண்டும்.

இந்த உறுதி எதிரிக்கு மிகப் பெரிய பயத்தைத் தோற்றுவித்துப் பலவீனமாக்கிவிடும். அப்புறம் வெற்றி நமக்குத்தான் என்பதைச் சொல்லவா வேண்டும்?

**லேனா தமிழ்வாணன்**

# பாடசாலைகளுக்கான விடுமுறை அறிவிப்பு

(கொழும்பு)

அனைத்து தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் பாட சாலைகளிலும் முதலாம் தவணைக்கான விடுமுறை அறிவிக்கப்பட்டு ள்ளது.

தமிழ் மற்றும் சிங்கள பாட சாலைகளுக்கு, ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டு 2 ஆம் தவணை ஏப்ரல் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் முஸ்லிம்பாடசாலைகளுக்கு 11ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டு, ஏப்ரல் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ-7)

# பிரதமர் ரணிலுக்கு எதிரான பிரேரணை தோல்வியடைந்ததால் மூவர் படுகாயம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மேலதிக 46 வாக்குகளால் வெற்றி பெற்றதையடுத்து வெற்றிக்களிப்பில் ஈடுபட்ட மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் புத்தளம் முந்தல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம் பெற்றிருக்கிறது.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் கார் ஒன்றும் மோதியதில் இந்த விபத்து நேர்ந்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த மூவரில் இருவர் சிலாபம் வைத்தியசாலையிலும், ஒருவர் உடப்பு வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆராய்ச்சிக்கட்டு பிரதேச சபையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவரது ஏற்பாட்டில் இடம் பெற்ற வெற்றிக் களிப்பின் போது இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றிருப்பதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

# பிரதமர் ரணிலுக்கு எதிரான மகிந்தவின் செயற்பாட்டால் பிளவுபட்டது சுதந்திரக் கட்சி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக மகிந்த தரப்பினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

நம்பிக்கையில்லாப் "பிரேரணை குறித்து நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற வாக்கெடுப்பில் சுதந்திரக் கட்சியின்ர் தங்களது வெவ்வேறான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்த நிலையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வாக்கெடுப்பில் சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

இதேவேளை, 23 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் ஒதுங்கிக் கொண்டனர்.

சுதந்திரக் கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த போது, மகிந்த அணியினர் பெரும் ஆரவாரம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு கேள்வி அறிவித்தல்

தலைவர்,மாவட்ட பெறுகைக்குழு/ மாவட்ட உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு சார்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கீழ் உள்ள குளங்கள், வாய்க்கால்கள், அணைக்கட்டுக்கள் புனரமைப்பு வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.

- நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் உள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
- நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
- ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு எனும் முகவரியில் 05.04.2018 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.30 வரை விலைக்கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆங்கிலமொழி மூலமான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியினை முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 05.04.2018 முதல் 23.04.2018 வரை வேலைநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.30 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000.00 ரூபா கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், மாவட்ட பெறுகைக்குழு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 23.04.2018 ஆம் திகதியன்று பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தினை தபால் உறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் 23.04.2018 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி (Original) தனியாகவும் நகல் (copy) தனியாகவும் இரு உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்குஅமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்வியானது (Bid) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு (Bid Security) 23.07.2018 ஆம் திகதி வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.
8. VAT பதிவு பத்திரம் உள்ளவர்கள் Bid உடன் இணைக்கவும். இணைக்காத பட்சத்தில் VAT கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.
9. கீழ் குறிப்பிடும் வேலைகளுக்கான உங்களுடைய வாகன தகவல், வங்கி கணக்கு அறிக்கை, கடந்த கால வேலை விபரங்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தரின் முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.
10. குறித்த வேலைகளுக்கான முதற் கூட்டம் (Pre bid meeting) 17.04.2017 திகதி முற்பகல் 10.00 கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு கேள்வி மனுசமர்ப்பிக்க எதிர்பார்ப்போர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டியது கட்டாயம் ஆகும். கூட்டத்துக்கு சமுகமளிப்பவருக்கு மதிப்பீட்டின் போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டு தொகை (மில்லியனில்வரி நீங்கலாக ) | கேள்விப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | வேண்டப்படும் ICTAD தரம்/ பதிவு | கேள்விப் பிணைத் தொகை | கமநல சேவை நிலையம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | MU/DAD/Tender/2018/ 39-01 | ஆற்றங்கடவை அணைக்கட்டு | 4.28Mn | | | 43,000.00 | குமுழமுனை |
| 02 | MU/DAD/Tender/2018/ 39-02 | கருவப்பமுறிப்பு Stage I | 3.53Mn | | | 36,000.00 | ஒட்டுசுட்டான் |
| 03 | MU/DAD/Tender/2018/ 39-03 | கருவப்பமுறிப்பு Stage II | 3.80Mn | 23/07/ 2018 | C8 அல்லது அதற்கு மேல் | 40,000.00 | ஒட்டுசுட்டான் |
| 04 | MU/DAD/Tender/2018/ 39-04 | இயங்கன்குள அணைக்கட்டு | 4.24Mn | | | 43,000.00 | முள்ளியவளை |
| 05 | MU/DAD/Tender/2018/ 39-05 | புலுமச்சிநாதி குளம் | 2.62Mn | | | 30,000.00 | ஒட்டுசுட்டான் |
| 06 | MU/DAD/Tender/2018/ 39-06 | பேராறு அணைக்கட்டு | 4.25Mn | | | 43,000.00 | ஒட்டுசுட்டான் |

தலைவர்,
மாவட்ட பெறுகைக்குழு,
கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
முல்லைத்தீவு.

(சி-2131)

# ரணிலின் விருந்து



(கொழும்பு)

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு இடம்பெறுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்னர் பிரதமர் தலைமையில் நடைபெற்ற தேநீர் விருந்துபசாரத்தில் கலந்துகொண்டவர்களின் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள அமைச்சர்களும், உறுப்பினர்களும் நேற்று முன்தினம் இந்த தேநீர் விருந்தில் கலந்து கொண்டிருந்தனர்.

அமைச்சர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரஞ்ஜித் மத்தும பண்டார, தலதா அத்துகோரள, நளின் பண்டார, ராஜித சேனாரட்ன உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

# ரணிலுக்கு தமிழில் ஆதரவளித்த சுஜீவ

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவின் பதிலினால் பலர் குழப்பமடைந்தனர்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற வாக்கெடுப்பின் போது சிங்கள அமைச்சர், உறுப்பினர்கள் தங்கள் தாய் மொழியில் வாக்குகளை வழங்கி யிருந்தனர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் "ஆம்" "இல்லை" என வாக்களித்திருந்தனர்.

இந்நிலையில் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க சிங்கள மொழியை மறந்து விட்டு "இல்லை" என தமிழில் எதிர்ப்பு வெளியிட்டிருந்தார்.

இதன்போது அங்கிருந்த அனைவரும் குழப்பத்துடன் அவரை நோக்கி பார்த்துள்ளனர். பின்னர் சிங்களத்தில் தனது வாக்கினை மீண்டும் பதிவு செய்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பு தேசிய தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந் நிலையில் இலட்சக்கணக்கான இலங்கை மக்களின் அவதானம் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க மீது திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 14

பரமசாமி பஞ்சாட்சரம்

அவற்றில் சாதாரண மக்களில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிச் சுவாமி யோகேஸ்வரானந்தா தனது நூலில் எழுதியுள்ளதைக் கீழே பார்க்கலாம்

1. ஆத்மீகப் பரிசுத்தம்-The Spiritual Cleansing
2. ஆத்மீக மனம்-The Spiritual Mind
3. ஆத்மீக ஈர்ப்பு-The Spiritual Pull
4. ஆத்மீக அழைப்பு-The Spiritual Call

**ஆத்மீகப் பரிசுத்தம்**
**Spiritual Cleansing**

ஒருவர் மானசரோபர் ஏரியில் தீர்த்தமாடுவதால் அவருடைய ஆத்மா பரிசுத்தமடைகின்றது. ஆன்மா பரிசுத்தமாதல் என்றால் மலபரிபாகத்தின் ஆரம்ப நிலை என்று சுவாமி யோகேஸ்வரானந்தா எழுதுகிறார். அதாவது பாவங்கள் நீங்கி எது மாயை, எது நிரந்தரம் என்ற உண்மையை அறிகின்றது. சுத்தமான எண்ணமும் சுத்தமான விசாரணையும் சுத்தமான உணர்வும் ஏற்பட்டு மனிதன் தூய்மை ஆகிறான். இந்த இயற்கையான புனித நீர் கயிலைநாதனின் முடியிலிருந்து வருகின்றபடியால் அங்கு நீராடுபவருக்கு தெளிவு ஏற்படுகின்றது. அவர் நிலையான உண்மையை அறிந்து நிதானமாகவும் அமைதியாகவும் தெளிந்த அறிவுடனும் மற்றவர்களுக்குத் துன்பத்தை ஏற்படுத்தும் காரியங்களை செய்யாமலும் வெகு சாதாரணமான பிரச்சினைகளுக்காக அர்த்தமற்ற சஞ்சலம் கொள்ளாமலும் தனது மிகுதி வாழ்க்கையை சிறப்பாக நடத்துவார் என்பதும் ஒன்றாகும்.

**ஆத்மீக மனம்**
**Spiritual Mind**

கயிலையை வலம் வந்து தரிசித்தவர்களுக்கு மனதில் பாரம்குறைந்த மாதிரியான ஒரு உணர்வு, நிறைந்த மனம், ஆராயும் திறன், தளம்பாத உள்ளம், எதையும் கூர்மையான புத்தியுடன் பார்க்கும் திறன், எப்பொழுதும் விழிப்புணர்வுடன் இருக்கும் தன்மை ஆகியவை ஏற்படும். இவை ஏற்படும் போது உண்மையில் தான் யார் என்ற



மெய்யறிவு பிறக்கும். இதை ஆத்மீக மனம் என்கிறார் சுவாமி யோகேஸ் வரானந்தா.

கயிலையிற் கிடைக்கும் இந்த அருள் நிரந்தரமானதல்ல. இதை நிரந்தரமாக்குவதற்கு எது செய்ய வேண்டியவை, எது செய்யக் கூடாதவை என்று தெரிந்து மனதில் உறுதியை ஏற்படுத்த வேண்டும். பின் அதை நடைமுறைப் படுத்திக் கட்டுப்பாடுடன் இருக்க வேண்டும். அத்துடன் தொடர்ந்து தினமும் தியானமும் செய்ய வேண்டும்.

இது சாதாரண யாத்திரிகர்களுக்கு மட்டுமல்லாமற் சுவாமிகளுக்கும் பொருந்தும் என்கிறார் சுவாமி யோகேஸ்வரானந்தா.

**ஆத்மீக ஈர்ப்பு**
**Spiritual Pull**

ஒருவருக்குக் கிரிவலத்தின் போது ஆத்மீக ஈர்ப்பு ஏற்பட்டால் அவருக்கு ஆத்மீக மேம்பாடும் உயிர்களிடத்திலே பலனை எதிர்பாராத அன்பும் ஏற்படுகின்றது. அன்பே சிவம் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. சிவன் எல்லா உயிர்களிலும் இருக்கின்றான் என்பதும் எல்லோரும் அறிந்ததே. ஒருவருக்கு ஆத்மீக ஈர்ப்பு ஏற்படும் போது மனதில் இருக்கும் இந்த உண்மை வெளிப்பட்டு அவருக்கு மற்றவர்களிடம் அன்பு காட்டும் தன்மை அதிகரிக்கின்றது.

கயிலாச மலையை விட உயர்ந்த பல மலைகளை ஏறிய "சுவான் அனுரக்" (Swarn Anurag) என்பவர் கயிலாச மலையை வலம் வரும் போது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றி விபரிக்கும் பொழுது அங்கு ஆன்மீக ஈர்ப்பைத் தான் நன்கு உணர்ந்ததாகத் தனது நூலில் எழுதியுள்ளார்.

(தொடரும்)

# பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம்

வடமொழியில் "பல்குணி" என்று சொல்லப்படும் மாதமே தமிழில் "பங்குனி" என வழங்கப்படுகின்றது. இதனைப் "பால்குணமாதம்" எனவும் அழைப்பர். பனிக்குளிர் நீங்கி மரங்கள் துளிர் விடத் தொடங்கும் மாதம் தென்றல் வீசும் காலம் என்பதால் பால்குணமாதம் என அழைக்கப்பட்டிருக்கலாம். சித்திரை முதல் பங்குனி வரையுள்ள பன்னிரு மாதங்களே தமிழில் ஒரு வருடமாகும். அப்பன்னிரு மாதங்களும் பன்னிரு இராசிகளுக்குமுரியனவாகக் கொள்ளப்படுகின்றன.

பங்குனி உத்திரத்தில் சிவாலயங்களில் சிவவழிபாடு நடைபெறுகின்ற போது, அம்மன் ஆலயங்களில் பங்குனி மாதத்தில் வரும் திங்கட் கிழமைகள் தோறும் குளிர்த்தி எனும் கிராமியப்பண்பாட்டுடனான பக்தி வழிபாட்டு முறைமை அனுட்டிக் கப்படுகின்றது. இக்காலத்தில் அபிடேகம், பொங்கல், படையல், பழ மடை, நீர்ச்சோறு, தயிர்ச் சாதம், பாற்கொழுக்கட்டை என்பன ஆலயச் சூழலில் தயாரிக்கப்பட்டு அன்னைக்கு நிவேதனம் செய்யப்படுகின்றன. ஆனாலும் இவ்விழாக்கள் கண்ணகை அம்மன் ஆலயங்களிலேயே சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் தென்மராட்சியில் மட்டுவில் வடக்கிலே கோவில் கொண்டிருக்கும் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்திலே பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவமானது மிகுந்த பக்தி சிரத்தையோடு நடைபெற்று வருகின்றது. முழுக்க முழுக்க வயல் நிலங்களும் தோட்டங்களும் சூழ்ந்திருக்கின்ற மருதநிலச் சாரலில் அமைந்திருக்கும் இக் கோவிலில் எழுந்தருளியிருக்கும் அம்பாளின் கருணை அற்புதத்திற்கு ஈடு இணை இல்லை என்றே கூறிவிடலாம்.

பங்குனி மாதம் பிறந்துவிட்டால் யாழ்ப்பாண மாவட்டமே ஏன், இலங்கைத் திருநாடே அன்னையின் புகழைப் பேசத் தொடங்கி விடும். அது மட்டுமன்றி அன்னையின் கருணை பற்றித் தெரிந்தவர்கள் தம் உறவுகளோடு திங்கட்கிழமை தோறும் நீண்ட தூரப் பயணம் செய்து கோவிலுக்கு வருகைதந்து அன்னையின் அருளைப்பெற்றும் நேர்த்திகள் நிறைவேற்றியும் பொங்கல் படையல் செய்து பசித்தோர்க்குப் பசிபோக்கித் தாமும் உண்டு ஆனந்தங் கொண்டு அன்னையின் புகழ் பாடித் தொழுதேத்துவர். இன, மத, மொழி பேதமின்றி அனைத்து மக்களும் வந்து வழிபட்டு அருள் பெறும்



தலமாக மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் கோவில் விளங்குகின்றது.

பன்றித்தலைச்சி என்ற பெயர் வரக்காரணமான கர்ணபரம்பரைக் கதையே அம்பாளின் தெய்வீகத்தை நன்கு வெளிப்படுத்துவதாக அமைந்து விடுகின்றது. அன்னையின் அருளுக்குப் பாத்திரமான புலையன் ஒருவன் தனது ஈட்டியை பன்றியை நோக்கி எறிந்தபோது, அதில் தவறுதலாகப் பசு ஒன்று சிக்கி உயிரிழந்து விடுகின்றது. பசுக்கொலை தண்டனைக்குரிய குற்றமாகையால், அறியாமல் செய்த தவறுக்காக அம்பாளிடம் வேண்டித் தொழுதழுதுவிட்டு இறந்த பசுவைப் புதைத்து விட்டு துயரத்தோடு வீட்டுக்குச் சென்று கண்ணயர்ந்து நித்திரை செய்தபோது அம்பாள் புலையனின் கனவில் தோன்றி "பயப்படாதே நாளை பசுத்தலை பன்றித்தலையாக மாறியிருக்கும்" எனத் திருவாய் மலர்ந்தருளினார். மறுநாள் விசாரணைக்குழுவின் முன்பாக பசு புதைக்கப்பட்ட இடம் தோண்டி எடுக்கப்பட்டபோது பசுத்தலை பன்றித்தலையாக மாறியிருந்த அதிசயம் கண்டு அன்னையின் அருளினை வியந்து கோவிலைப் பொலிவுடன் அமைத்து வழிபட்டு வந்ததாகவும் அன்று முதல் "பன்றித்தலைச்சி" என்ற திருநாமம் கொண்டு வழிபடப்படுவதாகவும் அக்கர்ண பரம்பரைக்கதை அமைந்திருக்கின்றது.

இன்று ஸ்தூபியுடன் நீராவி மண்டபம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், ஸ்தம்பமண்டபம், வசந்தமண்டபம், மணிமண்டபம், யாகசாலை, பரிவார தெய்வங்கள், சூரியன், சந்திரன், இராஜகோபுரம், மணிக்கோபுரம், முப்பிரகாரங்கள், மதில்கள் எனப் புதுப்பொலிவுடன் ஆகமவிதிகளுக்குட்பட்டதாக, ஆறு காலப்பூசைகள் நடைபெறும் ஆலயமாகச் சரித்திரப்பிரசித்தி பெற்றுத் திகழ்கின்றது. எனினும் மக்கள் பாரம்பரிய மரபுகளிலிருந்து நீங்காது பொங்கல், படையல், நேர்த்திக்கடன் செலுத்துதல் எனப் பல்வேறு வழிபாடுகளிலும் ஈடுபட்டு அன்னையின் அருள் பெற்று மகிழ்கின்றனர்.

பன்றித்தலைச்சி அம்பாள் ஆலய மஹோற்சவம் மார்கழித் திருவெம்பாவை காலத்திலே கொடியேற்றப்பட்டு தேர், தீர்த்தம் என்பவற்றோடு சிறப்பாக நடைபெறுகின்றமை சிறப்பானதாகும். ஆனாலும் அந்த மஹோற்சவத்திற்கில்லாத பெருஞ் சிறப்பு பங்குனி மாதப் பொங்கல் உற்சவத்திற்கு வழங்கப்பட்டிருப்பது அன்னையின் அருளுக்கும் பங்குனி மாதத்தின் சிறப்பிற்கும் ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.

பங்குனி மாதத்தில் வரும் திங்கட்கிழமைகள் மிக மிகப் புதுமை மிக்க நாட்களாக மக்கள் கருதி அன்னையின் அருள் பெறக்கூடுவது சிறப்பானதாகும். வீட்டிலிருந்து எவ்வித முன்னாயத்தமுமின்றிக் கோவிலுக்கு வரும் அடியவர்கள், பானை வாங்கிப் பொங்கலுக்குரிய பொருட்கள் வாங்கிப் பொங்கல் செய்வர். பொங்கல் புகையானது சுமார் 10 கிலோமீற்றருக்கு அப்பால் நின்று பார்க்கும் போதும் வானளாவ உயர்ந்து கிளம்புவதைக் காணலாம் 'தேவர்கள் அன்னையின் பொங்கல் உற்சவம் காண வந்தது போல பக்தர்கள் எண்ணி நம்பிக்கை யோடு வழிபடுவதைக் காணுந் தோறும் எல்லையில்லாத பக்தி வெள்ளத்தில் மிதப்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. பொங்கலோடு கோவிலைச் சூழவுள்ள தோட்டங்களில் நன்கு விளைந்திருக்கும் இலங்கை முழுவதும் பேசப்படும் மட்டுவில் கத்தரிக்காய் வாங்கி பாற்கறி சமைத்து அன்னைக்கு நிவேதனம் செய்து தாமும் உண்டு அடியவர்களையும் உண்பித்து பானை முதலியவற்றை வறியவர்களுக்குக் கொடுத்து தாம் ஆலயத்திற்கு வந்தவேளையைவிடப் புதுப் பொலிவோடும் மனத்திருப்தியோடும் வீடு செல்வர். இது பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தின் மகிமை மிக்க விடயமாகும்.

இரண்டாம் திங்களில் சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கூடி நேர்த்திகள் செய்து வழிபட்டு அருள்பெற்றுச் செல்வர். மூன்றாம் திங்கள் பரந்த ஆலயத்தின் சூழல் பக்தர்களால் நிறைந்திருக்கும். சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அடியவர்களின் வருகையால் ஆலயச்சூழல் தெய்வீகம் பெற்றுத்திகழும். காவடிகள், தூக்குக் காவடிகள், பறவைக் காவடிகள் என்பவற்றால் ஆலய வீதிகள் மட்டுமன்றி கிராமத்து வீதிகள் கூட திருவிழாக் கோலம்பூண்டு பக்தர்களால் நிறைந்திருக்கும். நாலாம், ஐந்தாம் திங்கள் கணக்கிட முடியாத அளவிற்கு பல்லாயிரக்கணக்கான பக்தர் கூட்டம் ஆலய வளாகத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும். பங்குனித்திங்கள் காலத்தில் ஆலயத்திற்கு வர முடியாதவர்கள் தொடர்ந்து வருகின்ற திங்கள் தோறும் வருகைதந்து வழிபாட்டில் ஈடுபடுவர். குறிப்பாக கோவிலின் அயலில் இருப்போர், தூர இடங்களிலிருந்து வருவோர் நேர்த்திகளைச் செய்வதற்கு இடங்கொடுத்து தாம் அடுத்துவரும் மாதங்களில் வரும் மாதங்களில் வரும் திங்கட் கிழமைகளில் நேர்த்திகளைச் செய்து வழிபட்டு மகிழ்வர்.

"இறைபணியே இன்பப்பணி"

**கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்**
செயலாளர்
மட்டுவில் இந்து இளைஞர் மன்றம்.

# வடக்கிலிருந்து ராணுவம் வெளியேற 880 மில்லியன் ரூபாய் நிதி கோரல்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். தெல்லிப்பழை பிர தேச செயலகத்தில் நேற்று இடம் பெற்ற மீளக் குடியேறிய கடற்றொழிலாளர்களுக்கு உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கில் கடந்த நான்கு தசாப்தகாலமாக பல இலட்சம் மக்கள் பாதிக்கப் பட்டுள்ளார்கள். அவர்களது வாழ்வாதாரத்தையும் வீட்டுத் திட்டங்களையும் முன்னேற் றமடைய செய்ய வேண்டிய உள்ள நிலை ஏற்பட்டுள்ளது. யுத்தத்தினால் இந்தியா விற்கு சென்ற மக்களில் மீண்டும் வருவதற்காக 60 ஆயிரம் மக்கள் பதிவு செய் துள்ளனர்.

இவ்வாறு வருகைதரவு ள்ள மக்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண் டியுள்ளது. அம் மக்களுக்கும் மற்றும் மேலும் இங்குள்ள மக்களுக்குமாக மொத்தம் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் வீடுகள் அமைத்துக்கொடுக்க வேண்டியுள்ளது. இதன்படி கடந்த 2016 ஆம் ஆண்டு 14 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 60 வீத மான பணமானது மிக அத் தியாவசிய தேவையான வீடு களை அமைப்பதற்கு பயன் படுத்தப்பட்டது. அதனூடாக 12,700 வீடுகள் கட்டப்பட் டன.

அதேபோன்று 2017 ஆம் ஆண்டு 9 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 5 ஆயிரம் வீடுகள் மாத்திரமே கட்டப்பட்டிருந்தன. ஒதுக்கப் பட்ட பணங்களில் மீதமாகிய 40 வீதமான பணமே ஏனைய உட்கட்டமைப்புக்களுக்காக பயன்படுத்தப்பட்டன. தற்போது 3 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியில் வீடமைப்பு அதிகார சபை ஊடாக செய்வதற்கு அர சாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஆனால் அது எந்தளவு தூரம் எமது மக்களுக்கு சாத் தியமாகும் என்பது எமக்கு தெரியாது.

இந்த வருடம் வீடுகளை அமைப்பதற்கு எம்மிடம் பணம் இல்லை. அதனால் வெளிநாட்டு நிறுவனங்க ளோடு பேசி வருகின்றோம்.

மேலும் கடந்த கால நிலை மைகளால் மக்கள் இழந்த வற்றில் ஏதாவது ஒன்றிற்கா வது இழப்பீட்டினை வழங் குவதற்கு நாம் தீர்மானித்துள் ளோம். இதற்காக எம்மிடம் 32ஆயிரத்து 800 கோவை கள் தேங்கி கிடக்கின்றன. அவற்றில் எமது இலக்கு 19 ஆயிரம் கோவைகளையா வது நிறைவு செய்ய வேண் டும் என்பதேயாகும். அவற் றில் மாதத்திற்கு 2000 கோவை கள் வீதம் பூர்த்தி செய்ய வேண்டும். எனவே அதில் உள்ள சிறு சிறு தவறுகளை திருத்தி அவற்றை விரை வாக பூர்த்தி செய்ய அதிகா ரிகள் ஒத்துழைக்க வேண்டி யதுடன் அதற்காக நடமாடும் சேவையையும் ஆரம்பிக்க வுள்ளோம்.

காணியற்ற மக்களுக்கு காணிகளை கொள்வனவு செய்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதற் காக அரசாங்கத்திற்கு 680 மில்லியன் ரூபா நிதி தேவைப் படுகின்றது. இவற்றைவிட மீளக் குடியமர்ந்த மக்களு க்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதே பிரச்சினையாக வுள்ளது.

அதற்காக வடக்கு கிழக்கில் தொழிற்சாலை களை அமைப்பதற்கு கலந்தா லோசித்து வருகின்றோம். மாங்குளம், மட்டக்களப்பு, பூநகரி போன்ற இடங்களில் தொழிற்சாலைகள் அமை க்கப்படவுள்ளன.

தொழிற்சாலைகளில் கட் டாயமாக வடக்கில் இருந்து 1000 பேருக்கும் கிழக்கில் இருந்தும் 1000 பேருக்கும் வேலைவாய்ப்புக்கள் வழங் கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம். அவ் வாறு தொழில்களை வழங்கு வர்களுக்கே வீட்டுத்திட்டத் தினை அமைப்பதையும் கொடுக்கவுள்ளோம். எட்டு மாவட்டங்களிலும் உற்பத்தி வலயங்களை அமைக்க வுள்ளோம்.

மேலும் படையினர் வச முள்ள காணிகளில் 530 ஏக்கர் காணிகளை மீள பொதுமக்களிடம் ஒப்படை ப்பதற்கு இராணுவம் 880 மில்லியன் ரூபா நிதி கோரி யுள்ளது. இது தொடர்பாக நாம் நிதி அமைச்சோடு பேசி யுள்ளதுடன் இந்நிதியை பெற்று அக் காணிகளை மீள பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரங் களை தயாரித்து வருகின் றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## 99வது பிறந்தநாளை கொண்டாடிய பிரபல சிங்கள திரைப்பட இயக்குநர்
## ஜனாதிபதி பங்கேற்பு



(கொழும்பு)

உலகப் புகழ் பெற்ற இல ங்கை திரைப்பட இயக்குநர் கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் தனது 99 ஆவது பிற ந்த தினத்தை நேற்று கொண் டாடினார். இந்நிலையில் கொழு ம்பு திம்பிரிகஸ்யாய பிரதேச த்தில் உள்ள அவரது வீட்டு க்கு நேற்றுக் காலை விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வாழ்த்துக் களைத் தெரிவித்துள்ளார்.

லெஸ்டர் ஜேம்ஸ் பீரிசின் சுகநலன் விசாரித்த ஜனாதி பதி, திருமதி சுமித்ரா பீரிஸ் உட்பட குடும்பத்தினருடன் இணைந்து கேக் வெட்டி பிறந்தநாளைக் கொண்டாடி னார். தொடர்ந்து நினைவுச் சின்னம் ஒன்றையும் ஜனாதி பதி வழங்கிக் கௌரவித்தார்.

இலங்கை சினிமாத்து றைக்கு அவர் ஆற்றிய சேவை களை கருத்திற்கொண்டு அவருடைய மருத்துவ செலவு உட்பட செலவுகளுக்காக மாதா ந்தக் கொடுப்பனவு ஒன்றை வழங்குவதற்கான அமைச் சரவை அனுமதியை கடந்த வாரம் ஜனாதிபதி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர்களான ரஞ்சித் மத்துமபண்டார, கலாநிதி சோம ரத்ன திஸநாயக்க, ரேணுக்க பாலசூரிய உட்பட பலர் இப் பிற ந்த தின நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

## ஜேர்மன் பிரஜை மீது சூடு

(கொழும்பு)

கொஸ்கொட பகுதியில் நேற்று முன்தினம் மேற் கொள் எப்படட்ட துப்பாக்கிச் சூட்டில் ஜேர்மன் பிரஜை ஒருவர் படுகாயமடைந்து ள்ளார்.

குறித்த துப்பாக்கிச் சூடு நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் கொஸ்கொட பகுதியிலுள்ள உணவகம் ஒன்றுக்கு அருகில் மேற்கொ ள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடை ந்த ஜேர்மன் பிரஜை நாகொட வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர், குறித்த ஜேர்மன் பிரஜை மீதும் அவ ரின் வர்த்தக பங்குதாரர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்தை அடுத்து துப் பாக்கிதாரிகள் தப்பிச் சென்று ள்ளதாகவும் அவர்களை கைது செய்ய விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள் ளனர். (இ-7)

## உணவு ஒவ்வாமையால் மாணவர்கள் 46 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

அநுராதபுர பிரதேசத் திற்கு கல்விச் சுற்றுலா மேற் கொண்ட மொனராகல பிர தேச மாணவர்கள் 46 பேர் உணவு ஒவ்வாமை காரண மாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் நேற்று அதிகாலை அநுராதபுர வைத் தியசாலையில் அனுமதிக்க ப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ள மாணவர்க ளின் நிலைமை கவலைக்கி டமாக இல்லை என வைத்தி யசாலை பேச் சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (இ)

## தமிழை சாகடிக்கும் அரச திணைக்களம்




(கொழும்பு)

அநுராதபுர மாவட்ட செயலகத்தில் காணப்படும் அளவீட்டு அலகுகளும் நிய மங்களும் சேவைகளும் திணைக் களத்தின் பெயர்ப் பலகையில் தமிழ் மொழி மிகவும் பிழையாக எழுத ப்பட்டுள்ளது.

"அளவீட்டு அல்குகளும, நியமனகளும, சேவைளும திணைச்சுகமை" என எழு தப்பட்டுள்ளதை காணக்கூடி யதாக உள்ளது. அரச திணைக் களங்களி லேயே இவ்வா றாக தமிழ் மொழி பிழையாக எழு தப் படுவதால் பலரும் விச னம் வெளியிட்டு வருகின்றனர்.

அரச கரும மொழிகள் அமைச்சரின் கவனத்திற்கு இந்த விடயம் செல்ல வேண் டும் என மக்கள் தெரிவித் துள்ளனர். (இ-7)

## திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி யின் முன்னாள் பொதுச் செய லாளர், திஸ்ஸ அத்தநாயக்க வுக்கு வெளிநாடு செல்ல, கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கி யுள்ளது.

களனிப் பல்கலைக்கழ கத்தின் கல்வியியலாளர்கள் சங்கம், அவுஸ்திரேலியா வில் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் பங்கேற்க விடுத் திருந்த அழைப்பையடுத்து, இதற்கு அனுமதி வழங்கக் கோரி அவர் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கைக்க மைய இந்த அனுமதி வழ ங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அடுத்த மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை அவுஸ்தி ரேலியாவுக்கு சென்றுவர திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு நீதிமன்றம் அனுமதி வழங் கியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோ ருக்கிடையில், ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தவறாக குறிப்பிட்டு ஆவ ணம் ஒன்றை தயாரித்து அதனை ஊடகங்களுக்கு வழங்கியமை தொடர்பில் இவர் மீது குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (இ-7)

## பாகிஸ்தானில் 139 தீவிரவாத அமைப்புகள்
### ஐ.நாவின் திடுக்கிடும் தகவல்

(நியூயோர்க்)

பாகிஸ்தானில் இருந்து மட்டும் 139 தீவிரவாத அமை ப்புகளின் தலைவர்கள் ஐ.நா பாதுகாப்பு சபையின் தீவிர வாதிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஐ.நா சபையின் பாதுகா ப்பு சபை தீவிரவாத மற்றும் கிளர்ச்சி இயக்கங்கள் குறித்த பட்டியலை அண்மையில் வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் பாகிஸ்தானில் இருந்து மட்டும் 139 தீவிர வாத இயக்கங்களின் தலை வர்கள், பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர்.

ஒசாமா பின்லேடனின் வாரிசு அய்மன் அல்-ஸவா கிரி, லஷ்கர் இ தொய்பா தலைவர் ஹபீஸ் சயீது, இந்தியாவால் தேடப்படும் தாவூத் இப்ராஹிம் ஆகியோர் பாகிஸ்தானில் வாழ்ந்து வருவதாக பட்டியலில் தெரி விக்கப்பட்டுள்ளது. லஷ்கர் இயக்கத்தின் முக்கிய தலை வர்கள் ஹாஜி முகம்மது, அப்துல் சலாம், ஸபார் இக் பால் ஆகியோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

பாகிஸ்தானில் இருந்து கொண்டு ஆப்கானிஸ்தா னில் பல தாக்குதல்களை நடத்தும் பல்வேறு குழுக்கள் இந்த பட்டியலில் இடம் பிடித் துள்ளன.

தீவிரவாத மற்றும் கிள ர்ச்சி இயக்கங்களில் உள்ள முக்கிய தளபதிகளும் இந்த பட்டியலில் உள்ளனர். எனினும், உலகம் முழுவ தும் இருந்து எத்தனை இய க்கங்கள் இடம்பெற்றுள்ளன என்ற தகவல்கள் வெளியாக வில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (10)


# சுண்டிக்குளப் பறவை சரணாலய விரிவாக்கம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகப்பிரிவுகள் குறிப்பாக ஜே/435, சுண்டிக்குளம் கிராம அதிகார பிரிவுள் வரும் சுண்டிக்குளி பறவைச் சரணாலயம் 1939 ஆம் ஆண்டில் இருந்து 24000 ஏக்கர் பரப்பாக இருந்து வந்துள்ளது. மேலும் இப் பறவை சரணலாயம் இறுக்கமான எல்லைகளைக் கொண்டதாக இருந்திருக்கவில்லை. இதன் கிழக்குக் கரையோரத்தில் பருவகால மீன்பிடித் தொழில் நடைபெற்றதுடன் வாடிகளமைத்து மீனவர்கள் வாழ்வதுண்டு.

மேலும் சுண்டிக்குளி கிராமத்தின் வடபகுதியில் ஒரு சில குடும்பங்கள் நிரந்தரமாக வாழ்ந்து வந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. மேற்கில் ஆனையிறவு கடல் நீர் ஏரியில் பருவகால இறால் பிடிக்கும் தொழிலில் மீனவர்கள் ஈடுபட்டு வந்தனர்.

யுத்த காலத்தில் ஆனையிறவில் ஏ-9 பாதை தடைப்பட்ட பொழுது ஊரியன், கொம்படி வழியாக பயணிகள் படகுச் சேவைகள் இடம்பெற்றன. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வாகனப் போக்குவரத்தும் சுண்டிக்குளம் வழியாக குடாநாட்டுக்கும் வன்னிப் பகுதிக்கும் இடம்பெற்று இருந்தது. யுத்தத்தினால் சுண்டிக்குளம், போக்கறுப்பு, முள்ளியான், பெரிய பச்சிலைப்பள்ளி மக்கள் இடம் பெயர்ந்து சென்றதாலும் நீண்டகாலமாக மீள்குடியேற்றம் இடம்பெறாமல் இருந்ததால் இக் கிராமங்கள் புதர் மண்டிய பற்றைக் காடுகளாயின. இச் சூழ்நிலையில் செய்மதிப் படங்களினதும் GPS, GIS போன்ற தகவல் தொழில் நுட்பங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் தாவரப் போர்வையை அடிப்படையாகவும் மற்றும் சுற்றுச்சூழல், பாதுகாப்பு தந்திரோபாயங்களைக் கருத்திற் கொண்டும் இப்பிரதேச மக்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளாது, கிராமங்களின் வரலாற்றுப் பின்னணி அறியாது 2015 பெப்ரவரி 20 ஆம் திகதி வர்த்தமானியின் பிரகாரம் சுண்டிக்குளம் பறவைச் சரணாலயத்தின் (தேசிய பூங்கா) பரப்பளவை 48000 ஏக்கராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாடு மூலம் குடியிருப்பு பகுதிகள், வயல் நிலங்கள், முள்ளியான் றோ.க.த.க. பாடசாலை மற்றும் தனியார் நிலங்கள், மக்கள் பயன்படுத்தக்கூடிய அரச காணிகள் இத் தேசிய இயற்கை ஒதுக்கீட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் போக்கறுப்பு, முள்ளியான் மற்றும் சுண்டிக்குள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பரம்பரை பரம்பரையாக வைத்திருந்த காணிகளை இழக்க வேண்டியதாக இருக்கின்றதுடன் மக்களின் வாழ்வாதாரச் செயற்பாடுகள் கேள்விக்குறியாக இருக்கின்றன.




சுண்டிக்குள பறவைச் சரணாலயம்

1960க்கு முன்பு சுண்டிக்குளம் (இல 151), போக்கறுப்பு, பெரியபச்சிலைப்பள்ளி (இல 150), முள்ளியான் (இல 149) விதானை பிரிவுகளாக பச்சிலைப்பளை காரியாதிகாரி பிரிவுக்குள் இருந்தன. இக் கிராமங்கள் முள்ளிப்பற்று கிராமச் சங்கத்தின் ஒரு பிரிவாக இருந்தன. 1959 இல் பாராளுமன்றத் தேர்தல் தொகுதி மீளாய்வு செய்த பொழுது தொண்டைமானாறு கிராமத்திலிருந்து நல்லதண்ணி தொடுவாய் வரையாக இருந்த கரையோர கிராமங்கள் பருத்தித்துறை தேர்தல் தொகுதிக்குள் கொண்டு வரப்பட்டன. பளைப் பிரிவின் கரையோரக் கிராமங்கள் பருத்தித்துறை தொகுதிக்கு கீழும் முள்ளிப்பற்றுக்கு உட்பகுதி கிராமங்களான கோவில் வயல், இயக்கச்சி, சங்கத்தார் வயல், கொட்டான்டர்குளம், விநாயகபுரம் ஆகியன கிளிநொச்சித் தேர்தல் தொகுதிக்குள் கொண்டுவரப்பட்டன. இதனால் முள்ளிப்பற்று இரண்டு பிரிவுகளாகின. 1983 இல் கிளிநொச்சி மாவட்டம் கிளிநொச்சி தேர்தல் தொகுதி எல்லையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பொழுது சுண்டிக்குளம், போக்கறுப்பு, முள்ளியான் கிராமங்கள் யாழ்ப்பாண மாவட்டத்துக்கீழ் வந்தது. இது ஆரம்பத்தில் வடமராட்சி பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்து பின்னர் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகப்பிரிவு உருவாக்கப்பட்ட பொழுது இப் பிரதேச பிரிவுக்குள் வந்துள்ளன.

இலங்கைக் குடிக்கணிப்புகளின் படி 1911 இல் முள்ளியானில் 387 பேரும் பெரிய பச்சிலைப்பளையில் 10பேரும் போக்கறுப்பில் 217 பேரும் சுண்டிக் குளத்தில் 34 பேரும் இருந்துள்ளனர்.

1921 இல் முள்ளியானில் 330 பேரும் பெரிய பச்சிலைப்பளையில் 123 பேரும் போக்கறுப்பில் 287 பேரும் சுண்டிக்குளத்தில் 37 பேரும் இருந்துள்ளனர்.

1931 இல் முள்ளியானில் 283 பேரும் பெரிய பச்சிலைப் பளையில் 97 பேரும் போக்கறுப்பில் 220 பேரும் சுண்டிக்குளத்தில் 25 பேரும் இருந்துள்ளனர்.

1946 இல் முள்ளியான், பச்சிலைப்பளை, போக்கறுப்பு ஆகிய மூன்று கிராமங்களில் 643 பேரும் சுண்டிக்குளத்தில் 17 பேரும் இருந்துள்ளனர்.

1953 இல் முள்ளியான் பச்சிலைப்பளை, போக்கறுப்பு, சுண்டிக்குளம், கோவில் வயல் ஆகிய பிரிவுகளில் மொத்தமாக 1312 பேர் இருந்துள்ளனர்.

1963 இல் (149) முள்ளியான் கிராமசேவகர் பிரிவில் 1719 பேரும் இல. 151 சுண்டிக்குளம் கிராமசேவகர் பிரிவில் 426 பேரும் இருந்துள்ளனர். 1971 இல் 149 இலக்க முள்ளியான் கிராமசேவகர் பிரிவில் 1991 பேரும் 151 இலக்க கிராமசேவகர் பிரிவில் 283 பேரும் இருந்துள்ளனர்.

1981 ஆம் ஆண்டுக்குரிய கிராம சேவகர் பிரிவு குடித்தொகை கிடைக்கவில்லை.

2012இல் எடுக்கப்பட்ட குடிக்கணிப்புப்படி இல.433 முள்ளியான் கிராம அதிகாரி பிரிவில் 1188 பேரும் இல. 434 போக்கறுப்பு கிராம அதிகாரி பிரிவில் 487பேரும் இல.435 சுண்டிக்குளம் கிராம அதிகாரி பிரிவில் மக்கள் ஒருவரும் இருக்கவில்லை என குடிக் கணிப்பில் காட்டப்பட்டுள்ளது.

சுண்டிக்குளம் கிராம அதிகாரி பிரிவின் வடபகுதியில் சிறு எண்ணிக்கையான குடும்பங்கள் இருந்து வந்துள்ளதை கடந்த கால குடிப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. மேலும் இடம்பெயர்ந்து தொழில் செய்யும் மீனவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். சுண்டிக்குள கிராமத்தின் வடபகுதி நிலங்களில் சுண்டிக்குளப் பிரிவில் வாழ்ந்த குடும்பங்களும் போக்கறுப்பு மற்றும் அயல் கிராம மக்களும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிகின்றது. இதனால் இச்கிராமங்களின் நிலங்கள் இச்கிராம மக்களுக்குரியது. சட்ட பூர்வ மற்று சமூக நியாயங்களைப் புறந்தள்ளி வனஜீவராசி திணைக்களம் செயற்படுவது நியாயமற்ற செயலாகும்.

பறவை சரணாலயம் அமைப்பதற்கு பெருந்தொகையான நிலப்பகுதிகள் தேவையில்லை. நீர்ப்பகுதிகள்கூட தேவையாக இருக்கலாம். மற்றும் மக்களும் பறவைகளும் இணைந்து வாழ முடியும். உதாரணமாக அல்லைப்பிட்டியில் இருந்து ஊர்காவற்றுறை வீதியில் மயிலைப்புலம் வரையுள்ள தரவை நிலங்களில் மாரியில் நீர் தேங்கி நிற்கும் பொழுது வலசைப் பறவைகள் பெரும் எண்ணிக்கையில் இப் பகுதிக்கு வருகின்றன. ஊர்காவற்றுறை வீதிக்கு இரு மருங்குகளிலும் பெரும் எண்ணிக்கையில் பறவைகள் காணப்படுகின்றன. வாகனப் போக்குவரத்துக்கள் இடம் பெற்றுக்கொண்டு இருந்த பொழுது எதுவித பிரச்சினையில்லாமல் பறவைகள் தங்கள் கருமங்களில் ஈடுபடுகின்றன. மக்கள் பறவைகளை பார்த்து ரசிப்பார்கள். நீர்வற்றியதும் பறவைகள் இடம்பெயர்ந்து சென்று விடுகின்றன. இதை முன்னுதாரணமாகக் கொண்டு சுண்டிக்குளப் பகுதியில் மனிதனும் பறவைகளும் இணைந்து வாழக்கூடிய நிலையைத் தோற்றுவிக்க வேண்டுமல்லாதும் மக்கள் காணிகளை உள்நோக்கம் கொண்டு அபகரிக்க முயற்சிக்கக் கூடாது.

முள்ளியான், போக்கறுப்பு, சுண்டிக்குளம் கிராம அதிகாரி பிரிவுகளில் அரச காணிகள் இருப்பதால் இவற்றை காணியற்ற வடமராட்சி கிழக்கு, பளை மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். யாழ்ப்பாண வரலாற்றில் முள்ளிப்பற்று முன்னர் வளர்ச்சி பெற்ற பிரதேசமாக இருந்துள்ளது. இபக்கச்சியை மையமாக வைத்து முள்ளிப்பற்று பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

பருத்தித்துறையிலிருந்து பொத்துவில்- பாணமை வரையான கிழக்குக் கரையோர பெருஞ்சாலை இன்று பெருமளவு முன்னேற்றம் கண்டுள்ளது. பருத்தித்துறையில் இருந்து மருதங்கேணி, அம்பலவன் பொக்கணையில் இருந்து கொக்கிளாய், புல்மோட்டையில் இருந்து பாணமை வரையான வீதிகள் மேம்படுத்தப்பட்டு பாலங்கள் அமைக்கப்பட்டு நல்ல போக்குவரத்து இடம் பெறுகின்றது. எனினும் மருதங்கேணி - அம்பலவன் பொக்கணைப் பிரிவுக்கும் கொக்கிளாய் - தென்னமரவடி பிரிவுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் கிழக்குக் கரையோர வீதி விருத்தியடையாத பாதையாக உள்ளது.கிழக்குக் கரையோர வீதி சுண்டிக்குளம் ஊடாக அமைக்கப்பட்டால் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, பொத்துவில் பகுதிகளுக்கிடையே போக்குவரத்து இலகுவாகும். கிழக்கு கரையோரப் பகுதியை துரிதமாக அபிவிருத்தி செய்ய முடியும்.

எந்திரி ஆறுமுகத்தின் யாழ்ப்பாண ஆற்றுத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் கிழக்கு கரையோரத்தில் சுண்டிக்குளப் பகுதியில் குறிப்பாக நல்ல தண்ணித் தொடுவாயில் தடுப்பணை கட்ட வேண்டும். இத் தடுப்பணை கட்டுவதால் ஆனையிறவு கிழக்கு நன்னீர் ஏரியில் நீர் மட்டம் உயரும். இதன்மூலம் பறவை சரணாலயம் பெரும் நன்மை பெறும். வருடம் முழுவதும் இந்த நீர்த்தேக்கத்தில் நீர் நிற்பதால் ஒரு பகுதி பறவைகள் இடம்பெயராது இங்கேயே தங்கி நிற்கும் நிலை ஏற்படும்.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

எந்திரி ஆறுமுகத்தின் திட்டத்தை செயற்படுத்த ஆனையிறவு நீர் ஏரியையும் வடமராட்சி ஏரியையும் இணைக்க மண்டலாய் கால்வாய் அமைக்கப்பட்டு ஆனையிறவு ஏரியின் நீர் வடக்கு நோக்கி தொண்டைமானாறு ஊடாகப் பாயும் நிலையை ஏற்படுத்த வேண்டும். இத் திட்டத்தின் மூலம் குறிப்பாக முள்ளிப்பற்று பிரதேசம் அபிவிருத்தியடைய நிறைய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.

அரசாங்கம் சுண்டிக்குள பறவைச் சரணாலய விரிவாக்கத்துக்கு மேலதிகமாக எடுத்த 24000 ஏக்கர் நிலப்பகுதியை கைவிட வேண்டும். இவை பிரதேச மக்களினுடைய காணிகளாகவும் அவர்களின் சமுதாயக் காடுகளை உள்ளடக்கியதாகும். மேலும் மக்களும் பறவைகளும் முரண்படாமல் வாழும் நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். இதற்கு சிறந்த உதாரணமாக தீவுப்பகுதியில் அல்லைப் பிட்டி, மண்கும்பான், வேலணை வடக்கு, கண்ணாவுடை மயிலைப்புலம் பகுதிகளைக் குறிப்பிடுகின்றன.

சுண்டிக்குள சரணாலய விரிவாக்கத்தை கைவிடுவது போல ஜே/423 காணிகள் நாகர்கோயில் கிழக்கு, ஜே/424 காணிகள் நாகர் கோயில் மேற்கு, ஜே/425 காணிகள் நாகர் கோயில் தெற்கில் இயற்கை ஒதுக்கு அமைக்க எடுத்த முயற்சியும் கைவிடப்பட வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாடு, மக்கள் நெருக்கமாக வாழும் பிரதேசம். இப்பிரதேசத்தில் பல நூற்றாண்டுகளாக சுற்றுச் சூழலை பாதுகாத்து மிகவும் சிக்கலான, செறிவான பயிர் செய்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதனால் இம் மக்களின் வாழ்வாதாரத்தை பறிக்காது மக்கள் சூழலை மேம்படுத்தி வாழும் நிலையை உருவாக்கிக் கொடுங்கள். வடமராட்சி கிழக்கில் மக்கள் நலனுக்கு எதிராகவும் அவர்களின் வாழ்வாதாரங்களை பாதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம்.

# அமைச்சரவையிலிருந்து விலகப் போவதில்லை

## சு.க.அமைச்சர்கள் திட்டவட்டம்

(கொழும்பு)

அமைச்சரவையிலிருந்து விலகப் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நேற்று முன்தினம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது வாக்களித்த போதிலும், அமைச்சரவையிலிருந்து விலகப் போவதில்லை என தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 13 அமைச்சர்கள் இது பற்றி நேற்று முன்தினம் இரவு தீர்மானித்துள்ளனர். அரசாங்கத்தில் தொடர்ந்தும் நீடித்திருக்கப் போவதாக தெரிவித்துள்ளனர்.

எஸ்.பி. திஸாநாயக்க, தயாசிறி ஜெயசேகர, அநுர பிரியதர்சன யாப்பா, ஜோன் செனவிரட்ன, சுசில் பிரேமஜெயந்த, லக்ஷ்மன் யாப்பா, டிலான் பெரேரா, சந்திம வீரக்கொடி, அனுராத ஜெயரட்ன, சுசந்த புஞ்சிநிலமே, சுதர்சனி பெர்னாண்டோபுள்ளே, சுமேதா ஜயசேன மற்றும் தாரானாத் பஸ்நாயக்க ஆகிய அமைச்சர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிட்டிருந்தனர்.

நல்லாட்சி அரசாங்கம் ஜனாதிபதி மைத்திரிபாலவினது எனவும் ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் அமைச்சராக நீடிப்பதில் பிரச்சினை கிடையாது என எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மான வாக்கெடுப்பின் போது வாக்களிப்பதற்கு சகல உரிமையும் உண்டு எனவும், ஜனாதிபதி கூறும் வரையில் அமைச்சுப் பதவியில் நீடிக்க முடியும் எனவும் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் பிளவுகளினால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது என அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் தொடர்ந்தும் நீடிப்பதில் சிக்கல் எதுவும் கிடையாது எனவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-7)




# 100 வயதைத் தாண்டிய வயோதிபர்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு

(கொழும்பு)

100 வயதைத் தாண்டிய வயோதிபர்களுக்கு 5000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது. 100 வயதைத் தாண்டிய வயோதிபர்களுக்கு மாதாந்தம் தலா 5000 ரூபாவினை கொடுப்பனவாக வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

தற்போதைக்கு இலங்கையில் 100 வயதைத் தாண்டிய 350 வயோதிபர்கள் இருக்கின்றார்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த வயோதிபர்களின் வாழ்க்கையை பாதுகாப்பானதாக மாற்றுவதற்கும், உடல் நலனைப் பேணி உறுதி செய்வதற்கும் இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (இ-7)

# இலங்கை உட்பட 3 நாடுகளுக்கு இந்தியா 4,312 கோடி ரூபா கடன்

(கொழும்பு)

இலங்கை, நேபாளம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு 4,312 கோடி ரூபா இந்தியா கடன் அளித்திருப்பதாக வெளியுறவுத் துறை இணையமைச்சர் வி.கே. சிங் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மக்களவையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு வி.கே. சிங் எழுத்துபூர்வமாக தாக்கல் செய்திருக்கும் பதிலில் கூறப்பட்டிருப்பதாவது.

2014-18ஆம் ஆண்டு காலகட்டத்தில், இலங்கை, நேபாளம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இந்தியா ரூ.4,312 கோடி கடன் அளித்துள்ளது. ஆப்கானிஸ் தானுக்கு ரூ. 2,088.19 கோடியை இந்தியா அளித்துள்ளது.

நேபாளத்துக்கு ரூ.1,199.9 கோடியும், இலங்கைக்கு ரூ.1,025.12 கோடியும் இந்தியா கடனாக வழங்கியுள்ளது.

இலங்கை, நேபாளம், ஆப்கானிஸ்தான் போன்று பல்வேறு நாடுகளில் நடைபெறும் மறுகட்டமைப்பு பணிகளில் இந்தியா முக்கிய பங்காற்றி வருகிறது.

இருதரப்பு நல்லுறவை ஊக்குவிக்கவும், இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தவும், இந்த நாடுகளில் நடக்கும் மறுகட்டமைப்பு பணிகளுக்கு இந்தியா உதவி செய்து வருகிறது.

நேபாளத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டில் நேரிட்ட பூகம்பத்தில் அந்நாட்டில் இருந்த பல வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் சேதமடைந்தன. அதில் கோயில்கள், நினைவுச் சின்னங்களும் அடங்கும்.

அந்த பூகம்பத்தில் நேபாள மக்கள் 9 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அப்போது நேபாளத்துக்கு விரைந்து உதவி செய்த நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட இலங்கையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் இந்தியா செயற்படுத்தி வருகிறது என்று அந்தப் பதிலில் வி.கே. சிங் தெரிவித்தார். (இ-7)

# 3 மாத காலத்திற்குள் சமூக வலைத்தளங்கள் குறித்து 720 முறைப்பாடுகள்

(கொழும்பு)

இவ்வருடத்தின் முதல் மூன்று மாத காலப்பகுதிக்குள் சமூக வலைத்தளங்கள் தொடர்பில் 720 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை கணனி அவசர நடவடிக்கை குழு தெரிவித்துள்ளது.

குறித்த முறைப்பாடுகளில் அதிகமானவை பேஸ்புக் தொடர்பிலேயே பதியப்பட்டுள்ளதாக அவ்வமைப்பின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

குறித்த முறைப்பாடுகளில் நூற்றுக்கு 75வீதமானவை போலிக்கணக்குகள் தொடர்பிலானவை என இலங்கை கணனி அவசர நடவடிக்கை குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை டுவிட்டர், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் தொடர்பிலும் கடந்த மூன்று மாத காலப்பகுதிக்குள் இலங்கை கணனி அவசர நடவடிக்கை குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் தற்பொழுது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை கணனி அவசர நடவடிக்கைக் குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசியலில் மீண்டும் உயிர் பெற்ற ரணில்

(கொழும்பு)

இலங்கை அரசியலில் அதிகம் பேசப்பட்ட விடயமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மாறியிருந்தார்.

கடந்த சில வாரங்களாக அனைத்து ஊடகங்களில் ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான செய்திகளே முக்கியத்துவம் பெற்றிருந்தன.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை 46 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட வாக்கெடுப்பின் பின்னரே இவ்வாறு நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

இருப்பினும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தவர்கள், வாக்களிப்பதனை புறக்கணித்தவர்கள் என அனைவருக்கும் தனது பேஸ்புக் ஊடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்துள்ளார்.

அவரது பேஸ்புக் பதிவில், "கஷ்டமான காலங்களில்



எனக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் நன்றி.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்த உறுப்பினர்கள் மற்றும் வாக்களிப்பதனை புறக்கணித்த உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

2015ஆம் ஆண்டு நாம் பெற்றுக் கொண்ட வெற்றியை தொடர்ந்து நடத்தி செல்வதற்காக நமது நாட்டின் மத மற்றும் இன சமூகங்களுடன் இணைவது மகிழ்ச்சியான விடயமாகும்.

அவதூறு, தவறான பிரச்சாரம் மற்றும் மூட நம்பிக்கைகளை பரப்பி கொண்டிருந்த தரப்பினரை தோல்வியடைய செய்வதற்கு, பல்வேறு மத சடங்குகள் செய்த அனைவருக்கு மற்றும் கடந்த காலங்களில் ஆதரவு வழங்கி ஆசி வழங்கி வாழ்த்து தெரிவித்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

எங்கள் வெற்றியை சமாதானம், ஒற்றுமை, அபிவிருத்தி மற்றும் நீதியை உறுதி செய்யும் வேலைத்திட்டத்தை மேலும் வலுவாக முன்நோக்கி கொண்டு செல்வதற்காக பயன்படுத்த வேண்டும்" என பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். பதவியில் இருந்து விலகிச் செல்ல வேண்டும் எனவும் கோரியிருந்தனர்.

வாக்கெடுப்பில் ரணில் தோல்வி கண்டிருந்தால், அவரின் அரசியல் வாழ்வுக்கான கடைசி தருணமாக இருந்திருக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

# பழிவாங்கும் அரசியலுக்கு இ.தொ.கா. துணைபோகாது

## ஆறுமுகன் தொண்டமான் விளக்கம்

(கொழும்பு)

பழிவாங்கும் அரசியலுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் துணை போகாது. இதற்காகவே நாங்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கூட்டு எதிரணியினரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதமும், வாக்கெடுப்பும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த விவாதத்திலும் வாக்கெடுப்பிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை.

இதையடுத்து, கொட்டகலையில் நேற்றுக்காலை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்த ஆறுமுகன் தொண்டமானிடம் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த ஆறுமுகன் தொண்டமான்,

"இதேபோன்று ஏற்கனவே அமைச்சர் ரவி கருணாநாயக்க மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போதும்




இந்த நிலைப்பாட்டைத்தான் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடைப்பிடித்தது.

இது மக்களின் தீர்ப்பு. எனவே மக்களின் தீர்ப்பே இறுதியானது. இது தொடர்பாக நாங்கள் சொல்வதற்கு என்ன இருக்கு" எனவும் தெரிவித்தார். (இ-7)




# அம்மா சொல் கேள்!



செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக் கொண்டு வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி, புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான்.

புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகே, ஓர் ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப் பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது.

வேலிக்குள் முகத்தை நுழைத்துக்கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஓர் ஆட்டுக்குட்டி, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டது.

ஓநாயும் 'நண்பா, நண்பா! இங்கே இளசான புல் கிடைக்குமா என்று பார்க்கிறேன்! இளம்புல் என்றால் எனக்கு ரொம்பப் பிரியம். அதைத் தின்று, ஜில்லென்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது! எனக்கு அது கிடைக்கவில்லை!.." என்று வருத்தத்துடன் கூறியது.

"அப்படியா! நீ புல்லா சாப்பிடுவாய்? நீ மாமிசத் தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி.

"சேச்சே! அதெலாம் சுத்தப் பொய்!" என்றது ஓநாய்.

"அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டு பேரும் போய், அதைச் சாப்பிட்டுவிட்டு, ஃப்ரெண்ட்ஸாக ஜாலியாகச் சுற்றலாம்!" என்று சொல்லிவிட்டு ஆட்டுக் குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து, ஓநாயின் பக்கம் போயிற்று.

"உடனே ஓநாய் அதன் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

அந்த ஆட்டுக் குட்டிக்குத் தானாகத் தெரியவில்லை. அது போகட்டும், பரவாயில்லை! அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால், மதிப்பு வாய்ந்த, தன் உயிரை இழந்திருக்காது அல்லவா?

## 04.2018 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1782- தாய்லாந்து மன்னன் டாக்சின் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டான். முதலாம் ராமா மன்னனாக முடி சூடினான்.
- 1814-நெப்போலியன் பொனபார்ட் பதவியில் இருந்து அகற்றப்பட்டு எல்பா தீவுக்கு நாடு கடத்தப்பட்டான்.
- 1896-1,500 ஆண்டுகளாக ரோம் பேரரசர் முதலாம் தியோடோசியசினால் தடை செய்யப்பட்டிருந்த ஒலிம்பிக் போட்டிகள் முதற்தடவையாக கிரேக்கத்தின் ஏதன்ஸ் நகரில் ஆரம்பமாயின.
- 1917- முதலாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- 1919- மகாத்மா காந்தி பொது வேலை நிறுத்தத்தை அறிவித்தார்.
- 1936-ஐக்கிய அமெரிக்கா, ஜோர்ஜியாவில் சுழற் காற்று தாக்கியதில் 203 பேர் கொல்லப் பட்டனர்.
- 1965-"ஏளி பேட்" (Early Bird) என்ற தொடர் பாடற் செய்மதி விண்ணில் ஏவப்பட்டது.
- 1994-ருவாண்டா மற்றும் புருண்டி அதிபர்கள் பயணம் செய்த விமானம் சுட்டு வீழ்த் தப்பட்டதைத் தொடர்ந்து ருவாண்டாவில் இனப்படுகொலைகள் ஆரம்பமானது.
- 1998-இந்தியாவைத் தாக்கக்கூடியதான நடுத்தர ஏவுகணைகளை பாகிஸ்தான் சோதித்தது.
- 2005-குர்தியத் தலைவர் ஜலால் தலபானி ஈராக் அதிபரானார்.

### பிறப்புகள்

- 1483-ராபியேல் சான்சியோ, இத்தாலிய ஓவியர், கட்டிடக் கலைஞர் (இ. 1520)
- 1815-மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தமிழகத் தமிழறிஞர் (இ. 1876)
- 1901-பியர் ஜார்ஜியோ ஃபிராசாதி, இத்தாலிய செயற்பாட்டாளர் (இ. 1925)
- 1909-ராம. அழகப்பச் செட்டியார், தமிழகத் தொழிலதிபர், வள்ளல் (இ. 1957)
- 1931-சுசித்ரா சென், வங்காளத் திரைப்பட நடிகை (இ. 2014)
- 1933-பி. கே. நாயர், இந்தியத் திரைப்பட வரலாற்றாளர் (இ. 2016)
- 1936-டி. எம். ஜயரத்ன, இலங்கை அரசியல் வாதி
- 1938-கோ. நம்மாழ்வார், தமிழக இயற்கை ஆர்வலர் (இ. 2013)
- 1950-கருப்பையா வேலாயுதம், இலங்கை மலையக அரசியல்வாதி (இ. 2015)
- 1973-பிரசாந்த், தமிழ்த் திரைப்பட நடிகர்

### இறப்புகள்

- 1199-இங்கிலாந்தின் முதலாம் ரிச்சார்ட் (பி. 1157)
- 1520-ராபியேல் சான்சியோ, இத்தாலிய ஓவியர், கட்டிடக் கலைஞர் (பி. 1483)
- 1829-நீல்சு என்றிக்கு ஏபெல், நோர்வே கணிதவியலாளர் (பி. 1802)
- 1961-ஜுல்ஸ் போர்டெட், நோபல் பரிசு பெற்ற பெல்ஜிய மருத்துவர் (பி. 1870)
- 1974-விஷ்ணு இராமகிருஷ்ண கார்க்கரே, இந்துத்துவவாதி (பி. 1910)
- 1984-சா. பஞ்சு, தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் (பி. 1915)
- 1992-இல. செ. கந்தசாமி, தமிழகத் தமிழறிஞர், இதழாளர் (பி. 1939)
- 1992-ஐசாக் அசிமோவ், அமெரிக்க அறிபுனை எழுத்தாளர் (பி. 1920)
- 2001-தேவிலால், இந்திய அரசியல்வாதி (பி. 1914)
- 2008-ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, இலங்கை அரசியல்வாதி (பி. 1953)
- 2011-கல்பகம் சுவாமிநாதன், தமிழக வீணை இசைக்கலைஞர், கல்வியாளர் (பி. 1922)
- 2011-சுஜாதா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி. 1952)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 40 | 45 | 40 | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 75 | 90 | 80 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 50 | 40 | 50 | 60 | 40 |
| தக்காளி | 20 | 30 | 15 | 20 | 30 | 40 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 25 | 40 | 40 | 40 | 30 |
| கோவா | 30 | 30 | 30 | 30 | 40 | 60 | 30 |
| கரட் | 80 | 80 | 80 | 80 | 100 | 160 | 80 |
| பூசணி | 30 | 30 | 25 | 50 | 30 | 40 | 30 |
| புடோல் | 60 | 60 | 20 | 60 | 50 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 30 | 25 | 50 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 130 | 160 | 110 | 120 | 150 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 70 | 50 | 55 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 140 | 80 | 120 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 40 | 60 | 50 | 80 | 60 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 40 | 50 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 50 | 50 | 40 | 30 | 30 | 60 | 90 |
| லீக்ஸ் | 140 | 160 | 110 | 120 | 180 | 200 | 120 |
| பீற்றூட் | 20 | 30 | 20 | 30 | 30 | 60 | 30 |
| கறிமிளகாய் | 40 | 60 | 35 | 50 | 60 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 180 | 200 | 250 | 200 | 220 |
| போஞ்சி | 80 | 160 | 40 | 80 | 100 | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | – | 30 | – | 60 | 35 |
| கீரை – 1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 30 | 50 |
| தேசிக்காய் | 160 | 140 | 150 | 200 | 150 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 30-90 | 90 | 75 | 75 | 90 |
| இராசவள்ளி | 150 | 160 | 120 | – | 200 | 160 | 160 |
| வெங்காயப்பூ | 100 | – | – | – | 100 | 160 | – |
| முள்ளங்கி | 40 | – | 25 | 40 | 60 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 40 | – | 10 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 15 | – | 10 | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | – | – | – | 60 | – | 80 | – |

அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு என்ன நேரிடுகிறது என்பதல்ல. அதைக் கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதுதான். ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk

# ரணிலை ஆதரித்ததன் பிரதி உபகாரம் என்ன?

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை படுதோல்வியடைந்துள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தவர்கள் எப்படியும் ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்தலாம் என நம்பியிருந்தனர். ஆனால் அந்த நம்பிக்கை தவிடுபொடியாகிற்று.

இனி நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற பேச்சுக்கு இடமில்லை என்பது மட்டும் உறுதி.

இவை ஒருபுறம் இருக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வகிபங்கு முக்கியமானது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்ட வாக்கு வித்தியாசத்துடன் ஒப்பிடும் போது கூட்டமைப்பின் ஆதரவு இல்லாமலே ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றிருக்க முடியும் என்று யாரேனும் வாதிடலாம்.

ஆனால் தனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்கு பக்கபலமாக இருக்கும் என்ற நம்பிக்கைதான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு மூல காரணம் எனலாம்.

சிலவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தோற்கடிக்கப் போகிறார் என்ற அடிப்படையிலும் ரணிலை எதிர்த்தவர்கள் கடைசி நேரத்தில் தங்கள் முடிவை மாற்றிக்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்திருக்கலாம்.

எனவே பிரதமர் ரணிலுக்கான கூட்டமைப்பின் ஆதரவை எவரும் விலத்திப் பார்க்க முடியாது.

ஆக, இப்போது நல்லாட்சியின் ஜனாதிபதியும் பிரதமரும் தமிழ் மக்களின் ஆதரவுடன் அந்தப் பதவிகளை அலங்கரிக்கின்றனர் என்பது நிறுதிட்டமான உண்மை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தமிழ் மக்கள் ஆதரித்து வாக்களித்தனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்து அவரைக் காப்பாற்றியுள்ளனர்.

ஆகவே ஜனாதிபதியும் பிரதமரும் தமிழ் மக்களின் ஆதரவால் தத்தம் பதவிகளில் இருக்கின்றனர் எனும்போது,

அவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்யப்போகும் பிரதியுபகாரம் என்ன? என்பதுதான் இங்கு எழுகின்ற கேள்வியாகும்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்கள் செய்த நன்றியை மறக்கமாட்டேன் என்று கூறியிருந்தார்.

அப்படியானால் ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதை, காணாமல்போனவர்களின் உறவுகளை ஆற்றுப்படுத்துவதை, இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் காணிகளை விடுவிப்பதை உடனடியாகச் செய்வார்களா? அதைச் செய்வதை கூட்டமைப்பு வலியுறுத்துமா? என்பதுதான் தமிழ் மக்களின் கேள்வி.

# வவுனியாவில் சிறுமி துஷ்பிரயோகம் ஆசிரியருக்கு 20 வருட கடூழிய சிறை

## வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

வவுனியா, நெடுங்கேணி பிரதேசத்தில் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த 39 வயதுடைய ஆசிரியர் ஒருவருக்கு 20 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

வவுனியா நெடுங்கேணியில் பாட்டியின் பராமரிப்பில் வசித்து வந்த சிறுமி 2014ம் ஆண்டளவில் சாதாரண தர பரீட்சைக்காக தனக்கு அறிமுகமான ஆசிரியர் ஒருவரிடம் கணித பாட வினாத்தாள்களை வாங்கித்தர முடியுமா என கேட்டுள்ளார்.

அதற்கு குறித்த ஆசிரியர வாங்கித் தருவதாக இரண்டு தடவை ஏமாற்றியுள்ளார். மூன்றாவது தடவையும் குறித்த சிறுமி ஆசிரியரின் வீட்டுக்கு சென்று வினாத்தாள்களை கேட்டபோது வாங்கி வரவில்லை என கூறியதோடு தனது காணியில் வேலை செய்பவர்களுக்கு தேநீர் ஊற்றிக் கொடுக்குமாறு கூறியுள்ளார்.

சிறுமியும் தேநீர் ஊற்றுவதற்காக வீட்டிற்குள் சென்ற சந்தர்ப்பத்தில் எதிரியாக இனங்காணப்பட்ட ஆசிரியர் குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு குறித்த எதிரியை கைது செய்து வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

இதன் பிரகாரம் கடந்த 2017ஆம் ஆண்டு 07ஆம் மாதம் 18ஆம் திகதியன்று சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப்பகர்வு பத்திரம் வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கின் விளக்கம் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டு 04.04.2018ஆம் திகதி தீர்ப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்தது.

வழக்கினை விளங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி எதிரியை குற்றவாளியாக கண்டதுடன் இருபது வருட கால கடூழிய சிறைத்தண்டனை விதித்ததுடன் அபராதமாக ஒரு இலட்சம் ரூபாயும் அதனை செலுத்தத் தவறின் ஆறு மாத கால சாதாரண சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு நஷ்டஈட்டு பணமாக ரூபாய் ஐந்து இலட்சம் செலுத்தப்பட வேண்டும் எனவும் குறித்த நஷ்டஈட்டு பணத்தை செலுத்த தவறின் ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (ம-281)

# கிணற்றிலிருந்து யுவதி சடலமாக மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கருவேலன்கண்டல் பகுதியில் இளம் யுவதி ஒருவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

கருவேலன்கண்டல் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீட்டில் உணவு அருந்திவிட்டு நாய்களை கட்டுவதற்குச் சென்ற யுவதியை காணாத நிலையில் அருகில் உள்ள இடங்களில் தேடிப் பார்த்தும் காணாத நிலையில கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ள நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நவரத்தினம் பிரியங்கா (வயது-23)என்ற யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.


ஒட்டுசுட்டான் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த சடலத்தை மீட்டு மாவட்ட வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சடலம் மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற கொண்டுவருகின்றனர் (2-281)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், பலாலி, சுழிபுரம், பத்தனை, கள்ள வேம்படி, காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன் துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப் படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஒய்வுகால விடுதி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில கரைசலிலிருந்து தலைமன்னார் வரை, கட்டையடம்பன், மளவராயர்கட்டையடம்பன், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ்தொழிற்சாலை, பேசாலைஐஸ்தொழிற்சாலை, தலை மன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம் Palmayrah House ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அறிவு

தடைகள, விருப்பு- வெறுப்புகள, ஏற்றுகொள்ளல, ஏற்றுக்கொள்ளாமை இவற்றிற்கு புகலிடம் தருகிறது அறிவு. உள்ளுணர்விற்குக் காரணமான புத்திசாலித்தனத்திற்குக்கூட புகலிடம் அறிவு.

கேள்வி: உள்ளுணர்வு அறிவிற்கு அப்பாற்பட்டதா?

ஸ்ரீஸ்ரீ: ஆம், ஆனால் அது அறிவின் மூலம் பிரகாசிக்கிறது.

கேள்வி: மன உணர்ச்சிகளும் அறிவும் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையவையா?

ஸ்ரீஸ்ரீ: அவை முரண்பாடுடையவயாக இருக்க முடியும்.

கேள்வி: அப்படி முரண்பாடானவை என்றால் இரண்டில் எது சிறந்தது?

ஸ்ரீஸ்ரீ: முரண்பாடு எனும் போது இதைவிட சிறந்தது எனும் முரண்பாடு இல்லை.

தூய்மையான அறிவானது மனதின் உணர்ச்சிக் கொந்தளிப்பில் சிக்கிக் கொள்வதில்லை. தூய்மையான அறிவு முரண்பாடுகளைக் கடந்து எழுகிறது.

சாதாரணமாக உணர்ச்சிகள் அறிவிற்கு வண்ணம் கொடுக்கின்றன. அதனால் அறிவு சேற்று நீர் போலாகிறது. தூய்மையை இழக்கிறது. அப்போது அறிவு ஆன்மாவை பிரதிபலிக்க முடிவதில்லை. தூய்மையான அறிவு அசைவற்றது. தெளிவானது. அமைதியானது. அது ஆன்மாவைப் பிரதிபலிக்கிறது.

கேளவி: காமாவினால அறிவு பாதிக்கபபடுகிறதா?

ஸ்ரீஸ்ரீ: கர்மாவினால் தூய அறிவு புண்படுத்தப்படுவதிலலை. எலலாவறறிலிருநதும விடுபடடிருககும தன்மை அறிவினைத் தூய்மையாக்குகிறது. அறிவு சமஸ்கிருதத்தில் புத்தி எனப்படுகிறது. யார் விடுதலை அடைகிறாரோ அவரே புத்தா.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சிவபெருமானின் எளிய தோற்றத்தில் புதைந்துள்ள வாழ்வியல் கருத்துக்கள்

இந்துக்களின் முழு முதற்கடவுளாக போற்றப்படுபவர் சிவபெருமான். இவர் பார்ப்பதற்கு உடல் முழுவது சாம்பலை தரித்தும் புலியாடை போர்த்தியும் கையில் திரிசூலத்துடன் கமண்டலத்துடன் எளிய தோற்றத்தில் நமக்கு காட்சிதருபவர்.

சிவன கடவுளகளுககு எலலாம கடவுளாகவும மிகவும் உடல்திறன் அதிகமாகவும், திடகாத்திரமாகவும் காட்சியளிக்கும் கடவுளாக திகழ்வார்.


இவரின் இந்த எளிமை தோற்றத்திலிருந்து மக்களாகிய நாம கறறுக கொளள வேணடிய நலல பணபு நலன்கள் மற்றும் வாழ்வியல் கருத்துகள் குறித்து நாமும் தெரிந்துக்கொள்ளலாம்.

#### ஜடாமுடி

சிவபெருமானின நேரககொணடு உயரநது காணும ஜடாமுடியின் மூலம், ஒருமுகமாக இருக்கும் உடல், மனம் மற்றும் ஆதமா உஙகளது உடல்நிலையையும், மனநிலையும அதிகரிகக செயயும மறறும உஙகளை அமைதியான நிலையில் ஆட்கொள்ள உதவும். உங்கள் செயல்களில் ஒருமுகத்தோடு செயறபட பயன்தரும்.

#### நெற்றிக்கண்

சிவபெருமானின் நெற்றிக்கண் நமக்கு கூறுவது என்னவெனில், நமக்கு பின்னால் இருக்கும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு அதை தகர்த் தெறிந்து, முடியாது என்பனவற்றையும் முடித்துக் காட்ட வேண்டும் என்பதே ஆகும். (தொடரும்)



## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### நன்றிக் கடன் செலுத்துங்கள்

✦ குடும்பத்தினரைக் காப்பாற்ற பிச்சை எடுக்காமல் உழைத்துப் பொருள் சம்பாதிப்பவர் ஒளிப்பிரகாசம் நிறைந்த முகத்துடன் மறுமையில் அல்லாஹ்வை சநதிபபார.

✦ எவரேனும் ஒருவர் சத்தியம் செய்தால் அல்லாஹ்வின மது சததியம செயயடடும அலலது மவுனமாக இருககடடும.

✦ பாவங்களைச் செய்வதற்கு தூண்டுகோலாக இருப்பது பேராசையே. பேராசையும் அல்லாஹ்வின் நேசமும் ஒரே நெஞ்சத்தில் ஒன்று சேர்வதில்லை.

✦ உங்களுக்கு உணவு கொடுத்தவருக்கு நல்லருளும் அபிவிருத்தியும் உண்டாவதற்கு துஆ செய்யுங்கள். அதுவே உணவு அளித்தவருக்கு நீங்கள் செய்யும் நன்றிக் கடன்.

✦ பெற்றோர் தனக்கு அநியாயம் செய்தாலும் அவர்களிடம் பிள்ளைகள் அன்பைச் செலுத்துவது கட்டாயக் கடமை.

✦ ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர். ஒருவர் மீது ஒருவர் துவேசம் கொள்ளாதீர்.

# கஜேந்திரன் - கஜநாதன் சிறப்பாட்டம் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றி



கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த மாதம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதன் அடிப்படையில் அண்மையில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணிக்கும் சமரபாகு நியூட்டன் அணிக்கும் இடையில் பலப்பரீட்சை நடைபெற்றது.

சம பலத்தைக் கொண்ட இரு அணிகளில் வெல்லப் போவது யார் என்ற ரசிகர்களின் எதிர்பார்ப்புடன் நடைபெற்ற போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி 03:00 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று அசத்தியது.

ஆரம்பம் முதல் உத்வேகத்துடன் விளையாடிய குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி வீரர்கள் கோல்கள் போடுவதில் சமரபாகு நியூட்டன் அணி வீரர்களின் கோல் அளவைத் தகர்ப்பதி லும் குறிப்பாக செயற்பட் டதை அவதானிக்க முடிந்தது.

வெற்றிக்கான மூன்று கோல்களையும் கஜேந்திரன் இரண்டு, கஜநாதன் 1 என தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

இவ் வெற்றியின் மூலம் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி அடுத்த சுற்றில் விளையாடும் வாய்ப்பைத் தக்க வைத்துக் கொண்டது. (கு)

# கொலின் விளையாட்டுக் கழக உதைபந்தாட்டம் கரணவாய் மத்தி-ஞானமுருகன் அணிகள் வெற்றி



கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாவட்ட ரீதியிலான King Jaffna 2018 மாபெரும் உதைபந்தாட்டத் தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம் மோதியது. மிகவும் உற்சாகமாக நடைபெற்ற போட்டியில் 3:1 என்ற கோல் கணக்கில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

வெற்றி பெற்ற அணி சார்பில் நிமலன், நிசாளன், தர்சன் ஆகியோர் தமது அணிக்காக தலா ஒவ்வொரு கோலினைப் பெற்றுக் கொடுத்தனர். மகாத்மா அணி சார்பில் தனுசன் ஒரு கோலினை பெற்றுக் கொடுத்தார்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகத்தின் நட்சத்திர வீரர் நிசாளன் தெரிவு செய்யப்பட்டார்.

இவ் வெற்றியின் மூலம் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம் அடுத்த சுற்றில் விளையாடும் வாய்ப்பை உறுதிப்படுத்தியது.

நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ஞான முருகன் அணியினை எதிர்த்து சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் 1:0 என்ற கோல்கணக்கில் ஞான முருகன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

வெற்றிக்கான கோலினை ஞானமுருகன் அணியின் திறமையான வீரர் மதன்ராஜ் போட்டதனூடாக அந்த ஆட்டத்தின் ஆட்டநாயகன் விருதையும் தட்டிச் சென்றார்.

இந்த வெற்றியின் மூலம் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி அடுத்த சுற்றில் விளையாடும் வாய்ப்பைத் தக்க வைத்துக் கொண்டது. (கு)

# கிண்ணம் வெல்வதே என் இலக்கு

## விரட்டும் விராட்



11ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி நாளை மறுதினம் 7ஆம் திகதி தொடங்குகிறது. இதில் பங்கேற்கும் விராட் கோலி தலைமையிலான பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் அணி தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது.

அந்த அணி இதுவரை மூன்று முறை (2009, 2011, 2016) இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது. ஆனால் 3 முறையும் தோல்வியையே சந்தித்தது. இந்த முறை கோப்பையை வெல்ல வேண்டும் என்று வேட்கையுடன் இருக்கிறது. இதுகுறித்து விராட் கோலி கூறுகையில்,

பெங்களூர் அணியின் 10 ஆண்டுகளாக விளையாடி வருகிறேன். 3 முறை இறுதிப்போட்டிக்குள் நுழைந்தும் கோப்பையை வெல்லவில்லை. பெங்களூர் ரசிகர்களைவிட கோப்பையை வெல்ல வேண்டும் என்ற வேட்கையுடன் இருக்கிறேன். 100 சதவீதம் எனது பங்களிப்பை அளிப்பேன் என்று உறுதியாகக் கூறுகிறேன்.

கடந்த காலங்களில் பெங்களூர் அணியின் துடுப்பாட்ட வரிசை வலுவாக இருப்பதை பார்த்து வருகிறோம். இந்த முறை ஏலத்தில் பந்துவீச்சிலும் பலம் வாய்ந்த வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். இதனால் கோப்பையை வெல்ல அதிக வாய்ப்பு இருக்கிறது என்ற நம்பிக்கை உள்ளது. (க)

# தடையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய மாட்டேன்-ஸ்மித் தெரிவிப்பு



பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில், தனக்கு விதிக்கப்பட்டுள்ள ஓராண்டுத் தடையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய மாட்டேன் என ஸ்டீவன் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் உலகில் சர்ச்சையை ஏற்படுத்திய, பந்து சேதப்படுத்திய விவகாரம் தொடர்பாக ஸ்டீவன் ஸ்மித், டேவிட் வோர்னர் ஆகியோருக்கு ஓர் ஆண்டும், இளம் வீரர் கேமரூன் பேன்கிராப்ட்டுக்கு 9 மாதங்களும் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் சங்கத் தலைவர் கிரேக் டையர், வீரர்கள் மீது விதிக்கப்பட்ட தண்டனையை குறைக்க வேண்டும் என்றும், உள்ளூர் போட்டிகளில் அவர்களை விரைவில் விளையாட அனுமதிப்பது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், தன் மீதான தடையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய மாட்டேன் என ஸ்டீவன் ஸ்மித் தெரிவித்துள்ளார். மேலும், இதுகுறித்து ஸ்டீவன் ஸ்மித் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறுகையில்,

இந்தச் சம்பவத்தை என்றும் மனதில் வைத்திருப்பேன், என் நாட்டிற்காக மீண்டும் விளையாடுவேன். ஆனால், அணியின் தலைவனாக முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

தடையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய மாட்டேன். அவை ஒரு அழுத்தமான செய்தியைக் கூற, அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியத்தால் கொடுக்கப்பட்டது. நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்' என தெரிவித்துள்ளார். (க)

# டெஸ்ட் தரவரிசையை வெளியிட்டது ஐ.சி.சி. தொடர்ந்தும் முன்னிலையில் ஸ்டீவ் சிமித்

புதிய டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் முடிந்துள்ள நிலையிலேயே பட்டியல் வெளியாகியுள்ளது.

இதில் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் தண்டனை பெற்ற அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் 929 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

விராட் கோலி இரண்டாமிடத்திலும், ரூட் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

வில்லியம்சன் மற்றும் வோர்னர் நான்கு மற்றும் ஐந்தாவது இடத்தில் உள்ளனர். இலங்கையின் சண்டிமால் பன்னிரெண்டாவது இடத்தில் உள்ளார்.

பந்துவீச்சாளர்கள் பட்டியலில் தென்னாபிரிக்காவின் ரபாடா முதலிடத்திலும், இங்கிலாந்தின் ஆண்டர்சன் இரண்டாமிடத்திலும், தென்னாபிரிக்காவின் பிலண்டர் மூன்றாமிடத்திலும் உள்ளனர்.

இலங்கையின் ரங்கன ஹெரத் ஒன்பதாவது இடத்தில் உள்ளார். (க)

# பாடும்மீன்-ஜெக மீட்பர் இன்று பலப்பரீட்சை

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் பிரிவு II ற்கான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று இரவு ஏழு மணிக்கு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் வலைப்பாடு ஜெகமீட்பர் அணிக்கும் இடையில் துடுப்பாட்ட விளையாட்டரங்க மைதானத்தில் மின்னொளியிலான போட்டியாக நடைபெற இருக்கிறது என நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-106)


**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# மல்யுத்த வீரர் ஜானி வீதி விபத்தில் பலி



பிரபல WWE மல்யுத்த வீரர் ஜானி வாலியண்ட் வீதி விபத்தில் மரணமடைந்துள்ளார்.

ஜானி தனக்கென மிகப் பெரிய ரசிகர்கள் பட்டாளத்தைக் கொண்டிருந்த நிலையில் மல்யுத்த போட்டிகளின் பல்வேறு சம்பியன்ஷிப் பட்டங்களை வென்றுள்ளார். ஜானியின் சகோதரரான ஜிம்மி வாலியண்டும் மல்யுத்த வீரராவார்.

அவருடன் இணைந்து பல மல்யுத்தப் போட்டிகளில் பங்கேற்றுள்ள ஜானி இரண்டு முறை tag team சம்பியன்ஷிப் பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.

இந்நிலையில் ஜானி அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் லொறி டிரக் மோதி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இது குறித்து WWE செய்தித் தொடர்பாளர் கூறுகையில், ஜானி வாலியண்ட் நேற்றுக் காலை உயிரிழந்துவிட்டார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம் என தெரிவித்துள்ளார்.

ஜானியின் மறைவுக்கு சக மல்யுத்த வீரர்கள் சமூக வலைத்தளங்களில் தங்கள் இரங்கலை தெரிவித்துள்ளார்கள். (க)

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு...

களையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ 6 உறுப்பினர்களையும் ஈ.பி.டி.பி 4 உறுப்பினர்களையும் சிறிலங்கா சுதந்திர கட்சி 3 உறுப்பினர்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 2 உறுப்பினர்களையும் தமிழர் விடுதலை கூட்டணி 2 உறுப்பினர்களையும் சுயேட்சைக் குழு 1 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

தவிசாளரை தெரிவு செய்வதற்கான முதலாவது அமர்வு, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் க.வாமதேவன் பிரேரிக்கப்பட்டதுடன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் க.சதீஸ்வரன் தவிசாளர் வேட்பாளராக பிரேரிக்கப்பட்டார்.

பகிரங்கமாக இடம்பெற்ற தவிசாளருக்கான வாக்கெடுப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பினால் பிரேரிக்கப்பட்ட க.வாமதேவன் 23 வாக்குகளை பெற்று தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அவரை எதிர்த்து போட்டியிட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் 6 வாக்குகளை பெற்றார். இதைத் தொடர்ந்து இடம்பெற்ற உப தவிசாளர் தெரிவின்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செ.மயூரன் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வசமாகியுள்ளது. பச்சிலைப் பள்ளி பிரதேச சபை மண்டபத்தில் வட மாகாண உள்ளூராட்சி சபை ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் முதலாவது சபை அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் தவிசாளர் தெரிவு இடம்பெற்றது.சிறிலங்கா சுதந்திர கட்சி, ஈ.பி.டி.பி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சி உறுப்பினர்களும் தவிசாளர் தெரிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காத காரணத்தால்,

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட சுப்பிரமணியம் சுரேன் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதனை தொடர்ந்து உப தவிசாளர் தெரிவிலும் போட்டியின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட முத்துகுமார் கஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-4,312)

## இராணுவ வசமுள்ள...

குடி யேற்ற அமைச்சின் செயலாளர் கலாநிதி பொன்னையா சுரேஸ் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் தெல்லிப்பழை வறுத்தலைவிளான் பகுதியில் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

வலி.வடக்கில் இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்களின் காணியில் விடுவிக்கப்படவிருந்த 650 ஏக்கர் காணி நிலப்பரப்பு எதிர்வரும் 16ஆம் திகதி விடுவிக்கப்படவுள்ளது.

அத்துடன் பொன்னாலை பருத்தித்துறை வீதி பொதுமக்களின் பாவனைக்காக எதிர் வரும் வரும் 16ஆம் திகதியிலிருந்து காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை திறந்து விடப்படவுள்ளதாக இராணுவத்தினர் உறுதியளித்துள்ளனர். இந்த வருடம் அண்ணளவாக ஆயிரம் ஏக்கர் பொதுமக்களின் காணி விடுவிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (ம-4,9)

## மணலாற்றில் சிங்கள...

அபிவிருத்தி அதிகார சபை பயன்படுத்தப்பட்டு வருகின்றது என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் துரைராசா ரவிகரன் புள்ளிவிபரங்களுடன் அதிர்ச்சி தரும் தகவலொன்றை முன்வைத்துள்ளார்.

இந்த திட்டமிடப்பட்ட குடியேற்றம் 1978 இருந்து படிமுறை ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வந்து தற்போது முல்லைத்தீவு மாவட்டமே சிங்கள மாவட்டமாகும் நிலைக்கு ஆபத்தை எட்டியுள்ளது எனவும் அவர் எச்சரித்துள்ளார். தமிழர் நிலமான மணலாறு தற்போது வெலிஓயா ஆகிவிட்டது. இனி மாயாபுர மகாவலி எல் வலயம் என இந்த அபகரிப்புக்கள் நீண்டு செல்லுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்று வருகின்ற திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வொன்று நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் 1978 இல் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அதன் பின்னர் இந்த பிரதேசம் மகாவலி எல் வலயமாக அறிவிக்கப்பட்டு சிங்கள குடியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பின்னர் 1984 இல் யுத்த நடவடிக்கை ஒன்றுக்காக தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேற்றுமாறு இராணுவம் பகிரங்க அறிவிப்பு விடுத்தது.

எனினும் யுத்த நடவடிக்கைகள் எதுவும் நடைபெறாத நிலையில் தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேற்றி விட்டு அங்கு சிங்களவர்களை குடியேற்றும் நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபட்டது. இதன் பின்னர் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் 2011 இல் தமிழ் மக்கள் மணலாற்று பகுதிக்குள் அனுமதிக்கப்பட்ட போதிலும், அவர்களுடைய காணிகளில், விவசாய காணிகளில் சிங்கள குடியேற்றங்கள் காணப்பட்டன.

கிவுல் ஓயா என்ற திட்டத்தின் கீழ் தமிழ் மக்களுடைய விவசாய காணிகள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டு சிங்கள மக்களால் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த காணிகளுக்குரிய உறுதி பத்திரங்கள் தமிழ்மக்களிடம் தற்போதும் இருக்கின்ற நிலையில் அவை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் தான் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதியன்று மணலாறு பிரதேசம் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது. இந்த வெலிஓயா பிரதேசத்திற்குள் 3336 குடும்பங்களை சேர்ந்த 11189 சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டிருந்த நிலையில் அவை ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளால் நிர்வகிக்கப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு திட்டங்கள் மூலம் முல்லைத்தீவின் பல ஆயிரம் ஏக்கர் காணிகள் சிங்கள குடியேற்றத்துக்கு உட்படுத்தப்படுகின்றன. இதே போன்று கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டு கேணி, நாயாறு ஆகிய இடங்களிலும் காணி அபகரிப்புக்கள் தீவிரமடைந்து வருகின்றன. இவற்றை தடுத்து நிறுத்த அரசுக்கு அழுத்தம் வழங்குவதோடு, ஒருநாள் கவனயீர்ப்பை வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் மேற் கொள்ள வேண்டும் என்றார். (ம-4)

## புதிய அரசியலமை...

வானது நிபந்தனைக்குட்பட்டது என்பதனை சர்வதேச சமூகம் ஞாபகப்படுத்தவேண்டும்

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எடுத்துரைத்தார்.

ஐரோப்பிய நாடாளுமன்ற ஆறு பேர் கொண்ட குழுவினர் நேற்று எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை நாடாளு மன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் குழுவினரை தெளிவுபடுத்திய இரா சம்பந்தன், முன்னைய அரசானது ஜனநாயக பண்புகளிலிருந்து விலகியதன் காரணமாகவே தற்போதைய அரசானது பதவிக்கு வந்துள்ளது. இந்த அரசின் சிந்தனையும் நடவடிக்கைகளும் முன்னைய அரசின் நடவடிக்கைகளோடு ஒப்பிடுகையில் சாதகமாக இருந்தாலும், கருமங்கள் மிக மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன.

புதிய அரசியலமைப்பில் மக்கள் தமது கருமங்களை தாமே முன்னெடுக்கக் கூடிய வகையில், அதிகாரங்கள் பகிரப்படுவதினையும், அத்தகைய அதிகாரங்கள் மத்திய அரசால் மீளப்பெற முடியாத வகையிலும், மத்திய அரசு அந்த அதிகாரங்களில் தலையிட முடியாத வகையிலுமான ஒரு கட்டமைப்பையே எதிர்பார்க்கிறோம்.

சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை மீண்டும் வலியுறுத்திய இரா.சம்பந்தன், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதில் காட்டப்படுகின்ற நீண்ட தேவையற்ற இழுத்தடிப்புக்கள் தொடர்பில் தமது அதிருப்தியை தெரிவித்தார்.

மேலும் நிலைமாற்று கால நீதிபொறி முறைகள், படையினர் வசமுள்ள பொது மக்களின் காணி விடுவிப்பு போன்ற விடயங்களிலும் அரசின் செயற்பாடு மிக மந்த கதியிலேயே இடம்பெறுவதினையும் சுட்டிக்காட்டினார்.

மேலும் சர்வதேச சமூகமானது தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பினை கொண்டுள்ளதனையும் இரா.சம்பந்தன் எடுத்துரைத்தார்.

இரா.சம்பந்தனின் விவேகமான இராஜதந்திர நடைமுறை யதார்த்தமான தலைமைத்துவத்திற்கு நன்றி தெரிவித்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவரின் கருத்துக்களுக்கு தாம் மிக முக்கியத்துவம் கொடுப்பதாகவும், இந்த விடயங்கள் தொடர்பில் தமது சொந்த நாட்டு அரசுடனும் ஐரோப்பிய ஒன்றியத்தில் எடுத்துரைப்பதாகவும் உறுதியளித்தனர் என்றுள்ளது. (ம)

## தென்னிந்திய திரைப்பட...

அவர், வடக்கு மாகாண முதலமைச்சரை இன்று காலை 9.30 மணிக்கு முதலமைச்சரின் இல்லத்தில் சந்திக்கிறார்.

தமிழகத்தில் ஈழச் சிறார்களின் கல்விக்காக தனது சொந்த நிதியில் கட்டியுள்ள பாடசாலையை வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை அழைத்து திறந்து வைக்கவுள்ளார்.

அதற்காக முதலமைச்சரை நேரில் வந்து அழைப்புவிடுக்கவே கருணாஸ் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

முதலமைச்சருடனான சந்திப்பு நிறைவடைந்ததும் கருணாஸ் யாழ்ப்பாண செய்தியாளர்களைச் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கிளிநொச்சியில் நடைபெறும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கும் சென்று அவர்களையும் சந்திக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (ம-4)

## எதிர்வரும் 10ஆம் திகதி...

தென வடமாகாணசபையின் 120வது அமர்வில் நேற்று தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை தடுப்பதற்கான வழிவகைகள் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட அமர்வு நேற்றைய தினம் பேரவை செயலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெற்றிருந்தது. இதன்போது உறுப்பினர் ரவிகரனால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

நேற்றைய அமர்வில் மேற்படி சிங்கள குடியேற்றங்களை தடுப்பதற்கான உறுதியான தீர்மானம் எடுக்கவேண்டும் எனவும், வடமாகாணசபை உறுப்பினர்கள் அனைவரும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சென்று எதிர்ப்பை காட்டவேண்டும் என மாகாண சபை உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தனர்.(ம-4)

## வடக்கில் சிங்கள...

வடக்கு மாகாண சபையின் 120ஆவது அமர்வில், காணிகள் சம்பந்தமான விசேட அமர்வு நேற்று கைதடியில் இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

மகாவலி அதிகாரசபைச் சட்டம் 1979 ஆம் வருடத்தின் 23ஆவது சட்டமாகும். அதன் முக்கிய நோக்கங்கள் உணவு உற்பத்தி, நீர்சக்தி உற்பத்தி, காணியில்லாதவருக்கு காணி வழங்கல் மற்றும் வெள்ளத்தடுப்பு ஆகியனவாகும்.

குறித்த சட்டத்தின் அதிகார வரம்பினுள் இருக்கும் வனங்கள், வனவிலங்குகள், நீர்ப்பாசனம், விவசாய சேவைகள், விவசாயம் போன்றவற்றின் நிர்வாகமும் அவற்றைக் கொண்ட நிலங்களும் மகாவலி அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்குள் வருவன. 1979ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மாகாவலி அதிகார சபைச் சட்டம் எதனையும் கணக்கில் எடுக்காது தான்தோன்றித் தனமாக தனது வேலைகளைச் செய்து கொண்டு போகின்றது.

அரசாங்கத்தால் காணி அபகரிப்பு முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் மிக வேகமாக நடைபெற்று வருகின்றது. கரைதுறைப்பற்றின் காணிகள் யாவும் மகாவலியால் விழுங்கப்பட்டு வருகின்றது. ஏற்கெனவே மணலாறு வெலிஓயா ஆகிவிட்டது. ஒருமித்த எங்களின் நடவடிக்கைகளால் தான் ஓரளவிற்கு இதனைத் தடுத்து நிறுத்தலாம். அண்மையில் அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்த போது மகாவலி அதிகார சபைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தேன். அவர் அதுபற்றி பரிசீலிப்பதாக உத்தரவாதம் அளித்தார். ஆனால் அது அவ்வளவு சுலபமன்று. புதியதொரு சட்டத்தை மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்ட பதின்மூன்றாம் திருத்தச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தயாரித்து ஏற்ற பின்னரே மகாவலி அதிகார சபைச் சட்டத்தில் கை வைக்க முடியும். அதற்கிடையில் முல்லைத் தீவை முற்றிலும் தன்வசம் கொண்டு வந்து விடும் மகாவலி அதிகார சபை. இது தான் யதார்த்தம் என மேலும் தெரிவித்தார்.(ம-9,4)

## வேலணையில் வீடொன்று முற்றாக எரிந்து நாசம்

### வீட்டு உரிமையாளர் படுகாயம்

(வேலணை)

வேலணை அம்பியநகர் 8ஆம் வட்டாரம் பகுதியில் உள்ள வீடொன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இச் சம்பவம் நேற்று மாலை 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன் வீட்டிலிருந்த சுமார் 50 ஆயிரம் ரூபா பணமும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. வீட்டிலிருந்த தம்பி முத்து-காமாட்சி (வயது 70) என்ற மூதாட்டியும் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## பயங்கரவாத தடைச்...

கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற தூதுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வினவப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்குறித்த விடயத்தை தெரிவித்துள்ளனர்.

மேலும் இலங்கை, தொடர்ந்தும் சீர்திருத்த பாதையில் பயணிக்குமெனத் தாம் நம்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ம)

## வெட்கம் இருந்தால்...

அமைச்சுப் பதவியிலிருந்து விலகவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை தேசிய போக்குவரத்து தொடர்பான சட்டங்களைக் கடுமையாக்கும் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான காவிந்த ஜயவர்தன இவ்வாறு தெரிவித்தார். (ம)

## இளைஞர்களை இராணு...

செய்யப்பட்ட இராணுவத்துக்கு எதிரான வழக்கில் பெண் ஒருவர் சாட்சியமளித்தார்.

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டிப் பகுதியில் இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினரின் வழக்கு நேற்று யாழ்ப்பாண நீதிமன்றில் நீதவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் சுருக்கமுறையற்ற விசாரணைக்காக வந்தது. இதன்போது குறித்த பெண் சாட்சியமளித்தார். (ம)

## சூரியன் நேரடியாக...

சூரியன் நேரடியாக உச்சம் கொடுக்கும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இன்று மதியம் 12.12 மணிக்கு அளுத்கம, மீகஹதென்ன, சூரிய கந்த மற்றும் செல்ல கதிர்காமம் போன்ற பிரதேசங்களில் சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சென்றவாகனத்தில்...

செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த குறித்த வாகனத்தை நிறுத்தி சோதனையிட்ட போது நேற்று மதியம் இந்த கேரள கஞ்சா கண்டுபிடிக்க ப்பட்டுள்ளது.

குறித்த கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் வாகனத்திற்கு முன்னால் சிற்றூர்தியில் பயணித்துள்ளதுடன் அவர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான சந்தேகநபரை கைது செய்வதற்காக சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம்-நல்லூர் பிரதேசத்தை வசிப்பிடமாக கொண்டவர்கள் என விசாரணையின் போது தெரியவந்துள்ளது. (ம)

## வரலாறு 2020

**K.சுதன் B.A. (Hons) History (SPL)**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகிறது.
ஆரம்பம் : 07.04.2018

**கற்பிக்கும் இடங்கள் :**

பொருளியற் கல்லூரி – யாழ்ப்பாணம்
பொருளியற் கல்லூரி – சுன்னாகம்
பாரதி நிறுவனம் – சித்தன்கேணி
பிற்ஸ்மன் நிறுவனம் – மானிப்பாய்

✹ ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.

(C-2133)

## பதவி வெற்றிடங்கள்

எதிர்காலத்தை வெற்றி கொள்ள நிரந்தர தொழில்வாய்ப்புகள் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள், கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிட உணவு வசதிகள் உண்டு. அடிப் படைத்தகைமை O/L.

தொடர்புகளுக்கு : 0774083273, 0766781042

(3533)

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



UK – 550*/= Kg
கனடா – 1050*/= Kg

DELIVERY IN 3 - 5 DAYS

தொடர்புகளுக்கு: 0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-1982)

## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ் வீதி சுன்னாகம்.
(இரு இடங்களிலும்)

# A/L 2020

## கலை, வர்த்தகப்பிரிவு

யாழ் மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர் குழுவினால் புதிய பிரிவு ஆரம்பம்
07.04.2018 சனிக்கிழமை

யாழ்.நகரில் - கலை, வர்த்தகப்பிரிவு 8.00 a.m
சுன்னாகத்தில் - கலைப்பிரிவு 7.00 a.m
வர்த்தகம் 2.00 p.m
சகல பாடங்களும் ஆரம்ப அலகில் இருந்து ஆரம்பமாகின்றன.

பொருளியல் - Mr.S.மகேந்திரன், Mr.R.தர்ஷன்.
கணக்கீடு - Mr.B.முகுந்தன்
வணிகக்கல்வி - Mr.S.பிரதீபன்
தமிழ் - Mr.N.சத்தியவேந்தன்.
இந்து நாகரிகம் Mr.P.ஜோதீஸ்வரன், Mr.A.A.மேனன்
அளவையியல் Mr.N.ஜெயசுரேஸ், Mr.S.சயந்தன்.
புவியியல் - Mr.P.S.குமரன்
வரலாறு - Mr.K.சுதன்.
அரசியல் - Mr.S.கோகுலன்.
ஊடகவியல் - Mr.N.கஜிதரன்.
நாடக அரங்கியல் - Mr.S.ஜெயசுதன்.
இந்துசமயம் - Mr.S.மனோஜ்
விவசாயம் - Mr.S.சிவசஜீவன்.
கிறிஸ்தவ நாகரிகம் - Mr.A.J.யுபின்சன்.
மனை.பொருளியல் - Mrs.S.ரஜிதா
சங்கீதம் - Mrs.A.குமுதினி
ஆங்கிலம் - Mr.N.நிசாந்தன்
I.C.T - Mr.T.சுதர்சன்

(C-2135)

Note:- எமது கிளை நிறுவனமான BARATHY சித்தன்கேணியில் இதே திகதியில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

## விசேட கருத்தரங்கு

எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தரம் II இற்கான 2ஆம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு.

**DCM** கல்வி நிலையம் (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகில்) 2018.04.08 (ஞாயிறு பிற்பகல் 2.00 மணி)
வளவாளர் : ஆ.சத்தியமூர்த்தி (077 167 6457)

(3522)

## விபூதி விற்பனைக்கு

கோயில்களில் எடுக்கப்படும் தீச்சட்டிக்குப் போடும் **விபூதியினை** எம்மிடம் மலிவான விலையில் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**சிவாநறுமணப் பூங்கா, இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி :- 021 222 2567**

(C-2130)

## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ் வீதி சுன்னாகம்.
(இரு இடங்களிலும்).

# A/L 2020

## தொழில்நுட்பபிரிவு

● தொழில்நுட்பகல்லூரி பிரபல விரிவுரையாளர்களும் யாழ்.பிரபல கல்லூரி ஆசிரியர்களும் இணைந்து கற்பிக்கின்றனர்.

● பொறியியல்
- Mr.ஜெயக்குமார்
- Mr.காந்தரூபன்

● விஞ்ஞான முறைமைகள்
- Mr.ரவீந்திரன்.
- Mr.செந்தூரன்.

● உயிர்முறைமைகள்
- Mr.நிறோஜன்.
- Mr.அருள்நேசன்.

● ஊடகவியல்
- Mr.N.கஜிதரன்.

● விவசாயம்
- Mr.S.சிவசஜீபன்

● I.C.T
- Mr.T.சுதர்சன்

(C-2135)

● ஏனைய பாடங்கள் பொருளியற் கல்லூரி விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
● புதிய பிரிவு ஆரம்ப அலகில் இருந்து ஆரம்பமாகின்றது.

யாழ் நகரில் - 07.04.2018 சனி 8.00a.m
சுன்னாகத்தில் - 09.04.2018 திங்கள் 4.00 p.m
உங்கள் அனுமதிகளை இரு இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பெரும்பான்மை ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் வேண்டுகோளுக்கமைய

**A/L - புதிய பாடத்திட்டத்திற்கான**

## கணக்கீடு D.Sam

ஆசிரியரின் "நவீன நிதிக் கணக்கீட்டுக் கோட்பாடு" (6ம் பதிப்பு)
நூல் மே - 9 இல் வெளிவருகிறது.

## DMI - Jaffna.

(C-2126)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் தயாளன் ரூபாவதி (சாந்தி)

தோற்றம் 18 ✿ 02 ✿ 1969



மறைவு 07 ✿ 03 ✿ 2018





கடந்த 07.03.2018 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு அமரர் தயாளன் ரூபாவதி (சாந்தி) அவர்களின் மரணச் செய்தி கேட்டு வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் இருந்தும் முகநூல், தொலைபேசி, குறுந்தகவல்கள், மின்னஞ்சல், துண்டுப்பிரசுரம், பதாகை வாயிலாகவும், மலர் வளையம், மலர்மாலையிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வழங்கியோருக்கும், வாகன உதவிகள் வழங்கியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இறுதி அஞ்சலியில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மற்றும் இன்றையதினம் அதிகாலை 5.00 மணியளவில் இன்பர்சிட்டி அந்தியேட்டி மடத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், தொடர்ந்து எமது இல்லத்தில் மு.ப. 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு : தயவு செய்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை
பருத்தித்துறை.
**T.P. No. 077 652 9017**

தகவல் :- கணவர் : இ.தயாளன்
ராஜன் வீடியோ, ராஜன் என்ரபிறைஸ்,
பருத்தித்துறை.

(C-2127)


## வேலைவாய்ப்பு

O/L மற்றும் A/L படித்த இளைஞர், யுவதிகளுக்கான அரிதோர் வாய்ப்பு. யாழ்.நகரில் பிரபல்யமாக இயங்கி வரும் பிரசித்தி பெற்ற எமது கம்பனியானது தனது கிளை நிறுவனங்களை வட மாகாணங்களில் விஸ்தரிப்பதற்காக ஆர்வமுள்ளவர்களை இணைத்துக்கொள்ள முன்வந்துள்ளது. தங்குமிடம், உணவு வசதி, ஒழுங்கு செய்து தரப்படும். சம்பளம் மற்றும் ஊக்குவிப்புத் தொகை 15,000/= தொடக்கம் 40,000/= வரை. உங்கள் திறமைக்கு முன்னுரிமை வழங்கப்படும். கல்வித்தகைமை குறைந்தவர்களும் தொடர்பு கொள்ளவும்.

(3531) தொடர்புகளுக்கு :- 0779858580, 0779395408

## நாளை ஆரம்பம்

**A/L-2K20**
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்

காலை 8.00

**DMI Jaffna**

(C-2112)

# ICT A/L 2018

## Rapid Revision

ஆரம்பம் : 07.04.2018 சனி மாலை 6.00

**Evershine Education Centre**

**#123, Brown Road, Jaffna.**
**S.Gowsigan (B.Tech- Network Tech)**
**077 378 4053**

(3528)

# ICT A/L 2020

ஆரம்பம் இன்று 06.04.2018 வெள்ளிக்கிழமை மாலை 4 மணி

**Evershine Education Centre**

No.123, Brown Road, JAffna.
S.Gowsigan (B.Tech - Network Tech) 077 378 4053

அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன.

(3528)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.